# துவாரகை மன்னன்

அல்லது

# பூபாரந் தீர்த்த புண்ணியன்

மன்னார்குடி ஃபின்லே கலையகத் தமிழாசிரியன்

ஞா. தேவநேயப் பாவாணன்

எழுதியது

M.A., B.T., M.O.L.
சென்னை-20.

து. மாணிக்கம் பிள்ளை

'துவாரகாப்' பதிப்பகம், மன்னார்குடி

1929

— செய்தது] [விலை அணா 6

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS,
MOUNT ROAD : : MADRAS.

# FOREWORD

BY

M.R.Ry. K. SUBRAMANIA PILLAI Avl., M.A., M.L.,

READER IN TAMIL,

ANNAMALAI UNIVERSITY, CHIDAMBARAM.

துவாரகை மன்னனாகிய கண்ணன் வாழ்க்கை வரலாற்றினை ஆசிரியர் தேவநேயப்பாவாணர் செவ்விதிற் சுருக்கி முப்பது சிறு பிரிவுகளாகப் பகுத்து இனிய உரை நடையில் எழுதியுள்ளார். இந்நூலின்கண் பொருத்தமான இடங்களில் எளிய அழகிய பாடல்கள் எடுத்தியம்பப் பெற்றுள்ளன. நமது நாட்டுப் பண்டை வரலாறு கூறும் பெருநூலுட்போந்த நற் சரிதைகளை மாணவர் கற்றற்குரிய உரை நடை நூலுள் அமைத்தல், அவர்க்குச் செந்தமிழ் உரை நடை பயில வழி காட்டி யமைத்தலாவதுடன், பெருங்காப்பியங்களைப் படித்தறிய ஆர்வம் ஊட்டற்கு மேதுவாகும். இது பாடசாலை மாணவர்க்குத் தக்க பாடப் புத்தகமாய் விதித்தற் கேற்றது. இலக்கண இலக்கிய வழுவின்மை இதன் சிறப்புக்களுளொன்று. பிற சிறப்புக்களைக் கற்பார் தாமேயுணர்வர்.

சிதம்பரம்,<br>18-9-29.

இங்ஙனம்,<br>கா. சுப்பிரமணியன்.

# முகவுரை.

தமிழ் நாட்டில் தற்காலத்தில் மாணவர்க்கென்று அநேக வாசக நூல்கள் வழங்கி வருகின்றன. அவற்றுள், நுண்பொருட் பாட (Detailed Study) வாசகங்களெல்லாம் பொன்போற் சிறந்தவை. ஆனால், பருப்பொருட் பாட (Non-Detailed Study) வாசகங்களிற் சிலவோ கட்டுக்கதைகள். அவை காலத்தை வீணுகக் கடத்துமே யன்றி மாணவர்க்குப் பெரிதும் பயன்படா. கதாவாசகங்கள் மாணவர்க்குக் கடவுள் வணக்கம் முன்னோர் வாழ்க்கை முதலியவற்றைக் காட்டல் வேண்டும். அத்தகை வாசகங்களுள் இதிகாச புராணக்கதைகள் ஒருவகை.

இதிகாச புராணக்கதைகள் ஏராளமாய் எழுதப்பட்டிருப்பினும் கண்ணபிரான் காதை முழுவதும் இன்னும் விரிவான முறையில் வெளிவரவில்லை. இதனால் இவ்வுரை நூலை எழுதத் துணிந்தோம். இது இளைஞருக்கென்று எளிய நடையில் எழுதப்பெற்றது. இதில் பாகவதப் பகுதியும் பாரதப் பகுதியும் கலந்துள்ளன. இதுவே இந்நூற்குச் சிறப்பாகும். வேண்டாப் பகுதிகள் விலக்கப்பட்டன.

தமிழாசிரியரும் தலைமையாசிரியருமா யுள்ளோரெல்லாம் இச்சிறு நூலையும் பெரும்பயன் படுத்தப் பன்முறை வேண்டுகின்றோம்.

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றின்
மிகை நாடி மிக்க கொளல்."

—குறள்.

# உள்ளுறை.


| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| மதிப்புரை | ... ... ... | iii |
| முகவுரை | ... ... ... | v |
| உள்ளுறை | ... ... ... | vii |
| தசாவதார நோக்கம் | ... ... ... | ix |
| நூல் :— | | |
| 1. | தோற்றுவாய் ... ... ... | 1 |
| 2. | திருவவதாரம் ... ... | 2 |
| 3. | நச்சுப்பால் ... ... ... | 9 |
| 4. | சகடன் கபடம் ... ... | 11 |
| 5. | மருதமரம் ... ... ... | 12 |
| 6. | பிருந்தாவனம் ... ... | 17 |
| 7. | அரவின்மேலாடல் ... ... | 19 |
| 8. | கோவர்த்தனக்குடை ... ... | 21 |
| 9. | வேணுகானம் ... ... ... | 25 |
| 10. | கம்சன் வஞ்சம் ... ... | 27 |
| 11. | குருதட்சிணை ... ... ... | 30 |
| 12. | முசுகுந்தன் முத்தி ... ... | 31 |
| 13. | திருமணத்தொடர் :— | |
| | உருக்குமணி திருமணம் ... ... | 34 |
| | சாம்பவதி திருமணமும் சத்திய பாமை திருமணமும் ... ... | 35 |
| | காளிந்தி திருமணம் ... ... | 35 |
| | மித்திர விந்தை திருமணம் ... | 36 |
| | சத்தியை ,, ... | 36 |
| | பத்திரை ,, ... | 36 |
| | இலக்குமணை ,, ... | 37 |

| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம். |
| 14. | அறுபுரத்தழிவு | ... | ... 37 |
| 15. | கண்டாகர்ணன்கதி | ... | ... 39 |
| 16. | தீபாவளி | ... | ... 41 |
| 17. | வாணாசுரன் வதை | ... | ... 43 |
| 18. | பவுண்டரன் படாடோபம் | ... | ... 46 |
| 19. | காண்டவதகனம் | ... | ... 47 |
| 20. | சமர்ப்பிச்சை | ... | ... 51 |
| 21. | அக்கிர பூஜை ... | ... | ... 54 |
| 22. | துரோபதை துகில் | ... | ... 57 |
| 23. | பாண்டவர் தூது | ... | ... 61 |
| 24. | பாரதப் போர் | ... | ... 71 |
| 25. | குசேலர் குறையறை | ... | ... 80 |
| 26. | இறந்த மக்களை யீதல் I & II | | ... 84 |
| 27. | 'கெடுவான் கேடு நினைப்பான்' | | ... 86 |
| 28. | இருப்புலக்கை | ... | ... 88 |
| 29. | ஜரன்சரம் | ... | ... 89 |
| 30. | வைகுந்த வைபவம் | ... | ... 91 |

# தசாவதார நோக்கம்.

திருப்பாற்கடலிற் பள்ளிகொண்ட திருமால் கொடியாரை நீக்கி அடியாரைக் காத்தற் (துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்) கும் அறத்தை நிலைநிறுத்தற்கும் இதுகாறும் உலகத்தில் எடுத்த அவதாரங்கள் ஒன்பது. இனிமேல் எடுப்பது ஒன்று. ஆகமொத்தம் பத்து. அவை மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமன், ரகுராமன், பலராமன், கிருஷ்ணன், கற்கி என்பன.

அவற்றுள், மச்சாவதாரம் வேதங்களைத் திருடி விரிகடலில் ஒளித்த சோமுகாசுரனைக் கொன்று அச்சுருதிகளை மீட்டற்கு மீனுருவானது.

கூர்மாவதாரம், தேவரும் அசுரரும் திருப்பாற் கடலைக் கடையும் பொழுது மந்தர மலையாகிய மத்து அமிழ அதைத் தாங்கும் பொருட்டு ஆமை யுருவடைந்தது.

வராகாவதாரம், பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு போய்க் கடலில் ஒளித்த இரணியாக்கனைக் கொன்று பூமியை மீட்டற்குப் பன்றியுருக் கொண்டது.

நரசிங்காவதாரம், இரணியகசிபனைக் கொன்று அவன் மகனாகிய பிரகலாதனைக் காக்கும்பொருட்டு ஒரு தூணில் ஆளரியாய்த் தோன்றினது.

வாமனாவதாரம், தேவருக்குத் தீமை செய்த மகாபலிச்சக்கரவர்த்தியை மாய்க்குமாறு காசிபருக்குப் பிள்ளையாகிக் குள்ளவடிவு கொண்டது.

பரசுராமாவதாரம், கார்த்த வீரியன் வம்சத்தைக் கருவறுக்க, ஜமதக்கினி முனிவர்க்கு மகனாய் அவதரித்தது.

இராமாவதாரம், (ரகுராமன்) இராவணாதி இராக்கதரை (இராக்ஷஸரை) அழிக்கும் பொருட்டுத் தசரத மன்னர்க்கு மகனாய் அவதரித்தது.

பலராமாவதாரம், துஷ்டரைத் தொலைக்கும் பொருட்டு ஆதிசேஷன் அம்சமாய்க் கண்ணபிரானுக்கு அண்ணனாக அவதரித்தது.

கிருஷ்ணாவதாரம், பாரதப் போர் நடத்திப் பூபாரம் தீர்க்கும்படி வசுதேவர்க்கு மகனாய் அவதரித்தது.

கற்கியவதாரம், கலியுக முடிவில் அடியாரைக் காத்தற்கு விஷ்ணு வேதியர் மகனாய்க் குதிரைவடிவு கொள்வது.

“மீனாமை கோலநெடு நரசிங்க மாகிநிலம்
விரகாலளந்த குறளாய்
ஆனாது சீறுமழுவல்வில்லும் வெல்லுமுனை
அலமுற்ற செங்கையவராய்
வானாடர் வந்துதொழ மண்ணாடர் யாவரையும்
மடிவிக்க வந்த வடிவாய்
நானாவிதங்கொள்பரி யாளாக நின்றருளும்
நாராயணாயநமவே.”

—வில்லிபுத்தூராழ்வார்.

[library stamp]

# துவாரகை மன்னன்

## அல்லது

# பூபாரந் தீர்த்த புண்ணியன்.

## 1. தோற்றுவாய்.

ஒரு காலத்தில் அநேக கொடிய அசுரர் உலகத்தில் மானிடராய்ப் பிறந்து மன்னராகிக்

> "கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற்
> கடும்புலி வாழுங் காடு நன்றே"

என்னுங் கொள்கைக் கிணங்கக் கொடுங்கோல் ஓச்சி வந்தனர். அவர் குடிகட்குச் செய்த கொடுமைகள் அனந்தம். அநேக குடிகள் அயல் நாடுகளிற் குடியேறினர். பூமியானது தன்பாரத்தைப் பொறுக்க முடியாமல் பிரமாவினிடம் போய் முறையிட்டது. பிரமாவும் மிகப் பரிதாபங் கொண்டு அதைத் திருப்பாற்கடற்கு அழைத்துச் சென்றார். அங்கே ஆதி சேஷனாகிய அரவணைப் பள்ளியில் அறிதுயில் கொள்ளும் திருமாலைக் கண்டார். உடனே அவர் திருவடிகளில் விழுந்து கண்ணீர் வார மெய்ம் மயிர் சிலிர்ப்பப் பன்முறை தொழுதார். அப்போது ஓர் அசரீரி எழுந்தது. அதைக் கேட்டுப் பிரமா தமது பரிவாரத்தைப் பார்த்து "ஓ! தேவர்காள்! நீங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். நாம் முறையிடுமுன்னமே நம்பெருமான் நமது குறைகளையெல்லாம் அறிந்திருக்கின்றார். அவர்

எங்கும் நிறைந்தவர்; எல்லாம் வல்லவர்; இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்கால நிகழ்ச்சிகளையும் முறைமையில் அறிந்தவர்; பரலோகம் பூலோகம் பாதாளம் என்னும் மூவுலகங்கட்கும் தலைவர். அவர் இன்று பூமியின் பாரத்தைப் போக்குவதற்காகப் பூலோகத்தில் யதுவம் சத்தில் வசுதேவர்க்கு மகனாய் அவதரிக்கப் போகின்றார். ஆதிசேஷன் அவர்க்கு அண்ணனாய் அவதரிக்கப் போகின்றான். மாயை அவர்க்கு உடன்பிறந்தாளாகப் போகின்றாள். நீங்களனைவரும் பகவானைக் காண்டற் பொருட்டு ஏற்ற காலத்தில் யாதவகுலத்தில் மாதராய்ப் பிறந்திருங்கள். அவர் உலகிலுள்ளவரை நீங்களும் உடனிருந்து அவர் திருவடிக்குத் தொண்டு செய்யுங்கள்." என்று தெரிவித்தார். அனைவரும் அகன்றனர். காலங்கடந்தது.

## 2. திருவவதாரம்.

பரதகண்டத்தின் வடபாகத்தில் யமுனையாற்றின் மேல்கரையில் மதுரையென்றோர் மாநகருண்டு. அது மாடமாளிகைகளாலும் கூடகோபுரங்களாலும் மாட்சிமையான காட்சியையளிக்கும். தென்னாட்டிலும் மதுரையென்றோர் முதுநகரிருந்ததால் வடநாட்டிலுள்ளது வட மதுரையெனப் பட்டது. அது இக்காலத்தில் மட்ரா என்று வழங்கும். அது ஏழு முத்தித்தலங்களுள் ஒன்று. அதைத் தலைநகராகக் கொண்ட வளநாட்டிற்குச் சூரசேனம் என்றுபேர். அது,

'விட்டில் கிளிநால்வாய் தன்னரசு வேற்றரசு
நட்டங் கடும்புனல் கால் எட்டு'ம் அற்று,

நாடு, நகர், காடு, நதி என்னும் நாற்பாற் செல்வங்களும் நன்றாய் விளையப் பெற்றது. அங்கு வேதர், நீதர், மாதர் என்னும் மூவர் கற்பாலும் மாதம் மும்மழை பொழியும்.

“ வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர்கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாத மூன்று மழையெனப் பெய்யுமே ”

என்றார் பெரியோர்.

சூரசேன நாட்டைத் துவாபரயுகத்தில் சூரசேனன் என்னும் மன்னவ னொருவன் ஆண்டுவந்தான். அவன் யாதவ வம்சத்துப் போஜகுலத்தான். அவன் செங்கோற் செல்வனும் அறநெறியண்ணலுமாயிருந்து,

“ மாநிலங் காவலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக்கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வராலுயிர்தம்மால்
ஆனபய மைந்தும் தீர்த்தறங்காப்பா னல்லனோ ”

என்றபடி தன்னாலுந் தமராலும் பகைவராலுங் கள்வராலும் விலங்குகளாலும் வரும் ஐவகைத்துன்பங்களையும் அறவேஅகற்றிவந்தான். அவனுக்கு வசுதேவர் முதலிய பல மக்கள் பிறந்தனர்.

வசுதேவர்க்கு மணப்பருவம் வந்ததும் தேவகன் மகளாகிய தேவகி என்பவளை அவர்க்குத் திருமணஞ் செய்வித்தனர். அவர் தம் திருமணக்கோலத்தில் தேவகியுடன் தேரேறிச் செல்லும்பொழுது கம்சன் சாரதியாயிருந்தான். கம்சன் உக்ரசேனன் என்பவனது மகன். உக்கிரசேனன் தேவகனுக்கு உடன் பிறந்த அண்ணன். ஆகவே கம்சனுக்குத் தேவகன் சிற்றப்பனும் தேவகி தங்கையுமாவர். தங்கைமணமென்று தாங்கா மகிழ்ச்சி கொண்டு கம்சன் தேரோட்டுங்கால் ஓர் அசரீரி எழுந்து “ ஓ ! கம்சா ! நீ எவளை உன் அருமைத் தங்கையென்று எண்ணி அவட்குத் தேரோட்டுகின்றாயோ,

அவள் கருவே உன்னைக்கொல்லும். அது அவட்கு எட்டாங் குழந்தை" என்று எச்சரித்தது. இயல்பாகவே குரூரனாகிய கம்சன் இதைக்கேட்டதும் மிகக்கொடியவனாய்த் தன் இடையிலிருந்த உடைவாளை உருவித் தன் தங்கையின் கூந்தலை எட்டிப் பிடித்து அவளை வெட்டத் துணிந்தான். உடனே வசுதேவர் அவனைத்தடுத்து "ஓ! உத்தம புருஷ! உன்னைப்போலும் வீரர் உலகத்தில் வேறு யார்? இதுகாறும் நீ பெற்ற பேருக்கெல்லாம் மாறாக இன்று என்ன காரியம் செய்யத்துணிந்தாய்? இதோ நீ கொல்ல நினைக்கும் மங்கை உன் தங்கையல்லவா? இவளைக் கொல்வதால் தீராப்பழியும் பாவமுமல்லவா உன்னைச் சாரும்? உன் புகழும் புண்ணியமும் மானமும் மதிப்பும் அழிவது உனக்கு அழகா? இதைச்சற்றே ஆராய்ந்து பார்" என்று நயம்படவுரைத்தார். ஆயினும் கம்சன் கருணையிற் கஞ்சனாதலின் கொஞ்சமுங் கேட்கவில்லை. பின்பு வசுதேவர் எப்படியும் தேவகியைக் காக்கக்கருதி கம்சனைப் பார்த்து "ஓ! கம்ச! உன் தங்கையின் எட்டாவது குழந்தையல்லவா உன்னைக் கொல்வதாய் அசரீரி உரைத்தது? ஆகையால் இவள் குழந்தைகளையெல்லாம் உன்னிடம் உடனுடன் ஒப்புவிக்கின்றேன். இவளை மட்டும் விட்டுவிடு" என்று மிகவும் வேண்டினர். கம்சனும் அதற்கிசைந்து வசுதேவரையும் தேவகியையும் சிறைப்படுத்தி அவ்விருவரும் தம் மக்களை மறைக்காவண்ணம் தக்க காவல் வைத்து 'முளையிற் பகையைக்களையும்படி' கருமேற்கண்ணாயிருந்தான்.

ஒருவனுக்குத் தன் உயிரே மிகவும் அருமையானது. ஆயினும் அறிவுள்ளவன் எப்போதும் மன்னுயிரையே மதிப்பான். அறிவிலியோ என்றும் தன்னுயிரையே

பேணுவான். கம்சன் முற்பிறப்பில் கால நேமி என்னும் அசுரனுயிருந்தவன். அசுரர் யாவரும் சிறிதும் அறிவில்லா மூர்க்கர். மூர்க்கருக்குப் புத்தி புகட்டுவார் தூக்கணங்குருவி யட்ட பாடு படுவர். பன்றிக்கு முன் சிந்திய முத்துப்போல மூடர்க்குச் சொன்ன நீதி பயன்படாது. கம்சன் தான் செய்யுங் கருமமே தருமமென்று கருதினன். அறங்கூறும் அமைச்சரும் அவனுக்கு ஒன்றை உரைக்க அஞ்சினர்.

இப்படி யிருக்குங்கால் தேவகி கருத்தரித்தாள். தகுந்த காலத்திற் குழந்தையும் பிறந்தது. வசுதேவர் வாக்கு மாருதவராதலின் உடனே குழந்தையைக் கொண்டு போய்க் கம்சனிடம் கொடுத்தார். அவர் தம் வாக்கைச் சரி யாய் நிறைவேற்றினர் என்ருவது, தாமாய்க் குழந்தை யைக் கொண்டுவந்தாரென்ருவது, குழந்தை குற்ற மற்ற குலக் கொழுந்தென்ருவது கம்சன் கருதாமல் முதற்குழந் தையால் தனக்கு மோசமில்லை யென்றே கருதி அதைக் கொல்லாமல் வசுதேவரிடம் கொடுத்து விட்டான். வசுதேவ ரும் அதை வாங்கிக் கொண்டுபோய் மகிழ்ச்சியுடன் வளர்த்துவந்தார்.

அப்போது நாரதமுனிவர் கம்சனைக்காண வந்தார். கம்சன் அவர்க்கு எதிர்கொண்டு மரியாதை செய்தான். நாரதர் பிரமாவின் மானசபுத்திரர். அவர் பகவானைப்பாடிக் கொண்டே யெங்கும் யாழுங்கையுமாய்த் திரிவர். முக்கால நிகழ்ச்சிகளும் மூவுலகச் செய்திகளும் அவர்க்கு முறை யாய்த் தெரியும். அவர், அசுரர், தேவர், அரசர், முனிவர் முதலிய பலரிடத்துஞ்சென்று அவரவர்க்குரிய நன்மை தீமைகளை அறிவிப்பார். சுரர்க்கும் அசுரர்க்கும் பகை மூட்டுவார். சண்டையுங்கலகமும் உண்டுபண்ணுவதில் சமர்த்தர். பகைமையுள்ள இருபட்சத்தார்க்கும் நல்லவ

ராய் நடந்து கொள்வார். 'அங்குமிருப்பார் இங்குமிருப்பார்' என்னும் உலகுரையும் 'இருதலைமணியன்' என்னும் ஒப்புரையும் அவர்க்கே பொருந்தும். ஆளுக்கேற்ற வேடமும் அவர்க்கேயுண்டு. இசைப்பிரியாரை இன்னிசையால் மயக்குவார். வலியார்க்குக் கோபம் மூட்டிக் கொடியாரைக் கொல்விப்பதே அவர் கொண்ட தொழில். அதனால் அவர் கலகம் நன்மையே விளைவிக்கும்.

நாரதர் கம்சனிடம் வந்ததும் "ஓ! கம்ச! நீ மிகவும் நல்லவன். நான் ஒன்று சொல்லுகிறேன் கேள், நீ முற்பிறப்பில் காலநேமி என்னும் அசுரனாயிருந்தவன். உன்னையடுத்திருப்பவரும் அசுரராயிருந்தவர். தேவர்க்கும் அசுரர்க்கும் தீராப்பகையென்பது உனக்குத் தெரிந்த செய்தி. தேவரே இப்போது யாதவராய்ப் பிறந்திருக்கின்றார். அவரை உறவினரென்று கருதவேண்டாம். அசரீரி உரைத்தபடி தேவகிக்குப் பிறக்கும் எட்டாங்குழந்தை உன்னையும் உன் துணைவரையுங் கொல்லும். அதற்கு அவளுடைய மற்றக் குழந்தைகளும் கருவிகளாகவே யிருக்கும். அதனால் இன்ன குழந்தைதான் எதிரியென்பதற்கில்லை. எல்லாக் குழந்தைகளையுமே கொல்வது நல்லது. தேவகியின் தலைக் குழந்தையைத் தொலைக்காதிருக்கின்றாய். வெள்ளம் வரு முன்னே அணைகோல வேண்டாமா? முண்மரம் முற்று முன் முளைகிள்ளவேண்டாமா? போனது போகட்டும். இனிமேல் எச்சரிக்கை, என்று சொல்லித் தம் வினைமேற் சென்றார். உடனே கம்சன் தேவகியின் குழந்தையைக் கொன்றான். இங்ஙனம் ஆறு குழந்தைகள் இறந்தன. கம்சனுக்கு அச்சம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

ஏழாவது குழந்தை ஆதிசேடன் அவதாரம். அது கருவாயிருக்கும்போதே திருமால் மாயையைப் பார்த்து,

'ஓ! மாதே! இன்றே நீ தேவகி வயிற்றிலிருக்கும் கருவை எடுத்துச் சென்று வசுதேவரின் மறுமனைவியான உரோகிணி வயிற்றில் வை. நீயும் கோகுலத்தில் நந்த கோபரின் மனைவியாகிய யசோதை வயிற்றில் அமர். நான் தேவகி வயிற்றில் அமர்வேன். நாமிருவரும் ஒரே காலத்திற் பிறப்போம்" என்று திருவாய் மலர்ந்தார். அப்படியே மாயையும் செய்து முடித்தாள்.

ஏழாங்குழந்தை தேவகிவயிற்றினின்றும் உரோகிணி வயிற்றில் இழுத்துவைக்கப் பட்டபடியால் ஷங்கர்ஷணன் (சங்கருடணன்) என்றும் பலசாலியாகையால் பலபத்ரன் என்றும் பிறரைரமிக்கச் (மகிழ) செய்வதால் ராமன் என்றும் பெயர் பெற்றது. இப்பெயர்களில் கடைசி யிரண்டையும் இணைத்துப் பலராமன் என்று சொல்வது வழக்கம். ஏழாங்கருவின் இடமாற்றம் அறியாத இனத்தாரெல்லாம் கருவழிந்ததென்று கவலைப்பட்டனர்.

கம்சன் எட்டாங் குழந்தைக்காக இரவும் பகலும் காத்துக் கொண்டிருந்தான். திருமால் தேவகிவயிற்றில் கருவாயமர்ந்தார். தேவகியின் முகமானது தேசினால் விளங்கிற்று. கருமுதிர்ந்து பருவம் வந்ததும் ஆவணி மாதம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி திதியில் உரோகிணி நக்ஷத்திரத்தில் சங்கு, சக்கரம், வில், வாள், தண்டம் ஆகிய ஐம்படை (பஞ்சாயுதம்) களை ஏந்திய நான்கு கைகளுடனும், பீதாம்பரத்துடனும் பெருஞ்சோதியுடனும் நீலநிறமான தேவரூபத்துடனும் திருமால் அவதரித்தார். அன்று இராக்காலமாயிருந்தது. வானவர் வாழ்த்திப் பூமழை பொழிந்தனர். மானிடர் மகிழ்ந்தனர்.

பகவான், தாம் பிறந்தவுடன் தம் பெற்றோரின் பழம் பிறப்புக்களையுணர்த்திப் பின்பு வசுதேவரைப்

பார்த்து "ஓ! தேவரே! இன்றே நீர் என்னை எடுத்துக் கொண்டுபோய் ஆயர்பாடியில் உமது நண்பனாகிய நந்த கோபன் மனையில் யசோதையருகில் வைத்துவிட்டு அங்கிருக்கும் குழந்தையை இங்கு எடுத்துக்கொண்டுவந்து என் இடத்தில் வைத்துவிடும். இது ஒருவருக்கும் தெரியாதிருக்கட்டும். நீர் செல்லும் போதும் வரும் போதும் சிறைக் கதவுகள் தாமாய்த்திறக்கும்" என்று சொல்லித் தம் தேவ வடிவை நீக்கி மானிட வடிவுகொண்டார். வசுதேவரும் குழந்தையை எடுத்துக்கொண்டு சென்றார். காவற் சேவகர்க்கோ கடுந்தூக்கம். சிறைச்சாலைக்கதவுகள் தாமாய்த்திறந்தன. எங்கும் இருண்டிருந்தது. அதோடு இடைவிடாத அடைமழை. ஆதிசேஷன் தன் அகன்ற படங்களை விரித்துக் குழந்தைக்குக் குடைபிடித்தான். யமுனையாறு தானாய் வழிவிட்டது. வசுதேவர் ஆற்றைக்கடந்து கோகுலஞ் சென்றார். அங்கு நந்தகோபன் மனையில் யசோதை அயர்ந்து தூங்குவதைக் கண்டார். யசோதைக்கு அன்றுதான் ஒரு பெண்குழந்தை பிறந்திருந்தது. அவள் அதை அயர்வினால் அறியவில்லை. வசுதேவர் மெள்ளத் தம்குழந்தையை அங்கு வைத்துவிட்டு அப்பெண்குழந்தையைக் கொண்டுவந்து தேவகியோரம் வைத்துவிட்டார். அன்றே கதவுகளும் அடைத்துக் கொண்டன. காவற்சேவகர் கண்விழித்தார்; குழந்தையைக் கண்டு கம்சனுக்குத் தெரிவித்தார். உடனே கம்சன் கோபாவேசமாய் ஓடிவந்து குழந்தையை எடுத்துக்கொண்டுபோய் ஒரு கற்பாறையில் மோதினான். மோதினதும் அது மாயாதேவியாய் மாறி வானத்தில் தோன்றி "ஓ! கம்சா! உன்னைக் கொல்லுங்குழந்தை எதோ ஓரிடத்தில் பிறந்திருக்கின்றது. என்னைக் கொல்வதால் உனக்கு என்ன பயன்?" என்று சொல்லி மறைந்தது. உடனே கம்சன் வசுதேவரை

யும் தேவகியையும் சிறைநீக்கித் தான் செய்த தீமைகட்கும் மன்னிப்புப் பெற்றுக்கொண்டான்.

கோகுலத்தில் எசோதை விழித்தெழுந்ததும், தன்னருகிற் கிடந்த குழந்தையை எடுத்துக் கட்டியணைத்து முத்தி மோந்து தன் கணவரிடம் கொடுத்தாள். அவரும் ஆனந்தக்கடலில் அமிழ்ந்து ஆயிரக்கணக்கான ஆக்களை அந்தணர்க்கு அளித்தார். குழந்தை கர்க்கிமுனிவரால் நாமகரணஞ் செய்யப்பட்டது. அது கருப்பாயிருந்ததினால் கிருஷ்ணன் என்று பெயர் பெற்றது. கிருஷ்ணன் என்றால் கருப்பன் என்று அருத்தம். நீலமும் கருப்பும் ஒரே நிறம். குழந்தை கருப்பாயினும் கண்ணைக் கவரும் கட்டழகுடையது. அதன் கண்கள் தாமரை மலர்போல் காமுறுந் தகையன. அதனால் அதைக்கண்ணன் என்பது வழக்கம்.

> "பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
> விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
> திருவடியுங் கையும் திருவாயுஞ் செய்ய
> கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
> கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே"
>
> —ஆய்ச்சியர் குரவை.

---

## 3. நச்சுப்பால்.

ஆயர்பாடியில் நந்தகோபன் மனையில் கண்ணபிரான் பலராமனுடன் நாளைக்கொரு நிறமும் வேளைக்கொரு நிறமுமாய் வளர்ந்துவந்தார். எசோதையும் அவரைச் சீராட்டிப் பாராட்டி வந்தாள்.

கம்சன் கண்ணபிரானைக் கொல்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தான். அவர் இருக்குமிடம் அவனுக்குத் தெரியவில்லை. அதனால் அக்காலத்துக் குழந்தைகளை யெல்லாம் கொல்லும்படி பூதனை யென்னும் கொடிய ராக்ஷ

வழியைப் போக்கினன். அவள் ஓர் அழகிய இளம்பெண் வடிவுகொண்டு அங்குமிங்கும் அலைந்து அநேக குழந்தைகளைக் கொன்றாள். கடைசியாய்க் கோகுலஞ் சென்று கண்ணபிரானை யெடுத்துத் தன் மார்போடணைத்துப் பாலூட்டினாள். அதை எசோதையும் உரோகிணியுங் கண்டும் ஒன்றும் சொல்லவில்லை. பூதனையின் அழகு காண்பவர் கண்களைக்கவர்ந்தது.

கண்ணபிரான் கடவுளின் அம்சமாதலின் பூதனையின் சூதையறிந்து பால் பருகுவதுபோலவே அவள் உயிரையும் பருகினார். அதைக்கண்டு அவள் "விடுவிடு" என்று பன்முறைவேண்டினாள். அவரோ விடாதுபருகி அவளை வீழ்த்தினார். உடனே அவள் தன் பழைய வடிவுகொண்டு பனைமரம்போன்ற கால்கைகளை நீட்டி, பிறைபோன்ற கோரைப் பற்களைக்காட்டி இடிவிழுந்த மரம்போல் திடீரென வீழ்ந்தாள். அனைவரும் அவள் உடலைக்கண்டு அஞ்சினர். அவள் விழுந்த அதிர்ச்சியினால் அநேகமையில் தூரமுள்ள மரங்களெல்லாம் முறிந்துவிழுந்தன. கோகுலத்தார் அவளுடலைக் கோடரிகொண்டு வெட்டிச்சுட்டனர். யசோதை கண்ணபிரானுக்கு யாதொரு தோஷமுங் காணாதபடி காப்புக்களையெல்லாம் கடிதிற்செய்து கடவுளைத்தொழுதாள். பூதனை மகாபாதகியாயினும் கண்ணபிரானுக்குப் பாலூட்டிய காரணத்தால் பேரின்ப வீட்டைப்பெற்றாள். அவளுக்கே அங்ஙனமாயின் அவரது பக்தருக்குப் பலன் எத்தனை அதிகம்?

"மாதுலனுகியும் எதிலனுகியும்
வஞ்சன் கஞ்சன் வாவிட்ட
பூதனை தன்னுயிர் முலைபாழி பாலொடு
போதரவுண்ட புயல்வண்ண

மாதவ யாதவ வாசவ கேசவ
மாயா வாயா மதுசூதா
ஆதியு மந்தமு மாகிய நின்புகழ்
அல்லா துரையே னடியேனே."

—வில்லிபுத்தூராழ்வார்.

## 4. சகடன் கபடம்.

கோகுலத்தில் ஒரு முறை கண்ணபிரானுக்குப் பிறந்த நாள் கொண்டாடினர். அன்று ஓர் அசுரன் சகட வடிவு கொண்டு அங்கு வந்திருந்தான். சகடமென்பது வண்டி. எசோதைப் பிராட்டி கண்ணபிரானைக் குளிப்பாட்டி அச் சகடத்தின் கீழ்க்கட்டியிருந்த தொட்டிலிற் கிடத்தினாள். குழந்தை பாலுக்கு அழுது தன் காலை மேலே தூக்குவது போல அவ்வண்டியைத் தாக்கிற்று. அது அச்சு முறிந்து கீழேவிழுந்தது. உடனே எசோதை குழந்தையை எடுத் தணைத்துத் தன் மடியிற் சிறிதுநேரம் வைத்திருந்து பின்பு கனத்தவுடன் கீழே கிடத்தினாள். கிடத்ினதும் திருணா வர்த்தன் என்னும் அசுரன் ஒருசுழல் காற்றின் வடிவு கொண்டு கண்ணபிரானை எடுத்து விண்ணுக்குச் சென்றான். அப்போது பிரசண்டமாருதம் போலப் பேரிரைச்சல் உண் டாயிற்று. கணக்கு வழக்கில்லாத கல்லும் மண்ணும் காற்றி னால் வாரியிறைக்கப்பட்டன. அவற்றைக் கன்மழை யென்றும் மண்மழை யென்றுங் கருதிக் கோகுலத்தாரெல் லாம் வீடுகளுக்குள் ஓடியொளித்துத் தத்தம் காதுகளையும் கண்களையும் மூடிக்கொண்டனர். யசோதை குழந்தை யிருக்குமிடம் தெரியாமல் கன்று நீங்கிய கறவைபோல் கலங்கினாள்.

திருணாவர்த்தன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு உயரச் செல்லச் செல்லக் குழந்தைகனத்தது. கனத்தைத்

தாங்கமுடியாமல் குழந்தையைக் கீழேபோடக் கருதும் போது அது அவன் கழுத்தை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டது. அதன் கைகளினின்றும் தன் கழுத்தை விடுவிக்க அவன் எவ்வளவோ முயன்றும் எள்ளளவும் முடியவில்லை. கடைசியிற் குழந்தை அவன் கழுத்தை நெருக்கிக் கொன்றது. உடனே அவன் தலைகீழுத்தரையில் விழுந்தான். குழந்தையானது, மலைமேல் மேகம் தவழ்வது போல் அவன் உடல்மேல் விளையாடிக் கொண்டிருந்தது. காற்றும் மழையும் நின்று போயின. குழந்தையைக்கண்ட கோகுலமாதர் அதை யசோதையிடம் கொண்டு போய்க் கொடுத்தனர். அவளுங் கண்ணிழந்து பெற்றாற் போல் களித்தாள்; கடவுளைத் துதித்தாள்.

சகடாசுரனும் திருணாவர்த்தனும் கண்ணபிரானைக் கொல்லும் வண்ணம் கம்சனால் ஏவப்பட்டவர். இங்ஙனமே பலமுறையும் பலவடிவில் வந்த பல அசுரரை கண்ணபிரான் அன்றன்றே மாய்த்தார்.

---

## 5. மருதமரம்.

கண்ணபிரான் குழவிப் பருவங்கடந்து குறு நடை நடந்து மழலைப்பருவமடைந்தார். அப்போது மற்றப்பிள்ளைகளைப்போல் மண்ணுண்பது அவர்க்கு வழக்கம். அது பிரளயந்தோறும் பிருதுவியையுண்ணும் பெருஞ்செயலைப் போன்றிருந்தது. ஒரு நாள் அவர் மண் தின்பதை எசோதை கண்டு மிகவுங் கண்டித்தாள். அப்போது அவர் தாம் தின்னவில்லையென்று தம் வாயைத்திறந்து காட்டினார். அவர் வயிற்றிற்குள் அண்டபிண்ட அகில சராசரங்களுமிருக்கக்கண்டு எசோதை ஆனந்தங்கொண்டாள். மற்றொருநாள் கண்ணபிரான் தம் திருவாயை விரிவாய்த்

திறந்து கொட்டாவிவிட்டார். அன்றும் முன்போலவே எசோதை அனைத்தையுங்கண்டாள்.

பின்பு கண்ணபிரான் வீடுவீடாய்ச் சென்று வெண்ணெய் திருடியுண்டுவந்தார். பூனைபோற்சென்று பானையை யுடைப்பதும் அதற்குள்ளிருக்கும் வெண்ணெயை யுண்பதும் அவர்க்கு வழக்கம். உறியிலுள்ள வெண்ணெயும் அவர்க்கே உரியதாயிற்று.

"அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறு பசியொன் றின்றியே உலகடைய வுண்டனையே
உண்டவாய் களவினால் உறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே."

—ஆய்ச்சியர் குரவை.

இடைச்சியரெல்லாம் கண்ணபிரான் களவைப்பற்றி எசோதையிடம் இடைவிடாது முறையிட்டுக் கொண்டிருந்தனர். எசோதை எவ்வளவாய்க்கண்டித்தும் கண்ணபிரான் எள்ளளவுங் கவனிக்கவில்லை. அதனால் அவளுக்கே சலிப்பாயிற்று.

ஒருநாள் கண்ணபிரான் ஓர் இடைச்சி வீட்டில் களவு செய்யும்பொழுது அவள் உடனே ஓடிப்போய் எசோதையிடம் முறையிட்டாள். எசோதை தொட்டிலைப்போய்ப் பார்த்தாள். கண்ணபிரான் சுகமாய்க்கண்வளர்ந்து கொண்டிருந்தார். அதைக்கண்டதும் இடைச்சிக்கு என்னசொல்வதென்று தெரியவில்லை. சிறிது நேரம் சித்திரம்போல் நின்று சென்றுவிட்டாள்.

இன்னொருநாள் கண்ணபிரான் ஓர் இடைச்சி வீட்டில் வெண்ணெய் திருடினார். அப்போது அவ்விடைச்சி அவரை உரலிற் கட்டிவிட்டுத் தன் பிள்ளையை இடுப்பில் வைத்துக்கொண்டு எசோதையிடஞ் சென்று முறையிட்டாள். முறையிட்டு முடிந்ததும் இடுப்பைப்பார்க்க அது தன்

பிள்ளையாயிராமல் கண்ணபிரானுயிருந்தது. உடனே அவரைக் கீழேயிறக்கிவிட்டு ஒன்றும் உரையாமல் ஓடி விட்டாள்.

கண்ணபிரான் எசோதை வீட்டில் திருடின வெண்ணெய்க்குக் கணக்குவழக்கில்லை. அயல் வீட்டில் திருடி அதிகமாய்த்தேர்ந்தவர்க்குத் தம் வீட்டில் திருடுவது தப்பிதமாகாது. எசோதை முதலில் திட்டினுள், குட்டினுள், ஏதும் பயனில்லை. பின்பு மத்தினுல் மொத்தினுள். அன்றும் அவர் களவைக் கைவிடவில்லை. கடைசியில் கட்டி வைப்பதையும் பட்டினிபோடுவதையுமே எசோதை தண்டனையாக் கொண்டாள்.

ஒருநாள் எசோதை பால்கொடாமைக்காகக் கண்ணபிரான் தயிர்த்தாழியை உருட்டி விட்டுத் ததிபாண்டன் மனைக்கு ஓடிப்போய் ஒளித்துக்கொண்டார். ததிபாண்டன் தக்கசமயம் வாய்த்ததென்று அவர்கால்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டான். அப்போது அவர் "என்தாய் என்னை அடிக்கவருகிறுள் விடுவிடு," என்று கத்தினுர். அவனே குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு "எனக்கும் என் இனத்தார்க்கும் என் தயிர்த்தாழிக்கும் வீடு தந்தாலொழியப் போகவிடேன். எசோதை யிடத்துங் காட்டிக் கொடுப்பேன்," என்று எச்சரித்தான். உடனே அவரும் வீடருளினுர். இதை இன்னெருவிதமாய்ச் சொல்வதுமுண்டு. அது வருமாறு:—

'கண்ணபிரான் ஒருமுறை ஓர் இடைச்சி வீட்டிற் களவு செய்வதைக் கண்டு இடைமாதர் துரத்த, உடனே அவர் ததிபாண்டன் மனைக்கு ஓடி அவன் குருடாயிருந்ததினுல் அவனுக்குக்கண்ணைக் கொடுத்து அங்குள்ள சாடியொன்றில் ஒளித்துக்கொள்ள, ததிபாண்டன் "எனக்குக்

கண் வேண்டாம் கதியே கொடு, கொடாவிடில் விடேன்" என்று சாடியை மூட அவரும் அதை அவனுக்கு அளித் தார் என்பது. இதை,

" திண்ணமுடன் கோபாலர் மனையில் வெண்ணெய்
திருடினதைக் கண்டவர்க டோத்தும்போது
கண்ணிலாத் ததிபாண்டன் மனையுட்புக்குக்
கண் கொடுத்தோர் சாடியிற்புக் கொளித்துக்கொள்ளப்
புண்ணிகராங் கண்வேண்டேன் கதிதாவல்லால்
போகவிடே னெனச்சாடி மூடிக்கொள்ள
எண்ணரிய பரமபத மவனுக் கீந்தாய்
இறைவா நாராயணனே யெம்பிரானே "

என்பதாலறிக.

ஒருநாள் எசோதை கண்ணபிரானுக்குப் பாலூட்டும் போது அடுப்பில் பால் பொங்கிற்று. உடனே அவள் அதைப்பார்க்கப்போனாள். கண்ணபிரான் அதுவே சமய மென்று அங்கிருந்த தயிர்த்தாழியை யுடைத்து வெண்ணெ யெடுத்துக்கொண்டு வெளியே ஓடிவிட்டார். எசோதை அவர் பின்னாகவே தொடர்ந்தாள். அவரோ வெகுநேரம் ஓட் டங்காட்டிக் கடைசியில் அகப்பட்டார். அவள் அவரைக் கொண்டு வந்ததும் கட்டிவைக்கக் கயிற்றை யெடுத்தாள். கயிறு காணவில்லை. அதனால் மற்றக் கயிற்றுடன் முடிந் தாள். அதுவுங்காணவில்லை. பின்பு அங்கிருந்த கயிறு களையெல்லாம் எடுத்தெடுத்து முடிந்தும் அவர் இடுப்பிற் குச்சற்றும் எட்டவில்லை. எசோதை என்னசெய்வதென்று தெரியாமல் இளைத்து நிற்கும்போது கண்ணபிரான் தாமே கட்டுண்ணக் கருணை கொண்டார். பின்பு அவரை உரலிற் கட்டினாள்.

"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல் வயிறு
[கலக்கினையே
கலக்கிய கை எசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே."

—ஆய்ச்சியர் குரவை.

கண்ணபிரான் கட்டப்பட்டதும் உரலையிழுத்துக் கொண்டே அங்கிருந்த இரு மருத மரங்கட்கிடையில் தவழ்ந்தார். உரல் மரங்கட்கிடையில் சிக்கிக்கொண்டு வரவில்லை. உடனே வலிகூட்டியிழுத்தார். இருமரங்களும் முறிந்து விழுந்தன. அவற்றினின்றும் நளகூபரன் மணிக்கிரீவன் என்னும் இருவர் தோன்றிக் கண்ணபிரானை வாழ்த்திச் சென்றனர். அவ்விருவரும் குபேரன் குமரர். அவர் ஒருக்கால் நீராடிக்கொண்டிருக்கும்போது நாரத முனிவர் அங்கு வந்தார். அவரைக்கண்டதும் எழுந்து வழிபாடு செய்யாததினால் அவர் அவ்விருவரையும் மரங்களாகச் சபித்தார். அதனால் அவ்விருவரும் ஆயர்பாடியில் நந்த கோபன் மனையில் மருதமரங்களாயினர். பின்பு கண்ணபிரான் கழலினை பட்ட மாத்திரத்தில் பின்னிலை மாறி முன்னிலை பெற்றனர்.

"நிருவாணத்துடன் குளித்துப் பனைகள்போல
நின்றமையாற் சுரர்கள் முனிசாபத்தாலே
மருதாகி நிற்குமிட்த் தன்னை யாயர்
மதியாமல் வெண்ணெய்க்கா யுரலிற் கட்ட
வெருவாமலே தவழ்ந்து மருதைக்கிட்டி
விறற்றிகிரி யாவிரலா லறுத்து வீழ்த்தி
இருளான சாபந்தீர்த்தவரைப் பண்டில்
ஏற்றமுற வைத்தனையே யெம்பிரானே."

— எம்பிரான் சதகம்.

கண்ணபிரான் கடவுளின் அம்சமாயிருந்தும் வெண்ணெய் திருடி மண்ணையுண்டது மனுட இயல்பாகவும் தெய்வத்திருவிளையாடலாகவுமிருந்தது. இறைவன் எல்லாப் பொருட்குந் தலைவனாதலின் இடைக்குடியில் வெண்ணெய் கொண்டது இழுக்கன்று.

---

## 6. பிருந்தாவனம்.

ஆயர்பாடியில் கண்ணபிரானுக்குப் பல துன்பங்கள் அடுத்தடுத்துத் தோன்றின. ஆயினும் அவர் அவற்றிற்கு அணுவளவும் அஞ்சினாரல்லர். ஒளிக்குமுன் இருள் ஒளிப்பது போலக் கண்ணபிரானுக்கு வந்த துன்பங்களுங் கரந்தன. அவர் அன்பு வடிவாயும் இன்பவடிவாயுமுள்ள கடவுளின் அம்ச மாதலின் அவரைத் துன்பம் என்பது தொடர்வதே யில்லை. கதிரவனொளியை மின்மினி மறைக்க முடியாததுபோலக் கண்ணபிரான் உயிரையும் ஒருவரும் மாய்க்க முடியாது. மூவுலகுங் கூடிமோதினாலும் முன்னவனுக்கு மோசமில்லை. ஆனாலும் நந்தகோபன் நம்பன் பெருமையறியாதவனாய்த் துன்பத்தினின்றும் தப்புவதற்காகக் கோகுலத்தைவிட்டுத் தன் குடும்பத்துடன் பிருந்தாவனத்திற் குடி புகுந்தான். அங்கு கண்ணபிரான் பையற்பருவத்தை யடைந்தார். அதன்பின் ஆயச்சிறுருடன் கூடி நாள்தோறும் காட்டிற்குச் சென்று கன்றுகாலிகளை மேய்த்து வருவது அவர்க்கு வழக்கம். அப்போது அநேக அசுரர் அவரைக் காட்டிற் கொல்லக் கருதினர்.

ஒரு முறை கபித்தாசுரன் என்பவன் ஒரு விளா மர வடிவுகொண்டு கண்ணபிரான் தன்னடியில் வரவும் அவர் மேல் சாய்ந்து அவரை மாய்க்க எண்ணியிருந்தான். அதே சமயத்தில் வத்ஸாசுரன் என்பவனும் ஒரு கன்று வடிவாய்

அங்கே நின்றுகொண்டிருந்தான். கண்ணபிரான் அவ்விரு வர் வஞ்சனையையும் அறிந்து, கனியுதிர்ப்பது போலக் கன்றெடுத்து விளாமேல் எறிந்தார். இருவரும் இறந்தார்.

மற்றோர்முறை பகாசுரன் என்பவன் ஒரு கொக்கு வடிவாய் வந்து கண்ணபிரானைக் கொத்தி விழுங்கினான். தொண்டைக்குள் சென்றதும் தீப்போற் சுட்டதினால் அவரைத் திரும்பக் கக்கி விட்டான். அப்போது கண்ண பிரான் அவன் அலகைப் பனங்கிழங்குபோற் பிளந்து, அவனைக் கொன்றுவிட்டார்.

பின்பு அகாசுரன் என்பவன் ஒருநாள் ஒரு பெரிய மலைப்பாம்பாய்க்கிடந்து இடைச்சிறுவரையுங் கண்ணபிரா னையும் விழுங்கினான். அப்போது கண்ணபிரான் அவன் கழுத்தைக் கிழித்துக் கொண்டு சிறுவருடன் வெளிப்பட் டார். அவன் மடிந்தான்.

ஒருநாள் கண்ணபிரான் யமுனைக்கரையில் கட்டமு துண்ணும் பொழுது பிரமா அவரது திருவிளையாடலின் திறத்தைக் காணும் பொருட்டு அங்கிருந்த கன்றுகளையும் சிறுவரையுங் கவர்ந்து தமது மாயையால் மறைத்து வைத் தார். கண்ணபிரான் அதையறிந்து தாமே அக்கன்றுகளுஞ் சிறுருமாய் வண்ணம், வடிவம்; நாற்றம், தோற்றம்; குணம் குறி; ஆடை, அணி; எழில், தொழில்; குழல், கொம்பு; மாலை மணி முதலிய பலவும் மாறாது கோகுலஞ் சென்றார். அன்று முதல் ஓராண்டுவரையும் அவர் அங்ஙனமே காட்டிற்குச் செல்வதும் வீட்டிற்கு வருவதுமா யிருந்தார். அதை ஒரு வரும் அறியவில்லை. பின்பு பிரமா தாமே கன்றுகளையுஞ் சிறுவரையுங் கொண்டுவந்து கண்ணபிரானிடம் ஒப்புவித்து மன்னிப்புப் பெற்றுக் கொண்டார். மாயையில் வல்லவராத வின் கண்ணபிரானுக்கு மாயவன் என்றுபேர். அதோடு

கோக்களை மேய்த்ததினல் கோபாலன் கோவிந்தன் என்ற பெயர்களும் கூடின. கோவென்பது பசு.

"கன்றுடனே கோபால ரனேகம் பேரைக்
கமலவய னபகரித்துக் கொடுபோய் வைக்க
வென்றியுட னந்தந்த வடிவமாகி
வேற்றுமையற் றனைத்துமுற வேசிட்டித்தாய்
அன்றிருந்து மற்றையநா ளயன்வந்தக்கால்
அனைத்துமுறக் கண்டஞ்சித் தெண்டன் பண்ணி
இன்றடியேன் செய்தபிழை பொறுத்துக்காவென்
றேத்தவளித் தனையரியே யெம்பிரானே."

—எம்பிரான் சதகம்.

---

## 7. அரவின்மேலாடல்.

கண்ணபிரான் பையல் பருவத்தை யடைந்தபின் நாள் தோறும் பலராமனுடன் காட்டுக்குச்சென்று பசுக்களை மேய்த்துவருவது வழக்கம். ஒருநாள் பலராமன் செல்லவில்லை. கண்ணபிரான் மட்டும் மற்றப் பையன்களுடன் பசுக்களை யோட்டிக்கொண்டு யமுனைக்கரைசென்றார். யமுனையில் ஒரு மடுவிருந்தது. அதில் காளியன் என்னும் ஒரு கடும்பாம்பு கருடனுக்குப் பயந்து மறைவாய் வசித்துவந்தது. அதன் விஷத்தினல் மடுநீர் என்றும் பொங்கிக் கொண்டேயிருக்கும். பக்கத்திலுள்ள மரங்களெல்லாம் பட்டுப் போயின. மேலே பறக்கும் பறவைகளும் இறந்து கீழே விழுந்தன.

கண்ணபிரான் காளியனைக்கொல்லக் கருதி மடுவில் திடுமெனக் குதித்தார். மடுநீர் உயரக்கிளம்பிற்று. அப்போது அவர் ஆரவாரமாய் நீராடினர். அரவங்கட்குச் செவிப்புலன் மிகவும் நுட்பமானது. 'அரவம் அரவம் அறியும்' என்பது பழமொழி. கண்ணபிரான் நீராடும் ஒலியைக்

காளியன் கேட்டு வெளியே வந்து அவரைக்கடித்ததுமன்றி அவர் உடலையும் சுற்றிக்கொண்டது. அப்போது அவர் சிறிதும் அஞ்சாமல் விம்மி விம்மித் தம்முடலை மும்மடங்கு பருக்கச் செய்தார். உடனே பாம்பு சுற்றுநெகிழ்ந்து விட்டு விட்டது. பின்பு தன் படங்களை விரித்துக்கொண்டு கண்களில் தீப்பொறிபறக்கக் கண்ணபிரானைப் பார்த்த வண்ணமாயிருந்தது. அப்போது அவர் அதைச் சுற்றி சுற்றி வந்து அதன்மேல் ஏறச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். பாம்பிற்குப் படிப்படியாய்ப் பலங் குறைந்தது. உடனே கண்ணபிரான் அதன் மேலேறி நடித்தார். இதற்குக் காளிங்கமர்த்தனம் என்று பேர். காளியன் அதைத் தாங்கமுடியாமல் வாயினாலும் மூக்கினாலும் இரத்தம் கக்கி இறக்குந்தருவாயிலிருக்கும்போது தன்னைவிட்டுவிடும்படி கண்ணபிரானை வேண்டிற்று. அவரும் அதற்கிசைந்து அதை உடனே கடலுக்குச் செல்லக் கட்டளையிட்டார். அன்றே அதுவும் சென்றது. அது முதல் அம்மடுநீர் அமிர்தமயமான உண்ணீருந்தண்ணீருமாயிற்று.

“அங்கையில் நேமி சங்குவாள் தண்டோ
டடற்சரா சனந்தரித் தருள்வோன்
சங்கையின் மறைகளாயிரங்களுக்குஞ்
சாற்றுதற்கரிய தத்துவத்தோன்
கங்கையின் அறனுங் காளியன் முடியுங்
காளிந்திக் கரையுமே கமழும்
பங்கயமலர்கள் இரவுநன் பகலும்
பணிந்துபாடுது மவன் புகழே.”

—வில்லிபுத்தூராழ்வார்.

கண்ணபிரான் காளிங்க மர்த்தனத்திற்குப் பின் காட்டிற் செய்த அற்புதச் செயல்கள் அனந்தம்.

ஒருமுறை முஞ்சாரணியத்தில் ஒரு காட்டுத்தீமூண்டு ஆயர்களைச் சூழ்ந்து கொண்டது. ஆயரெல்லாம் அலறினர். அப்போது கண்ணபிரான் அகண்ட வடிவுகொண்டு அத்தீயையும் ஆயரையும் விழுங்கி ஆயரைமட்டும் பாண்டீர மென்னும் ஆலமரத்தின் கீழ் வெளிவிட்டனர்.

ஒருமுறை கண்ணபிரான் பலராமருடன் ஒரு பனங் காட்டிற்குச்சென்று பனம்பழந் தின்றபோது தேனுகாசுரன் என்பவன் கழுதைவடிவிற் கத்திக்கொண்டு வந்து எதிர்த்தான். அப்போது கண்ணபிரான் பழமுதிர்ப்பது போலவே கழுதையைத் தூக்கிப் பனைமேலெறிந்தார். உடனே அது இறந்துவிழுந்தது.

மற்றொருமுறை கண்ணபிரானும் பலராமரும் ஆயச் சிறுருடன் கூடி விளையாடும்பொழுது, கஞ்சனுக்குத் துணையாயிருந்த பிரலம்பாசுரனும் ஓர் இடைமகனாய் வந்து விளையாடினன். விளையாட்டில் இரண்டிரண்டு பேராய் விளையாடுவதும் தோற்றவன் வென்றவனைத் தூக்கிச் சுமப்பதும், தொன்று தொட்டு வழக்கம். அதன்படியே பிரலம்பன் பலராமருக்குத் தோற்றுப் போய் அவரைத்தன் முதுகிற் சுமந்து செல்லும்பொழுது அளவுகடந்து சென்றான். அதை யறிந்து பலராமர் அவனைக் காலால் உதைத்துக் கையாற் குட்டிக் கொன்றுவிட்டார்.

---

## 8. கோவர்த்தனக்குடை.

ஆயர்பாடியில் ஒருமுறை இந்திரவிழா அடுத்து வந்தது. அது ஆண்டுதோறும் நந்தகோபனால் நடத்தப் படுவது வழக்கம். விழாவுக்கென்று உண்பன (சாதம்) தின்பன (பலகாரம்) நக்குவன (தேன்) பருகுவன (பாயாசம்) என்னும் நால்வகை உண்டிகளும் ஆயத்தமாயின.

பலகாரங்களெல்லாம் மலைபோற்குவிந்து பார்ப்பவர் கண்களைப் பறித்தன. இந்திரனுக்குப் படைக்கும் வேளை வந்ததும் கண்ணபிரான் அவற்றை உண்ண விரும்பி நந்தகோபனுடன் பின்வருமாறு பேசத்தொடங்கினர்.

## உரையாட்டு (சம்பாஷணை).

**கண்ணபிரான்.**—அப்பா! இவ்வுணவெல்லாம் யார்க்கு?

**நந்தகோபன்.**—இந்திரற்கு.

**கண்ணபிரான்.**—இந்திரனுக்கு நாம் ஏன் படைக்க வேண்டும்? அவனால் நமக்கு என்ன நன்மை?

**நந்தகோபன்.**—எம்பெருமானே! அப்படிச் சொல்லாதிரும். இந்திரன் கோபித்துக்கொள்வான். உயிருக்கு உணவு இன்றியமையாதது. உணவோ மழையால் உண்டாவது. மழைக்குத் தெய்வம் இந்திரன். மழை பொழியாவிடின் பயிர் அழியும். பயிர் அழியின் உயிரும் அழியும். பசுவுக்குப் புல்லும் மனுஷர்க்கு நெல்லும் பயிரே யன்றோ? அதனால் இந்திரனுக்குப் படைப்பது இன்றியமையாததாகும்.

**கண்ணபிரான்.**—அப்பா! நீங்கள் சொல்வது தப்பிதம். 'மாரியல்லது காரியமில்லை' என்பது மெய்தான். ஆனால் மழையானது இந்திரனால் வருவதில்லை. உலகத்தில் நன்மை தீமைக்கும் இன்ப துன்பத்திற்கும் காரணம் அவரவர் நல்வினை தீவினைகளேயன்றி வேறில்லை. ஒருவனுக்கு நல்வினையிருப்பின் பஞ்சபூதங்களும் நன்மை செய்யும். தீவினையிருப்பின் அவை தீமையே செய்யும். நிலம், நீர், தீ, வளி (காற்று), வெளி (ஆகாயம்), என்னும் ஐந்தும் பஞ்ச பூதங்களாம்.

அவற்றுள் நீர் என்பது ஒன்று. பூமியிலுள்ள நீரே சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறி மேலே சென்று மழையாய்ப் பொழிகிறது. நல்வினையுள்ளவர்க்கே நீரும் நன்மை செய்யும். நல்வினை செய்தாரும் செய்வாரும் நல்லாரே யாவர். ஆகவே நல்லாரே மழைக்குக் காரணம்.

"நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொழியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை."

ஆகவே வினையன்றி வேறே தெய்வமில்லை. இறைவனும் வினை வழியே உயிர்களை இயக்குவான். இந்திரனை வணங்குவதைவிட இக் கோவர்த்தன மலையை வணங்குவது மேல். அது பசுக்களுக்கும் நமக்கும் பலவகை உணவைத் தருகின்றது. ஆதலால் மலை வணக்கமே கடனும்.

நந்தகோபன்.—பெருமானே! நீர் சொல்வது சரிதான். ஆனல் மலையானது உயிரில்லாப் பொருளன்றோ? அதற்குப் படைப்பின் அது எங்ஙனம் உண்ணும்? மேலும் தொன்றுதொட்டு இதுகாறும் கோகுலத்தாரெல்லாம் இந்திரனைக் கும்பிட்டிருக்கின்றனர். இதற்கு மாறுக இன்று நிறுத்தினல் இந்திரன் கோபப்பட்டு ஏதேனும் தீமை செய்வானே. ஒருவேளை தன் ஏழு மேகங்களையும் ஏவிப் பெருமழை பெய்வித்தால் நாம் என்செய்வோம்? அன்று நம்மைக் காப்பவர் யார்? இதற்கென்ன சொல்கிறீர்?

கண்ணபிரான்.—அப்பா! நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவும் கவலவும் வேண்டாம். இந்திரன் கோபித்துக்கொண்

டால் நம்மை என்ன செய்வான்? ஒருவேளை உங்கள் சொற்படி எழுமேகங்களை ஏவினாலும் இம்மலையானது நம்மைக் காவாதா? கட்டாயம் காக்கும். அதனால் இம் மலைக்கே படையுங்கள். உடனே அது உண்டு விடும். அப்போது நான் சொன்னது மெய்யென்று விளங்கும் (இப்படிச்சொல்லும்போதே கண்ணபிரானுக்கு வாயில் எச்சு ஊறிற்று. அதனால் அவர் அதிக ஆத்திரப் பட்டார்).

**நந்தகோபன்.**—(கண்ணபிரானது கருத்தையும் மாயத் தையும் உணராமல் சொன்னது).

சரி, அப்படியே செய்கின்றேன்.

உரையாட்டு முடிந்ததும் நந்தகோபன் கோகு லத்தாருடன் பண்ணிகாரங்களை யெல்லாம் கோவர்த்தன கிரிக்குப் படைத்து வணங்கினான். அப்போது கண்ண பிரான் ஒரு பெரு வடிவுடன் வந்து அவற்றையுண்டு அனைவர் க்கும் கேட்கும்படி "உவந்தோம்" என்று சொல்லி மறைந் தனர். ஆயரெல்லாம் இதை மெய்யென்று நம்பி "மலையும் உண்டு மகிழ்கின்றதே" என வியந்தனர்.

இந்திரன் இதைக்கண்டதும் கடுங்கோபங் கொண்டு ஏழுமேகங்களையும் ஆயர்மேல் ஏவினன். உடனே அவை பெருந்தாரைகளாகக் கன்மழை பொழிந்தன. கண்ணபிரான் கோவர்த்தன மலையைக் குடையாய்ப் பிடித்துக் கோகுலத் தாரையும் கோக்களையும் கார்த்தனர். ஏழுநாள் இடை விடாது பெருமழை பெய்தது. ஆயர் யாதொரு சேதமும் அடையவில்லை. அதனால் இந்திரன் மழையை நிறுத்தினன். மழை நின்றதும் வானவில் தோன்றிற்று. அதை இந்திர வில் என்பதும் உண்டு.

ஆயரெல்லாம் கண்ணபிரானை வாயார வாழ்த்தினர்.

மகரத்திற் சூரியன்வந் துதித்தகாலில்
வந்திக்க விந்திரனை நோக்கிப் பொங்கல்
மிகவிட்டுக் கயிலைமலை போலே வைக்க
விளையாட்டாயத்தனையும் நீயே யுண்ணக்
ககனத்தி லிந்திரனும் வந்துபார்த்துக்
கன்மழையை நிரைமீதில் விடுத்த மட்டில்
இகபரத்திற் கிறையவனே நிரைக்காக் குன்றை
யெடுத்து மழை தடுத்தனையே யெம்பிரானே."

—எம்பிரான் சதகம்.

---

## 9. வேணுகானம்.

ஒரு முறைநந்தகோபன் சிவனைத் தொழுதுவர அம்பிகா வனஞ் சென்றான். கோபரும் (ஆயர்) கூடச் சென்றனர். அவ்வனத்தில் சரஸ்வதி என்றோர் நதியுண்டு. அதில் அனை வரும் முழுகிச் சிவனைத் தொழுதனர். பொழுதடைந்தது. இராவந்ததும் எல்லாரும் அயர்ந்து தூங்கினர். பாதியிரவில் ஒரு பரும்பாம்பு பசியுடன் வந்து நந்தகோபனைப் பற்றி விழுங்கிற்று. உடனே அவன் "கண்ணபிரான்! கண்ண பிரான்"! என்று கத்தினான். கோபரெல்லாம் எழுந்திருந்து கொள்ளிக்கட்டைகளால் அதை அடித்தனர். அடித்தும் அது விடவில்லை. பின்பு கண்ணபிரான் வந்து அதைக்காலால் எற்றினர். உடனே அது நந்தனை விட்டு விட்டுச் சுந்தரவடி வான ஒரு கந்தருவனாயிற்று. கண்ணபிரான் அக்கந்தரு வனைப்பார்த்து "நீயார்?" என்று கேட்டார். அதற்கு அவன் "சுவாமி! நான் சுதரிசனன் என்னும் கந்தருவன். ஒருநாள் என் அழகினால் அகங்கரித்து ஆங்கிரச முனி வரைப் பழித்தேன். அவர் என்னைப் பாம்பாகச் சபித்தார். அதிலிருந்து இவ்வனத்தில் பாம்பாயிருந்து இதுபொழுது உம் திருவடி பட்ட மாத்திரத்தில் பாம்பு வடிவம் நீங்கிப்

பழைய வடிவம் பெற்றேன்." என்று சொல்லிக் கண்ண பிரானை நெஞ்சாரப் புகழ்ந்து வாயார வாழ்த்திச் சென்ருன் அதிகாலையில் அனைவரும் ஆயர்பாடிக்குத் திரும்பினர்.

சின்னாள் சென்றபின் ஒரு மாலைக்காலத்தில் ஆயர் பாடிக்கருகில் கண்ணபிரான் கல்லுங் கரையப் புல்லாங் குழல் வாசித்தார். இதை வடமொழியில் வேணுகானம் என்பர். வேணு என்பது மூங்கில். கானம் என்பது இசை. இசையானது எல்லாரையும் வசப்படுத்தும் ஒரு வசியமா யிருக்கின்றது. இசைக்கு இசையாதார் எவருமில்லை. கல் லுங்கரையும் காயுங் கனியு மென்ருல் வேறே யென்ன சொல்லவேண்டும்? இசையானது ஒரு சிற்றின்பமும் பேரின்பமுமாயிருக்கிறது. அகத்தியர் இராவணனை இசை யினுல் வென்று துரத்திஞர். இராவணன் இசையினுல் சிவ னிடம் வரம்பெற்ருன். திருப்பாணுழ்வார், திருநீலகண்ட யாழ்ப்பாணுர் முதலியோர் யாழிசையால் வாழ்நாளெல்லாம் பகவானைப்பாடிப் பரமேன்பம் பெற்றனர். பகுத்தறி வில்லாப் பிராணிகளுங் கூட இசைக்கு வசப்படுகின்றன. மானுனது இசையினுல் மயங்கி வேடன் வலையில் விழும். நல்ல பாம்புபல்லிழக்கும். மாடுகள் கூடும்.

கண்ணபிரான் கானஞ்செய்யும் பொழுது இடை மாத ரெல்லாம் புடைசூழ்ந்து கர்ணுமிர்தம் பருகினர். அப்போது சங்க சூடன் என்னும் அசுரன் அம்மாதரையெல்லாம் வளைத்து வடக்கு நோக்கித்துரத்தினன். உடனே கண்ண பிரான் ஓடிச்சென்று அவனை மடக்கிக் கொன்று அவன் முடி மணியையும் பலராமனுக்குக் கொண்டுவந்து கொடுத்தனர். மீட்கப்பட்ட மாதரெல்லாம் அவரை ஏத்திப்புகழ்ந்தனர்.

பின்ஞெருக்கால் அரிஷ்டன் என்னும் அசுரன் கம்சன் ஏவலால் ஒரு கொழுத்த காளைவடிவங்கொண்டு இடைக்குடி

யெங்குந் திரிந்து பசுக்களை வருத்துவதும் ஆயரைப் பாய்வதுமாயிருந்தான். அப்போது கண்ணபிரான் அக்காளையின் கொம்பிரண்டையும் பிடித்து அதன் கழுத்தைத் திருகி அதன் அடிவயிற்றிலுதைத்துக் கொன்றுவிட்டார்.

---

## 10. கம்சன் வஞ்சம்.

கண்ணபிரான் அரிஷ்டாசுரனைக் கொன்றபின் நாரதமுனிவர் கம்சனிடஞ் சென்று "ஓ! காவல! நீ யேன் தேவகி மக்களைக்காவல் செய்யவில்லை? அசரீரி சொல்லையும் என் சொல்லையும் அசட்டைபண்ணினைபோலும்.

"ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

என்பதும்

"சூழ்வினை நான்முகத்தொருவர்ச்சூழினும்
ஊழ்வினை யொருவரா லொழிக்கற்பாலதோ."

என்பதும் மெய்யேயன்றோ? உன் பகைவனாகிய கண்ணபிரான் நந்தகோபன் மனையிலன்றோ அந்தரங்கமாய் வளர்கின்றான்? பிறந்தவுடன் பெற்றோர் அவனைப் பிறர்க்குத் தெரியாது மறைத்திருக்கின்றனர். நீ அதையறியாது அவனுக்குப் பதிலாய் வைத்த யசோதை மகளாகிய மாயையை மாய்த்திருக்கின்றாய். நீ ஏமாற்றப்பட்ட இன்னொருவினையுமுண்டு. அதாவது நந்தகோபன் மனையில் கண்ணபிரானுடன் வளர்ந்துவரும் பலராமன் என்பவன் உரோகிணியின் புதல்வனாகும். இவ்விருவருமே உனக்கு மறைவாயிருந்து நீ ஏவிய அசுரரையெல்லாம் அழித்திருக்கின்றனர். இனிமேலாவது எச்சரிக்கையாயிரு" என்று சொல்லி முடியுமுன் கம்சன் வசுதேவ தேவகியரைக் கொல்ல வெழுந்தான். அப்போது நாரதர் "நீ இவரைக் கொல்வதால் ஏதும் பயனில்லை.

பலராம கண்ணரையே கொல்ல வழிபார்" என்று சொல்லி விடைபெற்றுச்சென்ருர். உடனே கம்சனும் அதற்கிசைந்து வசுதேவ தேவகியரை மறுபடியும் சிறைப்படுத்திக் கேசியென்னும் அசுரனைக் கண்ணபிரானைக் கொல்லுமாறு விடுத்தான். கேசியும் ஒரு குதிரைவடிவுகொண்டு தன்வாயை விரிவாய்த்திறந்து கண்ணபிரானை விழுங்கப்போம்பொழுது கண்ணபிரான் தம் கையைப் பருக்கச்செய்து அவன் வாய்க்குள் திணித்து வாயைக் கிழித்துக்கொன்ருர்.

பலராமனும் கண்ணபிரானும் நாளுக்குநாள் பலத்திலும் படைப்பயிற்சியிலும் பலவகைப்போரிலும் தேர்ந்து வந்தனர். கம்சன் அவர்களைக் கொல்லப் பன்முறை முயன்றும் பயன்படவில்லை. கடைசியில் மதுரையில் ஒரு வில்வேள்வி (தனுர்யாகம்) நடத்தக்கருதி அதற்கு அவ்விருவரையும் அழைத்துவரும்படி தன் அமைச்சனுகிய அக்குரூரனை ஆயர்பாடிக்கு அனுப்பினன்.

அக்குரூரன் கம்சனுடைய கெட்ட எண்ணத்தைக் கண்டவன். கண்ணபிரான் மேலும் பலராமன்மேலும் கரையற்ற காதல்கொண்டவன். அதனுல் கம்சன் ஆணையை அறிவித்தற்கும் கண்ணனையும் இராமனையும் காண்பதற்குமே அவன் ஆயர்பாடிக்குச் சென்ருன். ஆயர்பாடியில் அவ்விருவரையுங் கண்டவுடன் அவனுக்கிருந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. பின்பு அவன்தான் வந்த காரியத்தை நந்தகோபனுக்குத் தெரிவித்தான். அவனும் கம்சனுக்கு அஞ்சிக் காணிக்கைகளுடன் கண்ணபிரானையும் பலராமனையும் மதுரைக்கனுப்பி வைத்தான். அக்குரூரன் அவ்விருவருடனும் திரும்பி வரும் வழியில் யமுனையில் முழுகினுன். அதில் திருமால் தமது வைகுந்த தரிசனத்தை அருளினர்.

மதுரை யடைந்ததும் கண்ணபிரானும் பலராமனும் தனுர்யாக சாலைக்குத் (வில்வேள்விக்கூடம்) தாமாகச் சென்று அங்கு நிறுத்தியிருந்த வில்லையெடுத்து முறித்தனர். உடனே அதைக் காத்துக்கொண்டிருந்த வீரர் எல்லாம் போருக்கு வந்தார். கண்ணபிரான் தம் அண்ணனுடன்கூடி அவர் அனைவரையும் கொன்றனர்.

மறுநாள் கம்சன் ஒருமல் யுத்தம் ஏற்படுத்தினான். அதற்குக் கண்ணபிரானும் பலராமனும் அழைக்கப்பட்டனர். அவ்விருவரையும் கொல்லும்படி கம்சன் குவலயாபீடம் என்னும் மதயானையை வழியில் நிறுத்தினன். கண்ணபிரான் அதன் தந்தங்களைப் பிடுங்கி அவற்றையே ஆயுதமாகக்கொண்டு அதைக்கொன்றார்.

மல்யுத்தத்திற்கு வந்த மல்லரெல்லாம் கண்ணபிரான் வல்லமையைக் கண்டுங் கேட்டும் கலங்கினர். ஒருவரும் அவருக்கு முன்வரத் துணியவில்லை. வெகுநேரங்கழித்துச் சாணூரன் என்பவன் மானத்திற்கு அஞ்சிக் கண்ணபிரானை மல்லுக்கழைத்தான். இருவரும் மற்போர்புரிந்தனர். பலராமன் முஷ்டிகனை எதிர்த்தான். நின்றும் இருந்தும் கிடந்தும் நெடுநேரம் மற்போர் நிகழ்த்தியபின் கண்ணபிரானும் பலராமனும் மல்லர்களை வென்று கொன்றனர்.

கண்ணபிரான் எப்போதும் வெற்றிபெறுவதையும், வசுதேவர், நந்தகோபன், உக்கிரசேனன் முதலியோர் அவன் கட்சியிலிருப்பதையுங் கண்ட கம்சன் மிகவும் பொறுதவனாய்த் தனக்குமாறாயிருக்கும் யாவரையும் உடனே கொல்லச் சேவகர்க்குக் கட்டளையிட்டான். கண்ணபிரான் அது கேட்டுக் கடுங்கோபங்கொண்டு அரண்மனைக்குச் சென்று அங்கு கம்சனை அரியணை (சிங்காசனம்) யினின்றும் கீழே

தள்ளிக்கொன்றார். அதன்பின் வசுதேவரையும் தேவகியையும் சிறைநீக்கித் தாமவர்க்கு மகனெனத்தெரிவித்து உக்கிர சேனனுக்குப் பட்டஞ் சூட்டிச் சுதர்மை யென்னும் இந்திர சபையையும் தந்தருளினார்.

## 11. குருதட்சிணை.

கண்ணபிரானுக்குக் கல்விப் பருவம் வந்தது. கல்வியே ஒருவர்க்குக் கைப்பொருளும் கைகண்ட மருந்தும்.

"கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி."

கல்விக்கு ஒருக்காலும் அழிவில்லை. அதை ஒருவர்க்குக் கொடுக்கக் கொடுக்கக் கூடுமேயன்றி குறையாது. அது உள்ளத்திலிருப்பதனால் கள்ளர்க்குங் கிட்டாது. கல்வியினால் அறிவும் அறிவினால் ஒழுக்கமும் ஒழுக்கத்தினால் உயர்வும் உண்டாகும். இயற்கையாய் எத்துணை மதிநுட்பமிருப்பினும் கல்வியில்லாதவன் கால்மனிதன். எல்லார்க்கும் கல்வி இன்றியமையாதது. கண்ணியமும் புண்ணியமும் கல்வியாலாகும். ஆகவே இம்மைக்கும் மறுமைக்கும் இன்பங் கிடைக்கும். இவ்வகைக் கல்வியை ஒருவன் இளமையிற் கற்கவேண்டும்.

'இளமையிற்கல்வி சிலையிலெழுத்து'

இளமையிலும் தகுந்த ஆசிரியனிடம் கற்கவேண்டும்.

கண்ணபிரானும் பலராமனும் சாந்தீவினி என்னும் அந்தணரிடம் கல்விபயின்றனர். கல்வி முடிந்தபின் கண்ணபிரான் குருவுக்குக் காணிக்கை படைக்க விரும்பி அவருக்கு என்ன வேண்டுமென்று கேட்டார். அவரோ தமது இறந்த மகனைத் தரவேண்டும் என்று கேட்டார். கண்ணபிரானும் அதற்கிசைந்து அம்மகன் கடலில் இறந்ததை அறிந்து

வருணனிடம் சென்று அதன் வரலாற்றை வினவினர். அப்போது வருணன் சங்குவடிவு கொண்ட பஞ்சசன் என்னும் அசுரன் அவனைக் கொன்றதாகக் கூறினன். உடனே கண்ணபிரான் பஞ்சசனைக்கொன்று எமலோகஞ் சென்று இறந்த மகனைக் கொணர்ந்து குருவிடங்கொடுத்தார். மகனைக் கண்ட குருவானவர் மனைவியுடன் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தனர்.

## 12. முசுகுந்தன் முத்தி.

ஒருகாலத்தில் விதூமன் என்னுங் கந்தருவன், சுகுமாரி என்னும் பார்ப்பனியின் சாபத்தினல் முசு (குரங்கு) வாய்ப்பிறந்து கைலைச் சாரலில் ஓர் காவில் வசித்து வந்தான். அப்போது ஒரு வில்வ மரத்தின் கீழிருந்த சிவலிங்கத்தை வில்வத்தழையாற் சேவித்ததின் பெருமையால் மறுமையில் சூரிய குலமாகிய சீரிய குலத்தில் மாந்தாதா மன்னனுக்கு மகனய்ப் பிறந்தான். அவன் முற்பிறப்பில் முசுவாயிருந்ததினிமித்தம் முசுகுந்தன் எனப் பெயர் பெற்ருன். அவன் வல்லவனும் மிக நல்லவனுமாயிருக்கக் கண்டு இந்திரன் அவனுடன் நட்புக் கொண்டான்.

தேவர்க்கும் அசுரர்க்கு முள்ள தீராப்பகையினல், அசுரர் ஒருமுறை இந்திரலோகஞ் சென்று இந்திரனையும் அமரரையும் அமராபதியினின்று அகற்றிவிட்டனர். இந்திரன் அதை முசுகுந்தனிடம் முறையிட்டான். உடனே முசுகுந்தனும் உடுக்கையிழந்தவன் கைபோல இந்திரனது இடுக்கண்களைந்தான். அமராவதியை மீட்டுக் கொடுத்ததிற்காக இந்திரன் தனது ஏழு திருமூர்த்திகளையும் முசுகுந்தனுக்கு இனமாக அளித்தான்.

அசுரர் அடிக்கடி இந்திரனுக்குத் தொந்தரவு செய்வது வழக்கம். அசுரர் தலைவனாகிய சூரபத்மனை அழிக்கச் சுப்பிரமணியர் அவதரிக்குமளவும் முசுகுந்தனே தேவர்க்கு முக்கிய காவலாயிருந்தான். அதனால் தேவர் முசுகுந்தனை நோக்கி "உனக்கு என்ன வரம் வேண்டு" மென்று கேட்டனர். அதற்கு அவன் "நான் களைப்பாயிருக்கிறதினால் தூங்கி இளைப்பாற வேண்டும்" என்று சொன்னான். அவரும் அதற்கிசைந்து அவன் சுகமாய்த் தூங்கவும் இடையில் எழுப்புகின்றவன் உயிர் உடனே நீங்கவும் கட்டளை யிட்டார். அன்றே அவனுக்குத் துறக்க வின்பம் போலும் உறக்கம் வந்தது. உடனே அவன் கோமந்த பர்வதஞ்சென்று அங்குள்ள குகையொன்றில் கும்பகர்ணன் போலக் குறட்டைவிட்டுத் தூங்கினான்.

அப்போது கண்ணபிரான் கம்சனைக் கொன்றதற்காக மகதநாட்டு மன்னனாகிய சராசந்தன் என்பவன் சமருக்கு வந்தான். அவன் பிருகத்திரதன் மகன். பிருகத்திரன் நெடுகாட் பிள்ளையில்லா திருந்து காட்டிற்குச் சென்று சண்டகௌசிக முனிவர்க்குத் தொண்டு செய்துவந்தான். அவர் அவனுக்கு ஒரு மாங்கனி அளித்தார். அதை அவன் கொண்டு வந்து தன் மனைவிக்குக் கொடுத்தான். அவள் அதிற் பாதியையுண்டு மீதியைத் தன் சக்களத்திக்குத் தந்தாள். இருவரும் வயிறுவாய்த்துக் கருமுதிர்ந்ததும் தனித்தனி அரைப் பிள்ளையைப் பெற்றெடுத்தனர். பிருகத்திரதன் அவ்விரு கூறுகளையும் ஊருக்குவெளியில் எறிந்துவிட்டான். இராக்காலத்தில் சரை என்னும் அரக்கி (ராக்ஷஸி) அவ்விரண்டையும் எடுத்துப் பொருத்தினாள். உடனே ஒன்றுசேர்ந்து ஒரு குழந்தையாயின. குழந்தை உரக்கக்கத்திச் சுகத்தைக் குறித்தது. பிருகத்திரதன்

அதைச்சரையால் அறிந்து அப்பிள்ளையைக் கொண்டுவந்து பிரியமாய் வளர்த்தான். சரையால் சந்திசெய்யப்பட்டதினுல் சராசந்தன் என்று பெயர்.

சராசந்தன் கம்சனுக்குக் காதல் மாமன். அவன் சமர்த் தொழிலிற் சமானமற்ற சமர்த்தன். ஆனுல் கண்ணபிரான் உருக்குமணியைக் கவர்ந்தபொழுது அவருடன் சண்டைசெய்து தோற்ருன். அதற்கு அவர் கடவுட்டன்மையே காரணம். கண்ணபிரானுக்குத் தோற்றதை எண்ணியெண்ணி அவன் நெஞ்சம் புண்ணுயிருக்கும்போது கம்சன் கொலையைக் கேட்டது அப்புண்ணிற் கூரிய கோலிட்டாற்போலும். அதனுல் அவன் பதினெட்டு முறை படையெடுத்து வந்து பலராமனுடனும் கண்ணபிரானுடனும் சண்டைசெய்தான். ஆனுல் ஒவ்வொரு முறையும் தோற்றுப்போனுன். பதினேழாம் முறை தோற்ற பின் தன்தோழனுகிய காலயவனன் என்பவனைப் போருக்கனுப்பினுன். அப்போது கண்ணபிரான் மேல்கடலில் துவாரகையை அமைத்து அதில் மதுரைவாசிகளைக் குடியேற்றிக் காலயவனன் கடும்போர் புரியும்பொழுது பொய்யாகப் புறங்கொடுத்தோடிக்கோமந்த பருவதக் குகைக்குட் புகுந்து மறைந்தார். காலயவனனும் தொடர்ந்து சென்று அக்குகைக்குட் புகுந்து அங்கே கடுந்துயில் கொண்டிருந்த முசுகுந்தனைக் கண்ணபிரானென்று கன்னத்திலறைந்தான். முசுகுந்தன் கண்களைத்திறந்தான். காலயவனன் இறந்தான்.

பின்பு கண்ணபிரான் முசுகுந்தனுக்குக் காட்சியளித்து "என்னவேண்டு" மென்று கேட்டார். அவன் கேடில்லாத வீடு (மோட்சம்) வேண்டுமென்று வேண்டினுன். அவரும் அதற்கிசைந்து " இன்றுமுதல் நீ தவஞ்செய். மறுமையில்

அந்தணனாய்ப்பிறந்து என்னை அடைவாய்" என்று திரு வாய்மலர்ந்தருளினார். அவனும் பதரிகாச்சிரமம் சென்று தவஞ்செய்யத் தொடங்கினான்.

காலயவனன் இறந்ததைக் கண்ட சராசந்தன் மறு படியும் வந்து சமர் புரிந்தான். கண்ணபிரான், தோற்றுப் போவதுபோல் ஓட்டங்காட்டிப் பலராமனுடன் கோமந்த பர்வதத்திற்குள் ஒளித்துக் கொண்டனர். சராசந்தன் பருவதத்தை எரிமூட்டினான். கண்ணபிரானும் அண்ண பிரானும் பருவதத்திற்குள்ளிருந்து வெளியேறித் துவாரை யடைந்தார். சராசந்தன் வெட்கிச் சென்றான்.

---

## 13. திருமணத்தொடர்.

### உருக்குமணி திருமணம்.

விதர்ப்ப நாட்டு அரசனாகிய வீமனுக்கு உருக்குமணி என்றோர் மகளிருந்தாள். அவள் இளமையிலிருந்து கண்ணபிரானையே மணக்கக் கருதியிருந்தாள். அவளுக்கு மணப்பருவம் வந்ததும் அவளுடைய அண்ணனாகிய உருக் கிமி என்பவன் அவளைச் சேதிநாட்டு அரசனாகிய சிசுபால னுக்கு மணம் பேசி முடித்தான். முகூர்த்த நாளுங்குறிக் கப்பட்டது. சிசுபாலன் கண்ணபிரானுக்கு மருமகனும் பகைவனுமா யிருந்தான். உருக்குமணி, தன் கருத்தைக் கண்ணபிரானுக்குத் தெரிவித்து அவரது வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். கல்யாண தினத்தில் அவள் காளி பூஜைக்குச் சென்று வருங்கால் கண்ணபிரான் வந்து அவளை இரதத்திலேற்றிக் கொண்டுபோய் விட்டார். உடனே உருக்குமி, சிசுபாலன், சராசந்தன் முதலியோர் ஓடித் தொடர்ந்தனர். ஆனால் கண்ணபிரான் அவர்களைத்

துரத்திவிட்டுத் துவாரகை சென்றதும் உருக்குமணியை மணந்துகொண்டார். ஓராண்டு சென்றபின் உருக்குமணிக்குப் பிரத்தியும்நன் என்றொரு மகன் பிறந்தான்.

## சாம்பவதி திருமணமும் சத்தியபாமை திருமணமும்.

சத்திராஜித்து என்னும் அரசனிடம் சமந்தகம் என்றொரு மணி யிருந்தது. அதைக் கண்ணபிரான் கேட்டும் அவர்க்குக் கொடுக்கவில்லை. ஒருநாள் அவன் தம்பி அதை அணிந்துகொண்டு போம்போது ஒரு சிங்கம் வந்து அவனைக் கொன்று அம்மணியைக்கொண்டு போனது. அதைச் சாம்பவந்தன் என்பவன் கண்டு அச்சிங்கத்தைக் கொன்று அம்மணியைக் கொண்டுபோய்த் தன் மகளிடம் கொடுத்தான். சத்திராஜித்து தன் தம்பியைக் கண்ணபிரானே மணிக்காகக் கொன்றிருப்பாரென்று மதித்தான். அதை அறிந்த கண்ணபிரான் அச்சந்தேகத்தை நீக்கும்படி சாம்பவந்தனிடம் சென்று சண்டை செய்தபொழுது அவன் அவர்க்கு அம்மணியையும் தன் மகளாகிய சாம்பவதியையும் அளித்தான்.

கண்ணபிரான் மணியைக்கொண்டுவந்து சத்திராஜித்திடங் கொடுத்தார். அவன் அதற்குப் பதிலாகத் தன் மகளாகிய சத்தியபாமையை அவர்க்குத் தந்தான். அவர் சாம்பவதியையும் சத்தியபாமையையும் கல்யாணஞ் செய்தார்.

## காளிந்தி திருமணம்.

ஒருக்கால் கண்ணபிரான் பாண்டவரைப் பார்ப்பதற்காக இந்திரப்பிரஸ்தம் சென்று அங்குசில மாதம் தங்கினார். அப்போது ஒருநாள் அர்ச்சுனனுடன் காட்டிற்குச் சென்றார். அங்கு யமுனைக்கரையில் சூரியன் மகளாகிய

காளிந்தி என்பவள் கண்ணபிரானை மணக்குமாறு கடுந்தவம் புரிந்து கொண்டிருந்தாள். அதைக்கண்ணபிரான் அர்ச்சுனன் மூலமாய் அறிந்து அவளைத் துவாரகைக்குக்கொண்டு போய்க் கல்யாணஞ் செய்துகொண்டார்.

## மித்திரவிந்தை திருமணம்.

அவந்தி நாட்டை விந்தன் அநுவிந்தன் என்னும் இரு அரசர் ஆண்டுவந்தார். அவர்க்கு மித்திரவிந்தை என்றொரு உடன் பிறந்தாள் உண்டு. அவள் கண்ணபிரானையே என்றும் எண்ணியிருந்தாள். அவள் அவருக்கு அத்தை மகள். அத்தையின்பேர் ராஜாதேவி. அத்தைக்கும் மருமகனுக்கும் ஒத்த மனம். ஆனால் மைத்துனர் இருவரும் கண்ணபிரானுக்கு மித்திரவிந்தையை மறுத்துத் துரியோதனனுக்குக் கொடுக்கத்துணிந்தனர். அதனால் கண்ணபிரான் அநேக அரசர் முன்னிலையில் அவளைக் கவர்ந்து கொண்டு வந்துவிட்டார்.

## சத்தியை திருமணம்.

கோசலதேச மன்னனாகிய நக்னஜித்துக்குச் சத்தியை என்றொரு புத்திரி யிருந்தாள். அம்மன்னன் தன்னிடத்திலுள்ள ஏழு காளைகளையும் அடக்கினவனுக்குத் தன் மகளைத் தானம் செய்வதாய் அறிவித்திருந்தான். அக்காளைகள் மிகக் கொடியவை. அவற்றை ஒருவராலும் அடக்க முடியவில்லை. கடைசியிற் கண்ணபிரான் சென்று அவற்றை எளிதில் அடக்கிச் சத்தியையை மணந்து கொண்டார்.

## பத்திரை திருமணம்.

கண்ணபிரானது அத்தை (தந்தையின் தங்கை) யாகிய சுருதகீர்த்திக்குப் பத்திரை என்றொரு புத்திரி யிருந்தாள். அவள் மணப்பருவம் அடைந்தாள். அவளுடைய உடன்

பிறந்தாரின் உடன் பாட்டினால் அவளைக் கண்ணபிரான் கலியாணஞ் செய்தார்.

### இலக்குமணை திருமணம்.

மத்திரதேசத்து மன்னனாகிய விருசேனனுக்கு இலக்குமணை என்றொரு மகள் இருந்தாள். அவளுக்கு மங்கைப் பருவம் வந்ததும் விருசேனன் ஒரு மச்சயந்திரத்தை (கயற்பொறி) விண்ணில் நிறுத்தி அதை வீழ்த்தினவர்க்கு அவளை மாலை யிடச்சொன்னான். சிசுபாலன் துரியோதனன் வீமன் அர்ச்சுனன் முதலிய அரசரெல்லாம் அங்கு சென்றிருந்தனர். எந்திரத்தை எய்வதற்கென்று ஒரு இருப்புவில்லும் செய்யப் பட்டிருந்தது. அதைவளைக்கு மாறு அரசரெல்லாம் இயன்றவரை முயன்றனர். வில்லை யெடுக்கவும் அம்பைத் தொடுக்கவும் மேலே விடுக்கவும் பொறியைத் தடுக்கவுமே யன்றித் அதைத் தரையில் வீழ்த்த ஒருவராலும் முடியவில்லை. கடைசியிற் கண்ணபிரான் சென்று இலக்கு நோக்கி எய்தார். உடனே மச்சம் விழுந்தது. இலக்குமணை கையிலிருந்த மாலையும் அவர் கழுத்தில் விழுந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த அரசரெல்லாம் பொறாமைப் பட்டுக் கண்ணபிரானை எதிர்த்தனர். அப்போது கண்ணபிரான் இலக்குமணையைத் தேரின்மேல் ஏற்றிக்கொண்டு ஏராளமான அம்புகளை ஏவினார். போருக்கு வந்த அரசரெல்லாம் புறங்காட்டியோடினர். பின்பு விருசேனன் தன் மகளைக் கண்ணபிரானுக்கு மணஞ்செய்வித்தான்.

---

## 14. அறுபுரத்தழிவு.

ஒரு காலத்தில் தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன் மாலி என்னும் மூவசுரர் பிரமாவை நோக்கிப் பெருந்தவஞ்

செய்து, பொன் வெள்ளி இரும்பாலானவையும், ஆகாயத்தில் சஞ்சரிக்கக் கூடியவையும், அரனாலன்றி அழிக்கப்படாதவையுமான மூன்று கோட்டைகளைப் பெற்றுத் தேவர்கட்குப் பல தீமை செய்து வந்தார்கள். தேவர்கள் அதைச் சிவபெருமானிடஞ் சென்று முறையிட்டார்கள். சிவபெருமானும் அவர்கட் கிரங்கிப் பூமியே இரதமாகவும், வேதங்களே குதிரைகளாகவும், பிரமாவே சாரதியாகவும், மேருவே வில்லாகவும், விஷ்ணுவே அம்பாகவுங் கொண்டு அம்மூன்று கோட்டைகளையும் அழிக்கப் புறப்பட்டார். திருமால் தாம் அதற்குக் கருவியானமை பற்றிச் சிறிது செருக்குற்றபொழுது சிவபெருமான் சிரித்தார்; அச் சிரிப்பினாலேயே திரிபுரத்தை யெரித்தார். அதற்குத் திரிபுரதகனம் அல்லது முப்புரமெரித்தல் என்று பேர். அத்தகனத்தில் அறுபதினாயிரம் அசுரர் மிகுந்திருந்து, ஐம்புமார்க்கம் என்னும் தலத்தில் பிரமனை நோக்கித் தவம் புரிந்து அழித்தற்கரிய ஆறு அரணான பட்டினங்களை அடைந்திருந்தனர். அப்பட்டினங்கட்கு அறுபுரம் என்று பேர்.

அறுபுரத்தில் அறுபதினாயிரம் அசுரரும் ஆனந்தமாய் வாழ்ந்துவருகையில், பிரமதத்த முனிவர் அவ்வறுபுரத்தருகில் ஆவர்த்தை நதிக் கரையில் ஒரு அசுவமேத யாகஞ் செய்யத் தொடங்கினார். அசுவமேத யாகமென்பது உயர்ந்த குணங்குறிகளுள்ள ஒரு அசுவத்தின் (குதிரையின்) நெற்றியில், யாகஞ்செய்யும் அரசனுடைய ஊர், பேர், வீரம், வெற்றி முதலியவற்றைச் சுட்டிய பட்டத்தைக் கட்டி அதை ஒருவருக்கும் பிடிகொடாமல் உலக முழுதுஞ் சுற்றி வரச் செய்து அதன்பின் யாகஞ்செய்தல். யாகஞ் செய்யும்போது யாகக் குதிரையுடன் பல நாட்டு மிருகங்

களும், காட்டுமிருகங்களும், பறவைகளும், மீன்களும், பூச்சிகளும், புழுக்களும் இருபத்தொரு தூண்களில்கட்டப்படும். வேள்வியாசிரியன் சில மந்திரங்களை ஓதினவுடன் எல்லாம் அவிழ்த்து விடப்படும். யாகக் குதிரை ஞானக் கருத்தில் கடவுளைக் குறிக்கும். அசுவமேதயாகம் நூறு செய்தவன் இந்திர பதவியை யடைவான். ஒன்றிரண்டு செய்தார்க்குச் சந்திரபதமும் வருணபதமுங் கிட்டும்.

பிரமதத்த முனிவர் செய்த யாகத்திற்கு, வியாசர் முதலிய முனிவரும் வசுதேவர் முதலிய அரசரும் வந்திருந்தனர். யாகந் தொடங்கும்போது அறுபுரத்தசுரர் வந்து தமக்கு யாகபாகமும் பொன்னும் மணியும் பெண்ணும் பிறவுங் கேட்டனர். அவற்றை அவர்க்கு மறுத்தபடியால் அவர் அநேக இடையூறுகளால் யாகத்திற்குத் தடை செய்தனர். அப்போது வசுதேவர் வேண்டுகோட்கிணங்கிக் கண்ணபிரான் பலத்தபடைகொண்டு சென்று, நிகும்பன் முதலிய அறுபுரத் தசுரர் அனைவரையும் ஆழிப்படையால் அழித்துத் திரும்பினர்.

"நறைத் துளவம்புனை நம்பெருமாள் விறனுஞ்சொல்வதோ
மறைப்பரி பூட்டிய மாநிலத்தேரில்லை வாளெயிற்றின்
கறைப்பணி நாணுடை மேருவில் வில்லை கடும்பவனச்
சிறைத்தழலம் பில்லை யொன்றாறுபுரஞ் செற்றதற்கே."

பிள்ளைப்பெருமாளையங்கார்.

---

## 15. கண்டாகர்ணன்கதி.

கைலாயத்திலுள்ள சில சிவகணங்கட்குக் கண்டாகர்ணன் என்றொருதலைவனிருந்தான். அவன் சிறந்த சிவ பக்தனும் விஷ்ணுத் துவேஷியுமாயிருந்து, விஷ்ணுவின் பெயரையும் பிறர் வாயினின்றுங் கேளாவண்ணம் தன் காதுகளில்

கண்டாமணிகளைக்கட்டி, அவற்றை அடிக்கடி கவனமாய் ஒலித்துக்கொண்டிருந்தான். அதனால் அவனுக்குக் கண்டாகர்ணன் என்று பெயர். கர்ணம் காது.

ஒருநாள் கண்டாகர்ணன் சிவபெருமானிடஞ் சென்று, என்றும் அழியாத இன்பத்தை வேண்டினன். அப்போது சிவபிரான் "இந்திரன் முதலிய இறையவர் பதங்களில் எதைக்கேட்டாலும் நான் தருவேன். ஆனால் அந்தமில் இன்பத் தழிவில்வீடு அரிக்கே அருளமுடியும்." என்று அறிவித்தார். உடனே கண்டாகர்ணன் தன் கண்டாமணிகளைக் கழற்றி யெறிந்துவிட்டுச் சிவபெருமானுக்கு நண்பனாகிய குபேரனிடஞ் சென்று தன் செய்தியைக் கூறினன். அப்போது குபேரனும் "அந்தமிலின்பம் அரியே யருள்வர். அவர் இன்று மண்ணுலகில் கண்ணபிரானாயவதரித்துத் துவாரகை மன்னராயுள்ளார். அவர் நாமத்தையுச்சரித்தவளவில் எத்துணைத்தீமையும் தொலைந்துபோம்" என்று சொல்லித் திருவெட்டெழுத்தை (அஷ்டாக்ஷர மந்திரம்) யும் திருப்பன்னீரெழுத்தை (துவாதசாக்ஷர மந்திரம்) யும் அவனுக் கோதியுணர்த்தினன். அதன்பின் கண்டாகர்ணன் தன் கணங்களுடன் புறப்பட்டு, வழியெல்லாம் பசுக்கொலையும் பார்ப்பனக்கொலையுஞ் செய்து கொண்டு, கங்கையும் யமுனையுஞ் சங்கமமாகும் பிரயாகை சென்று கண்ணபிரானை எண்ணித் துதித்தான். அன்றே கண்ணபிரானும் அகத்தும் புறத்தும் அவனுக்குக் காட்சியளித்து, "என்னவேண்டும்?" என்றுவினவினர். அதற்கு அவன் "அழியாப் பதத்தை அருள்க" என்றான். அவரும் அருளினர்.

"மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

—குறள்.

பின்பு கண்டாகர்ணன் தன் தம்பிக்கும் முத்தியளிக்கக் கண்ணபிரானை வேண்டினன். அப்போது அவர் "உன் தம்பிக்கு என்மேலும் அன்பில்லை. உன்மேலும் அன்பில்லை. பின்பு எங்ஙனமருள்வது?" என்று கேட்டார். அதற்கவன் "உம்மேலும் என்மேலும் அவனுக் கன்பில்லாவிடினும் அவன்மேல் எனக்கன்புண்டு. ஆதலின் அதுபற்றியருள்க." என்று மன்றாடினன். அப்போது கண்ணபிரானும் அக் காரணத்தை மெச்சி அவன்தம்பிக்கும் அன்றே முத்தி யருளினர்.

கண்டாகர்ணனும் அவன் தம்பியும் கண்ணபிரானை வாழ்த்தித் தொழுது போற்றிப் புகழ்ந்தனர்.

"பாதகக் கண்டாகர்ணனெனு மியக்கன்
பத்தியற்றுன் பெரும்புகழைக் கேளோமென்று
காதிரண்டிற் சந்தமிகு மணியைக் கட்டிக்
கணப்பொழுது மோயாம லசைத்திருக்கத்
தீது நினைந்தானென்று மனத்தெண்ணமல்
சிந்தையினல் மறவாமல் தியானித்தானென்
றேதமற வவனுக்கு மவன்றம்பிக்கும்
இரங்கிமுத்தி யளித்தனையே யெம்பிரானே."

—எம்பிரான் சதகம்.

## 16. தீபாவளி.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் தீராப்பகையுண்டு. அசுரர்கள் மிகக்கொடியவர்கள். அடிக்கடி தேவர்களுக்குத் தீமை செய்வது அவர்கள் வழக்கம். அநியாயத்திற்கு அவர்கள் அஞ்சுவதேயில்லை.

ஒருக்கால் பிராக்ஜோதிடபுரத்தை யாண்ட நரகாசுரன் என்பவன் தன் பெயர் கேட்டமாத்திரத்தில் உலகமெல்லாம் நடுங்கச் செய்துகொண்டிருந்தான். ஒருமுறை இந்திரனுடைய குடை கொடிகளையும் அவன் தாயாகிய அதிதியின் குண்டலங்களையும் அவன் கவர்ந்து கொண்டான். இந்திரன் கண்ண பிரானிடம் முறையிட்டான். உடனே கண்ணபிரான் பிராக்ஜோதிடபுரம் சென்று அங்குள்ள பெரிய அரண்களையெல்லாம் அழித்தார். அப்போது முரன் என்னும் அசுரன் முன்வந்து எதிர்த்தான். கண்ண பிரான் அவனையும் அவன் குமாரரையுங் கொன்றார். பின்பு, நரகாசுரன் வந்தான். அவனையுங் கொன்று அவன் அந்தப் புரத்திலுள்ள பதினாறாயிரம் மாதரையும் பாணிக்கிரகணஞ் செய்தார்.

நரகாசுரன் உள்ளவரை உலகமெல்லாம் கோடையிடிகுமுறக் கேட்ட குகைப்பாம்புபோல நடுங்கிக் கொண்டிருந்தது. அவன் இறந்தபொழுதோ எல்லார்க்கும் இன்பம் பிறந்தது. இதற்கு அடையாளமாகவே அன்றுமுதல் இன்றுவரை ஆண்டுதோறும் ஐப்பசிமாதம் திரயோதசியிரவில் தீபமேற்றிக் களிக்கின்றனர். இதுவே தீபாவளிப் பண்டிகை. தீபமானது துன்பவிருள் தொலைந்ததைத் தெரிவிக்கும்.

கண்ணபிரான் நரகாசுரனைக் கொன்றபின் அவன் கவர்ந்த குண்டல முதலியவைகளை இந்திரனிடங் கொடுக்கச் சத்தியபாமையுடன் கருடன் மேற் சென்றார். இந்திரன் அவரைக்கண்டதும் வரவேற்று வழிபட்டான். இந்திராணியும் சத்தியபாமையை ஏற்றவாறு உபசரித்தாள். கண்ணபிரான் குண்டலமுதலியவற்றைக் கொடுத்துத் திரும்பி

வரும்பொழுது சத்தியபாமை பாரிசாதமரத்தைக் கேட்க இந்திராணி மறுத்தாள்.

பாரிசாதம் தேவலோகத்திலுள்ள பஞ்சதருக் (ஐமரம்) களில் ஒன்று. பஞ்சதருக்கள், கற்பகம், சந்தானம், அரிச்சந்தனம், மந்தாரம், பாரிசாதம் என்பன. இவை தேவர்கள் கடையும் பொழுது திருப்பாற்கடலினின்றும் பிறந்தவை. எவர் எது வேண்டினும் உடனே அளிப்பவை.

இந்திராணி பாரிசாதத்தைக் கொடுக்க மறுத்ததும் கண்ணபிரான் அதை வேரோடு பிடுங்கிவர இந்திராணி ஏவலால் இந்திரன் வந்தெதிர்த்தான். அப்போது கண்ணபிரான் தமது பாஞ்ச சன்யத்தை முழக்கி இந்திரனும் அவன் சேனையும் பின்னிடச்செய்து பாரிசாதத்துடன் துவாரகை சென்று அதைச் சத்தியபாமையின் வீட்டுப்பின் தோட்டத்தில் நாட்டினர்.

---

## 17. வாணாசுரன் வதை.

கண்ணபிரானுக்கு மைத்துனனாகிய உருக்குமி என்பவன் தன் மகள் உருக்குமவதிக்குப் போஜகடம் என்னும் புதுநகரில் சுயம்வரம் ஏற்படுத்தினான். போஜகடம் என்பது உருக்குமியால் நருமதை நதிக்கரையில் நிருமிக்கப்பட்டது.

குறித்தநாளில் அரசரெல்லாம் சுயம்வர மண்டபம் சென்று கூடினர். அவருள் கண்ணபிரான் காதன் மகனாகிய பிரத்தியும்நனும் ஒருவன். உருக்குமவதி, மாலையேந்தித் தோழியுடன் சுயம்வரமண்டபத்தில் சுற்றிவரும்பொழுது பிரத்தியும்நன் வண்ணமும் வடிவும் அவள் கண்ணைக்

கவர்ந்தன. அதுபோல உருக்குமவதியின் உடல்நலமும் பிரத்தியும்நன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவளு டைய அன்ன நடையும் மின்னலுடையும் சின்ன இடையும் பின்னு சடையும் அவன் கண்டவுடன் அரசர் முன்னிலை யில் அவளைக் கவர்ந்து கொண்டான். அது உருக்குமவதிக் கும் உடன்பாடாகையால் ஒருவரும் ஒன்றுஞ்செய்யமுடிய வில்லை. பின்பு திருமணம் நடைபெற்றது. சின்னாட் சென்று பிரத்தியும்நன் அநிருத்தன் என்பவனைப் பெற்றான். இது நிற்க.

பலிச்சக்கரவர்த்தியின் மகனாகிய பாணாசுரன் என்ப வன் ஒரு காலத்தில் பரமசிவன் திருக்கூத்திற்குப் பறை முழக்கினான். அதனால் அவர் அகமகிழ்ந்து ஆயிரங்கைகளும் அளவற்ற பொருளும் அவனுக்குப் பரிசளித்துத்தாமும் தம் பரிவாரத்துடன் அவனது அரண்மனையைப் பாது காத்துவந்தார்.

ஒருநாள் வாணாசுரன் (பாணாசுரன்) மகளாகிய உஷை என்பவள், கண்ணபிரான் பேரனாகிய அநிருத்தனைக் கன விற்கண்டு காதலித்து மறுநாட் காலை அதைத்தன் தோழி யாகிய சித்திரலேகையிடம் சொன்னாள். சித்திரலேகை தன் வித்தையின் திறமையால் அநிருத்தனை ஒருவருக்கும் தெரியாமல் துவாரகையினின்றும் தூக்கிக்கொண்டு வந்து உஷையின் அந்தப்புரத்தில் ஒளித்துவைத்தாள். அதை யறிந்த வாணாசுரன் அவனை நாகாஸ்திரத்தால் கட்டிவைத் தான்.

அநிருத்தனைக்காணாமல் துவாரகையில் அனைவரும் துன்புற்றனர். பின்பு கண்ணபிரான் நடந்தவற்றை நாரதர் மூலமாயறிந்து உடனே பலராமருடனும் படைவீரருடனும்

சோணிதபுரஞ்சென்று வாணசுரனை எதிர்த்தார். அப்போது அங்கிருந்த பூதகணங்கள் போருக்கு வந்தன. கண்ணபிரான் அவற்றை அழித்துவிட்டார். பின்பு சிவபிரான் மூக்காலும் முத்தலையுமுள்ள ஒரு சுரதேவதையை விடுத்தார். கண்ணபிரானும் ஒரு சுரதேவதையை விடுத்து அதைத்துரத்தினன். அதன்பின் அரண்மனையைக் காத்திருந்த அக்கினி தேவர் ஐவரையும் அழித்துச் சிவன், கணபதி, முருகன் முதலியோரையும் போர்த்தொழிலால் தோற்கடித்து வாணசுரன் ஆயிரந் தோள்களையும் தம் ஆழிப்படையால் அறுத்தெறியும்பொழுது சிவபிரான் வேண்டுகோட்கிணங்கி நான்கு கைகளைமட்டும் விட்டுவிட்டார். பின்பு வாணசுரன் தன் மகளை அநிருத்தனுக்கு வாழ்க்கைத் துணையாக்கி வைத்துக் கூத்தப்பிரான் முன்பு குடமுழாக் கொட்டச் சென்றான்.

கண்ணபிரான் தம் படைவீரர் புடைசூழத் துவாரகை யடைந்தார்.

"வரத்திலரனுங் கணமும் வாசல்காக்க
மதத்தவாண சுரன்மே னீவந்தக்கால்
உருத்திரனக்கினி விட நீ குளிரையேவ
உஷ்ணமுடன் குளிருமா யானுற்றக்கால்
காத்திரளிற் படையெடுத்தே யெதிர்த்தவாணன்
கைகளோ ராயிரத்தி லிரண்டு கையை
இருத்தி மற்றைக் கரங்களெல்லாந் துணித்துக் காத்தாய்
இலகு சக்ராயுதத்தரியே யெம்பிரானே."

—எம்பிரான் சதகம்.

## 18. பவுண்டரன் படாடோபம்.

ஒருக்கால் பவுண்டரன் என்னும் அசுரன் பஞ்சாயு தங்களைத் தரித்துக்கொண்டு தானே வாசுதேவன் என்று தருக்கி வாசுதேவனைப் (கண்ணபிரான்) போருக்கு அழைத்தான். அது ஒரு சிற்றெறும்பு ஒரு சிங்கத்தை அழைப்பது போல் இருந்தது.

கண்ணபிரான் அசுரர்களைக் கருவறுக்கவே அவதரித்தவர். பவுண்டரன் அதை அறியாமல் தன் காலம் வருமுன்னமே பாம்புக்கு முன் தவளைகத்துவது போல வாசுதேவனை வலிய வரவழைத்து மதயானைபோல் தன் தலையில் மண்ணைவாரிப் போட்டுக்கொண்டான்.

பவுண்டரன் தூதைக் கேட்டதும் கண்ணபிரான் கலகலவென்று சிரித்தார். சிங்கங்கள் எப்போதும் சேற்றுப் பன்றிகள் மேற்செல்லாமல் சிறந்த யானைகள் மேற்செல்லும். அதுபோல வீரர்கள் எப்போதும் வலியவருடனேயே போர் செய்வார்கள். கண்ணபிரானுக்குப் பவுண்டரனை எதிர்ப்பது கௌரவக் குறைவாயினும் அவன் தம்மை வலிய அழைத்ததினாலும் அவனை வதஞ்செய்வது தமது கடமையாதலாலும் அவனுடனும் போருக்குச் சென்று ஆழிப்படையை (சக்கராயுதம்) எறிந்தார். அது அவன் தலையைத் தகர்த்து முடியை உடைத்தது. அதன்பின் அவனுக்குத் துணை வந்திருந்த காசியரசன் தலையையும் ஒரு அம்பினால் அறுத்தெறிந்தார். அது கண்ட காசியரசன் மகன் கண்ணபிரானிடம் பழிக்குப் பழிவாங்கும் பொருட்டுச் சிவனை நோக்கித் தவஞ்செய்து ஒரு அபிசார வேள்வி வளர்த்தனன். அதினின்றும

ஒரு பூதம் புறப்பட்டது. அதை அவன் துவாரகை மேல் ஏவினன். அது உடனே துவாரகைக்குச் சென்று அதைச் சுட்டது. அப்போது கண்ணபிரான் தம் ஆழிப்படையை எடுத்தார். அதனால் அப்பூதம் துவாரகையை விட்டுத் திரும்பிப் போய்க் காசியரசன் மகனையே கொன்றது. தான் வெட்டின குழியில் தானே விழுந்தான்.

---

## 19. காண்டவ தகனம்.

பரதவம்சத்துப் பாண்டுவின் மக்களாகிய பாண்டவர் ஐவருள் நடுவோனாகிய அர்ச்சுனன், தென்றிசைக்குத் தீர்த்த யாத்திரை சென்று திரும்புங்கால், கண்ணபிரான் துணையால் அவர் தங்கையாகிய சுபத்திரையைத் துவாரகையினின்றும் இந்திரப்பிரஸ்தங் கொண்டுபோய்க் கலியாணஞ் செய்தான். அதற்குக் கண்ணபிரான் சென்று அங்கு சில நாள் தங்கினார். அப்போது இளவேனில் வந்தது. மரங்களெல்லாம் தீப்பற்றுவதுபோல் இளந் தளிர்களை யேந்திப் பின்பு இருண்டுதழைத்தன. மலர்கள் அரும்பி மலர்ந்தன. வண்டுகள் அவற்றின் தேனையுண்டு ரீங்காரஞ் செய்வதினாற் சுருதிகூட, குயில்கள் கிருதி பாட, மயில்கள் பரத மாட, செம்புகம் மேளங்கொட்ட மரங் கொத்தி தாளந்தட்டக் காடக மெல்லாம் நாடக மாயின. இந்திரப்பிரஸ்தத்தார் இளவேனில் விழவயர்ந்தனர்.

இருமாதஞ்சென்றதும் இளவேனில் முடிந்து முது வேனிலாயிற்று.

"கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்திய லிழந்த வியனிலம் போல

வேனலங் கிழவனோடு வெங்கதிர் வேந்தன்
றானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல்பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலையென்பதோர் படிவங் கொள்ளும்."

என்றபடி வளநாடெல்லாம் வற்றி வறண்டன. அப்போது ஒருநாள் அக்கினி தேவன் அர்ச்சுனனும் கண்ணபிரானும் கூடியிருக்கும்போது அந்தண வடிவு கொண்டு அவர்முன் நின்று அன்னம் வேண்டினன். அவர் அதற்கு இசைந்தவுடன் அக்கினி தன் சுயவடிவுகொண்டு "நான் அந்தணனல்லேன். அக்கினியாவேன். காண்டவ வனமே எனக்கு வேண்டுமுணவு. அது இந்திரன் காவலாதலின் எனக்கு இடையூறு வராமற் காத்தருள்க." என்று வேண்டிக்கொண்டான். அப்போது அர்ச்சுனனும் கண்ணபிரானும் அதன் அருமையைக்கண்டும், வாக்குமாறுத வள்ளலாராதலின் தம் வாக்கைக் காக்கும் வண்ணம் காண்டவ வனத்தை அக்கினிக்கே அளித்தனர். உடனே காண்டவ வனம் ஊழியிறுதி (யுகாந்தம்) போல் மூண்டெரிந்தது. அக்கினிக் கொழுந்துகள் ஆகாயத்தில் எழுந்தன. புல், செடி, கொடி, மரம் ஆகிய நால் வகைத்தாவரங்களிலும் முறையே நெருப்புத்தாவிற்று. ஆல் வேல், களா விளா, மரா குரா, வாழை தாழை, தென்னை புன்னை, வேங்கை மூங்கில், பாக்கு தேக்கு, அரசு புரசு, அத்தி இத்தி, நாகம் பூகம், முதலிய பல மரங்களும் யோகியர் போலச் சோதியிற் கலந்தன. செம்மலர் கருமலராகவும், கருமலர் செம்மலராகவும் மாறின. களிறுகள் பிளிறின. வாணவேடிக்கை போல் வேணு (மூங்கில்) வெடித்தன. வனமுழுதும் ஒரே அழற்பிழம்பாய் வளர்ந்தது.

இந்திரன், காண்டவம் எரிவதைக் கண்டதும் அடங் காக்கோபங் கொண்டு சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலா வர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவர்ணம் என்னும் எழு மேகங்களையும் ஏவினான். அவை அக்கணமே அக்கினியை அணைக்குமாறு பெருந்தாரைகளாய்ப் பொழிந் தன. நீரும் நெருப்புமாகிய இரு பூதங்கட்கும் போர் நிகழ்ந்தது. அர்ச்சுனன் கண்ணபிரான் அருளால் தன் காண்டீபம் என்னும் வில்லை வளைத்துக் கணைமாரியை விடுத் தான்; கனமாரியைத் தடுத்தான். அக்கினிமேல் ஒரு துளியும் விழாதபடி அம்புகள்போய் அந்தரத்தில் பந்த ரமைத்தன. அதனால் அக்கினிக்கு அச்சம் அகன்றது. உலகமெல்லாம் ஊழி முடிவில் இறைவனுக்குள் ஒடுங்குவது போல், காண்டவமும் அக்கினிக்குள் பெரும்பான்மை அடங்கிற்று. வகைவகையாய் எழுந்த புகைத்தொடர்கள் ஏழுமேகங்களையும் எதிர்த்தன.

அக்கினிக்குத் துணையாய் அர்ச்சுனனுங் கண்ண பிரானும் நிற்பதைக் கண்ட இந்திரன், அட்டதிக்குப் பாலகருள் தன்னையும் தன் பகையையும் ஒழிந்த அறுவ ருடனும் பன்னிரு சூரியரும் பதினொரு ருத்திரரும் எண் வசுக்களும் இரு மருத்துவருமாகிய முப்பத்து மூன்று தேவர்தலைவருடனும் போருக்கு வந்தான். அவன் அர்ச் சுனனுக்குத் தந்தையும் கண்ணபிரானுக்கு அண்ண னுமாயிருந்தான். ஆனால் அக்கினியினிமித்தமே தம்பி யையும் மகனையும் இந்திரன் எதிர்க்கத் துணிந்தது. அவரும் அவனிமித்தமே இந்திரனை எதிர்த்தார். நெடுநேரம் போர் நிகழ்ந்தது. இந்திரனும் அவன் துணைவரும் இளைத்தனர். அர்ச்சுனனோ சிறிதும் அயரவில்லை; நொடிதோறும் மாற்றார் படைகளை நூற்றுக்கணக்கான அம்புகளால் மாற்றிக்

கொண்டிருந்தான். அப்போது ஓர் அசரீரி எழுந்து "ஓ! அமரர்காள்! அமரினை ஒழியுங்கள்! அமரினை ஒழியுங்கள். கீழ் நின்று போர் செய்வார் மானிடரல்லார். அவர் நரனும் நாரணனும்" என்று சொல்லி மறைந்தது. உடனே இந்திரனும் போரை நிறுத்தினன். வானவரெல்லாம், அர்ச்சுனனை வில்லுக்கும் விஜயன் சொல்லுக்கும் விஜயன் என்று வாழ்த்திச் சென்றனர்.

காண்டவ வனத்தில் தக்ஷகன், அச்சுவசேனன், மயன், என்னும் மூவரும் மூன்று சாதகப் பறவைகளுந் தவிர எல்லாம் இறந்தன.

தக்ஷகன் என்பவன் ஒரு சர்ப்பராஜன். அவன் இந்திரனுக்கு நண்பன். அவன் முதலிலேயே குருநாடு போய்ச் சேர்ந்துவிட்டான். இந்திரன் அவனைக் காண்டவவனத்திற் காணாது கலங்கிப் பின்பு அசரீரியால் அறிந்து தெளிந்தான்.

அச்சுவசேனன் தக்ஷகனது மகன். அவனை அவன் தாய் விழுங்கிக்கொண்டு எழுந்தபோது அர்ச்சுனன் அவள் தலையை அம்பினால் அறுத்தான். அவள் இறந்தாள். அச்சுவசேனன் மட்டும் வால் அறப்புண்டவனாய் அர்ச்சுனன் பகைவனாகிய கர்ணனிடம் சென்று அவன் கையில் அம்பாயமைந்தான்.

மயன் என்பவன் தெய்வத்தச்சன். அவன் அர்ச்சுனனை அபயமடைந்து அக்கினிக்குத்தப்பினான். அதற்கறிகுறியாக அவன் பாண்டவர்க்கென்று இந்திரப்பிரஸ்தத்தில் ஒரு பலமான மாளிகையைக் கட்டிக் கொடுத்தான்.

சாதகப் பறவைகள் மூன்றும் மந்தபால முனிவர்க்குப் பிறந்தவை. அம்முனிவர் வேண்டுகோளால் அம்மூன்றும் காக்கப்பட்டன.

“ பாண்டவர்கள் புரிந்ததவப்பயனுகி யவதரித்துப்
பகைத்து மேன்மேல்
மூண்டவினை முழுவதுவு முனைதோறு முரண்முருக்கி
முகில் புகாமற்
காண்டவமுங்கனல் வயிற்றுக் கனல்தணிய நுகருவித்துக்
காக்குமாறே
பூண்டருளெம் பெருமானைப் போற்றுவாரெழுபிறப்பு
மாற்றுவாரே. ”

—வில்லிபுத்தூராழ்வார்.

---

## 20. சமர்ப்பிச்சை.

மகத நாட்டு மன்னனுகிய சராசந்தன், தன் மருமகனுகிய கம்சனைக் கண்ணபிரான் கொன்றதினிமித்தம் அவர் மேற் பதினெண் முறை படையெடுத்து வந்ததினுல், அவர் ஒரு முறை தம் நாட்டில் ஒரு பகுதியை இழக்கவும் ஒரு முறை கோமந்த பர்வதத்தில் ஒளிக்கவும் கடைசியாய் மதுரையை விட்டுத் துவாரகை செல்லவும் நேர்ந்தது. ஆனல் கண்ணபிரானை வெல்லவாவது கொல்லவாவது சராசந்தனுக்கு முடியவில்லை. கண்ணபிரானும் சராசந்தனைக் கொல்லும் சமர்த்தரேனும் காலம் வருமட்டும் பொறுமையாய்க் காத்திருந்தார். கடைசியில் ஒரு நல்ல சமயம் வாய்த்தது.

நாரதமுனிவர் ஈரேழுலகுஞ் சுற்றிவருகையில் எமலோகஞ்சென்று பாண்டுவைக் கண்டார். பாண்டு இந்திரலோகஞ் செல்லவிரும்பித் தன் மகனுகிய தருமனை இராஜசூயயாகஞ் செய்யத் தூண்டுமாறு நாரதரை வேண்டினுன்.

நாரதரும் அதற்கிசைந்து இந்திரப்பிரஸ்தஞ் சென்று தருமரிடம் அவர் தந்தையின் விருப்பத்தைத் தெரிவித்தார். உடனே தருமரும் இராஜசூய யாகஞ் செய்யத் துணிந்தார்.

இராஜ சூயமென்பது ஓர் அரசவேள்வி. அதைச் செய்கின்ற அரசன் உலகத்திலுள்ள அரசரை யெல்லாம் வென்று திறை கொள்ள வேண்டும். அதன் பின் வேள்வியை முடித்து அரசர்க்கரசனாய்ச் சம்ராட் பட்டம் பெறுவன்.

தருமர் தம்பிமார் திசை வெற்றிக்குச் செல்லுமுன் கண்ணபிரான் இந்திரப்பிரஸ்தஞ் சென்று சராசந்தனையே முதன் முதற் கொல்லுமாறு பாண்டவருடன் சூழ்ச்சி செய்தார். அதன்படியே கண்ணபிரானும் வீமனும் அர்ச்சுனனும் அவனைத் தந்திரத்தாற் கொல்லக் கருதி அந்தண வடிவு கொண்டு கிரிவிரசஞ் சென்று சராசந்தனிடம் சமர்ப் பிச்சை வேண்டினர். சராசந்தன் அந்தணப் பிரியனும் கொடையாளியுமாயிருந்ததினால் அதற்குடம்பட்டான்.

கொடையென்பது ஒருவகைப் பிறவிப் பைத்தியம். அதுவே கீர்த்திக்குக் காரணம்.

> "உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
> றீவார்மேல் நிற்கும் புகழ்."

என்றார் திருவள்ளுவர்.

கொடைக்கு இன்ன பொருள்தான் உரியதென்னுங் குறிப்பில்லை. எவர் எதுகேட்டாலும் இல்லை யென்னாமற் கொடுப்பதே கொடையெனப்படும். அதற்குப் பகையென்றும் நட்பென்றும் அயலென்றுமில்லை. உலகத்தில்

தமக்கு உறுதியான உடலையுங் கொடுத்து உதவின உதாரர் பலர். ததீசி முனிவர் முதுகெலும்பையும் கர்ணன் கவச குண்டலங்களையும் சிபிச்சக்கரவர்த்தி உடற்சதையையும் உதவிப் புகழ்பெற்றனர். ஆனால் சராசந்தன் கொடியவனாயிருந்ததினால் மாபலிபோல் இட்டும் புகழ்பெற்றிலன். குடியினாற் குடியர் முடிவதுபோலக் கொடையினாற் கொடைஞர் மடிவர்.

சராசந்தன் சமர்ப்பிச்சைக் கிசைந்ததும் கண்ணபிரான் முதலிய மூவரும் தத்தம் உண்மை வடிவுகொண்டு தம்மை இன்னின்னாரென்றும் அறிவித்தனர். சராசந்தன் மறமுந் திறமுமுடைய மானியாதலின் உள்ளம் பூரிக்க உடல் பாரிக்க வீமனுடன் போருக்குப் புறப்பட்டான். இருவரும் ஒருவரையொருவர் காலாலுங் கையாலுங் கதையாலும் தாக்கியுந் தள்ளியுந் தடுக்கியும் பதினைந்து நாள் போர் புரிந்தனர். சராசந்தன் சிறிதும் தளரவில்லை. கடைசியில் கண்ணபிரான் வீமனுக்கெதிரே ஒரு துரும்பையெடுத்து இரண்டாய்ப் பிளந்தெறிந்தார். வீமன் அதன் குறிப்பையறிந்து சராசந்தன் காலிரண்டையும் பிடித்துப் பிளந்தான். உடனே சராசந்தன் உடல் கிழிந்திறந்தான். பின்பு அவன் சிறையிட்டிருந்த அரசரையெல்லாம் விடுவித்தபின் மூவரும் இந்திரப்பிரஸ்தம் திரும்பினர்.

சராசந்தனைக் கொன்றது வீமனாயினும் கண்ணபிரானே வீமனைக் கருவியாக் கொண்டு சராசந்தனைக் கொன்றாரென்று கொள்ளப்படும்.

"பலவிசையச் சராசந்த னுன்றன்பேரிற்
 படையெடுக்க முறிந்தோடிப் பின்பொருக்கால்
மலைமிசைநீ யேறத்தீ மூட்டிநீதான்
 மடிந்தனையென் றெண்ணிமிகச் சயமாயுற்றால்

அலேவின்றி நீயுதித்து மாறுபாகம்
ஆகவொரு தரும்பினைத்தான் பிளந்தெறிந்தே
இலகுபல முளவீம சேனன் கையால்
இருபிளவாக்கினையரியே யெம்பிரானே."

—எம்பிரான்சதகம்.

## 21. அக்கிரபூஜை.

சராசந்தனைக் கொன்றபின் தருமர் தம்பிமார் நால்வரும் திக்குவிஜயஞ் செய்யச் சென்றனர். அர்ச்சுனன் வடதிசைக்குச் சென்று சாளவம் காம்போஜம் முதலிய நாட்டரசரையும் வீமன் கீழ்த்திசைக்குச் சென்று மச்சம் மாளவம் முதலிய நாட்டரசரையும் சகாதேவன் தென்திசைக்குச் சென்று அவந்தி விதர்ப்பம் முதலிய நாட்டரசரையும் நகுலன் மேற்றிசைக்குச் சென்று மத்திரம் கௌடம் முதலிய நாட்டரசரையும் வென்று திறைகொணர்ந்தார்.

திக்குவிஜயம் முடிந்ததும் யாகந் தொடங்கிற்று. அரசரையும் முனிவரையும் தருமர் அழைத்திருந்ததினால் அவர் அனைவரும் வந்திருந்தனர். கண்ணபிரான் தலைமையாய் நின்றார். வியாசர் வேதவிதிப்படி முனிவரால் வேள்வியை நடப்பித்தார். தரணியாளர் தந்த திறைகளெல்லாந் தக்கார்க்குத் தானஞ் செய்யப்பட்டன. வீமன் அமுது படைத்தற்கும் விசயன் வாசனைப் பொருள் பகிர்தற்கும் கர்ணன் தானஞ் செய்தற்கும் துரியோதனன் நிதிக்காவற்கும் நியமிக்கப்பட்டனர். தருமர் திரௌபதியுடன் கண்ணபிரானையும் பீஷ்மரையும் வணங்கி மும்முறை வேள்வித்தீயை வலம் வந்தமர்ந்தனர். யாகம் யாதோர் இடையூறுமின்றி நடைபெற்றது.

யாகமுடிவில் தருமருக்கு அக்கிரபூஜை யார்க்குச் செய்வதென்னும் ஐயம் பிறந்தது. அதனால் அவர் அனைவரையும் பார்த்து அக்கிரபூஜை யார்க்குச் செய்வதென்று வினவினர். அப்போது சகாதேவன் எழுந்து கண்ண பிரானே அதற்குரியார் என்று சொன்னான். அவையாரும் அதற்கிசைந்தனர். பின்பு தருமர் கண்ணபிரான் திருவடிகளை நன்னீராற் கழுவி எஞ்சினதைத் தம்தலைமேல் தெளித்துப் "புண்ணியனானேன். புனிதனானேன்." என்று மகிழ்ந்தார்.

கண்ணபிரானுக்கு அக்கிரபூஜை செய்தது சிசுபாலனுக்குப் பொறுமையாயிருந்தது. அவனுக்கும் அவருக்கும் நெடுநாட்பகை.

ஒருகாலத்தில் வைகுந்தத்தில் ஜயவிஜயர் என்னும் வாயிற்காவலர் இருவர் இருந்தனர். அப்போது சனந்தாதி முனிவர் திருமாலைக் காணவந்தார். வாயிற்காவலர் அவருக்கு வழிவிடவில்லை. அதுபற்றி முனிவர் அவ்விருவரையும் மானிடராய்ப் பிறக்கச் சபித்தார். வாயிற்காவலர் விஷ்ணுவிடம் சென்று முறையிட்டனர். விஷ்ணு அம்முனிவரைச் சாபவிடை செய்யுமாறு வேண்டினர். அப்போது முனிவர் ஜயவிஜயரைப் பார்த்துத் "திருமாலுக்குப் பக்தராயிருக்கும் எழுபிறப்போ? அல்லது அவர்க்குப் பகைவராயிருக்கும் முப்பிறப்போ? எதுவிருப்பம்?" என்று கேட்டார். வாயிற்காவலர் சீக்கிரமாய் வைகுந்தஞ் சேர்தற்பொருட்டுப் பகைப்பிறப்பு மூன்றே வேண்டினர். முனிவரும் அதற்கிசைந்தார்.

பின்பு ஜயவிஜயர் கிரேதாயுகத்தில் இரணிய இரணியாட்சராய்ப்பிறந்து முறையே நரசிங்க வராக அவதாரங்களாற் கொல்லப்பட்டும், திரேதாயுகத்தில் இராவண கும்ப

கர்ணராய்ப்பிறந்து இராமாவதாரத்தாற் கொல்லப்பட்டும் இருபிறப்பை முடித்துப் பின் மூன்றும் பிறப்பில் சிசுபால தந்தவக்ரராய்த் துவாபரயுகத்திற் பிறந்தனர்.

சிசுபாலன் தமகோஷனுக்கும் சுருதசிருவைக்கும் பிறந்தவன். கண்ணபிரானுக்குச் சுருதசிருவை அத்தை யாதலின் சிசுபாலன் மருமகன். சிசுபாலன் பிறக்கும் பொழுது முக்கண்ணனையும் நாற்கையனையும் பிறந்தான். அப்போது ஓர் அசரீரி "எவன் மடியில் இவன் இருக்கும் பொழுது இவனுடைய மிகைக்கண்ணும் கையும் மறை கின்றனவோ அவனே இவனைக் கொல்வான்" என்று அறைந்து மறைந்தது. அதிலிருந்து சுருதசிருவை சிசுபால னைப் பலர்மடியிலும் வைத்துவருவது வழக்கம். ஒருநாட் கண்ணபிரான் அவனைக் காணச்சென்றார். சுருதசிருவை அவனை அவர் மடியிற் கிடத்தினள். உடனே அவன் மிகைக்கண்ணுங் கைகளும் மறைந்தன. அதனாற் கண்ண பிரானே அவனைக் கொல்பவரென்று கண்டு சிசுபாலன் செய்யும் பிழைகளையெல்லாம் பொறுத்துக் கொள்ளுமாறு கண்ணபிரானைச் சுருதசிருவை பன்முறை வேண்டினள். அதற்குக் கண்ணபிரானும் இசைந்து நூறுமுறை பிழை பொறுப்பதாய் வாக்களித்தார். சிசுபாலன் இளமை முதற் கண்ணபிரான்மேற் பகை காட்டினன். அப்பகை உருக்கு மணி அபகரணத்தாற் பன்மடங்கு அதிகரித்தது.

இராஜசூய யாகத்தில் கண்ணபிரானுக்கு அக்கிரபூசை செய்ததும் சிசுபாலன் அடங்காச் சினமும் அகங்காரமும் அழுக்காறுங்கொண்டு அரசரெதிரில் கண்ணபிரானை இடைய னென்றும் மடையனென்றுங் கடையனென்றுங் கண்ட படி வைது திட்டினன். கண்ணபிரான் நூறுமுறைக்கு

மேற் பொறுக்கமுடியாதவராய்ச் சக்கராயுதத்தை யெறிந்து அவன் தலையைத் தகர்த்தார். உடனே அவன் தலையினின்றும் ஓர் ஒளி கிளம்பிக் கண்ணபிரானுடன் கலந்தது.

அரசர் யாவருங் கண்ணபிரானை வாழ்த்தித் தத்தம் நாட்டிற்குத் திரும்பினர். கண்ணபிரானுந் துவாரகை சென்றார்.

> " பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
> வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
> ஆர்க்கு மருவி யணிமலை நன்னாட
> பேர்க்குதல் யார்க்கு மரிது."

—நாலடியார்.

---

## 22. துரோபதை துகில்.

பாரதவம்சத்தில் பாண்டுவின் மக்களாகிய பாண்டவரும் திருதராஷ்டிரன் மக்களாகிய துரியோதனாதியரும் இளமை முதல் பகைமை பாராட்டி வந்தனர். பாண்டு, திருதராஷ்டிரனுக்குத்தம்பி. பாண்டவரும் துரியோதனாதியரும் சிற்றப்பன் மக்கள் பெரியப்பன் மக்களாவர். பாண்டவர் ஐவராயிருந்ததினால் பஞ்சபாண்டவரெனப்பட்டார். அவருக்கு முறையே தருமன், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்று பெயர். அவரைப் பஞ்சவர் என்று சொல்வதுமுண்டு. தருமருக்கு மறுபெயர் யுதிஷ்டிரர். அர்ச்சுனன் பங்குனியுத்திரத்தில் பிறந்ததினால் பற்குனன் என்றும் வெண்ணிறமா யிருந்ததினால் அர்ச்சுனனென்றும், பிரதையின் மகனாகையால்

பார்த்தன் என்றும் இந்திரன் சூட்டிய கிரீடத்தை யணிந்ததினால் கிரீடியென்றும் வெண்குதிரைத் தேருடைமையால் சுவேத வாகனனென்றும் வெற்றி வீரனாகையால் விஜயனென்றும் அறியாமையை அகற்றினதினால் கிருஷ்ணனென்றும் இருகையாலும் படைதொட்டதினால் சவ்வியசாசியென்றும் பகைவர் பொருளைக் கவர்ந்ததினால் தனஞ்செயன் என்றும் பெயர் பெற்றான். பாண்டவர் ஐவருக்கும் ஒரே பத்தினியிருந்தாள். அவள் பாஞ்சால நாட்டரசனாகிய துருபதன் மகளாகையால் அவளுக்குப் பாஞ்சாலி யென்றும் துரௌபதை யென்றும் பெயர்.

திருதராஷ்டிரனுக்குத் துரியோதனன் முதலிய நூறு மக்கள் பிறந்ததினால் அவர் துரியோதனாதியரென்றும் நூற்றுவரென்றுஞ் சொல்லப்பட்டார். அவர் மூர்க்கரும் துன்மார்க்கருமா யிருந்தார். பாண்டவரோ பலசாலிகளும் குணசாலிகளுமாயிருந்தனர். நூற்றுவர்க்கு அஸ்தினபுரியும் பஞ்சவர்க்கு இந்திரப்பிரஸ்தமும் தலைநகர்.

கண்ணபிரான் எப்போதும் பாண்டவர் பக்கமே யிருந்து பாண்டவர் சகாயரெனப்பட்டார். பாண்டவர் அவருக்கு அத்தை மக்கள். அதோடு அர்ச்சுனனும் அவர் தங்கையாகிய சுபத்திரையைக் கலியாணஞ் செய்து கொண்டான். அர்ச்சுனனுங் கண்ணபிரானும் ஏற்கனவே நர நாராயணராகவும் இலக்ஷ்மண ராமராகவும் இரு பிறப்பில் இணைபிரியாதிருந்தவர். பாண்டவரைப்போலவே துரியோதனாதியரும் கண்ணபிரானுக்கு வேண்டியவராயினும் துரியோதனாதியர் துரோகிகளாயிருந்ததினிமித்தம் அவர் அவர்பக்கம் சாரவில்லை.

தருமர் முதலாவது, இந்திரலோகம் போலும் இந்

திரப்பிரஸ்தங்கட்டினதும் பின்பு இந்திரனுலுஞ் செய்தற்கரிய இராஜ சூயயாகம் வேட்டுச் சம்ராட் பட்டம் பெற்றதும் துரியோதனன் எண்ணியெண்ணிப் பொருமையாற் புழுங்கித் திடீரென்று அவர்மேற் போருக்குப் புறப்பட்டான். அப்போது அவன் மாமனுகிய சகுனி பாண்டவரைப் பலத்தினுல் வெல்ல முடியாதென்றுதடுத்துச் சூதினுல் வெல்வதற்கு ஒரு சூழ்ச்சி சொன்னுன். அதன்படியே நெஞ்சமெல்லாம் நஞ்சமான துரியோதனன் சிறந்த சிற்பிகளைக் கொணர்ந்து ஒரு சிங்காரமண்டபம் கட்டுவித்தான். பின்பு அதைப்பார்ப்பதற்காகப் பாண்டவரும் கண்ணபிரானும் உள்ளிட்ட பல அரசர்களையும் வரவழைத்தான். அனைவரும் வந்திருந்தனர். மண்டபவிழா மாண்பாய் நடைபெற்றது. எல்லாரும் விருந்துண்டு இன்பமாயிருக்கும் போது துரியோதனன் தருமரைச் சூதிற் கழைத்தான். அப்போது தருமர் அரசவையில் அதை மறுக்க முடியாமல் காலப்போக்கிற்கென்று கவருடத்துணிந்தார். சூது பஞ்சபாதங்களில் ஒன்று. பஞ்ச பாதகமெனினும் ஐம்பெருங் குற்றமெனினும் ஒக்கும். அவை காதல், கவறு, குடி, பொய், உலோபம் என்பன.

“ காதல் கவருடல் கள்ளுண்டல் பொய்மொழிதல்
ஈதன் மறுத்தல் இவைகண்டாய்—போதில்
சினையாமை வைகும் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி.”

“ அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத்தேய்க்கும்—மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்ருர் தெரிந்து.”

"உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்குமானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோடன் பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து."

—நளவெண்பா.

பஞ்சபாதங்களிற் சூதையும் உலோபத்தையும் நீக்கிக் கொலை, களவு என்பவற்றைக் கூட்டுவதுமுண்டு. பஞ்ச பாண்டவர் பஞ்சபாதகமும் அற்றவர். அவர்க்குள்ளும் தருமர் மிகவும் தருமர். தம்மைப்போல் பிறரை யெண்ணும் தனிவள்ளல். குற்றமொன்றும் பாராட்டாக்குரிசில். ஆயினும் அவர் பாதகர்போல் சூதாடத் தொடங்கினது பண்டைவினையின் பயன்.

சூதும், தாயம், சீட்டு, கவறு, கட்டம், சொக்கட்டான் எனப்பல. அவற்றுள் துரியோதனன் ஆடினது சொக்கட்டான். அவன் தானேயாடாமல் தன் மாமனாகிய சகுனியைத் தன் பேருக்காடச் சொன்னான். சகுனி சூதாட்டத்தில் சமர்த்தன். அவன் முதலில் தருமர் பக்கமாகவே இரண்டோர் ஆட்டத்தைக்காட்டி அவர் நாட்டத்தைக் கவர்ந்தான். தருமரோ அதையறியாமல் தம் திறமையை வியந்து தம் நாடு நகரமெல்லாம் பணயமாய் வைத்தார். பின்பு சகுனி துரியோதனன் பக்கம் ஆடத்தொடங்கினான். தருமர் விரைவில் தம் நாடு நகரமெல்லாந் தோற்றதுடன் தம்மையும் தம் தம்பிமாரையும் தோற்றார். உடனே துரியோதனன் பாண்டவர் உடைமைகளைக் கவர்ந்து பாஞ்சாலியையும் கூந்தலைப்பிடித்து வேந்தர் முன் கொணரச்செய்து துச்சாதனன் மூலமாய்த் துகிலுரிந்தான். அப்போது அவள் கண்ணபிரானை அழைத்துக் கண்ணீர் விட்டாற்றினாள். கண்ணபிரானும் கருணைகூர்ந்து அவள்

உடையை உரிய உரிய வளரச் செய்து மானங்காத்தார். அது கண்ட துரியோதனன் துரோபதையை வலிதிற் பற்றித் தன் தொடையிலிருத்தினன். அதனால் அவள் அவனுயிரைத் தொடைவழியாய் நீங்கச் சபித்துத் தன் குலைந்த கூந்தலையும் துரியோதனாதியர் பாரதப்போரில் பாண்டவரால் கொல்லப்பட்டபின்பே கூட்டி முடிப்பதாகச் சபதங் கூறினள்.

பின்பு தருமர் தமது தருமத்தையே பணயமாக வைத்து மறுபடியும் சூதாடித் தாம் முன்பு தோற்றவைகளையெல்லாம் மீட்டார். ஆனால் துரியோதனன் அவற்றை அவருக்கு அளிக்காது, பாண்டவர் ஐவரும் பன்னீராண்டு வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாத வாசமு (மறைந்துறைதல்) மாகப் பதின்மூன்றாண்டு கழித்து வந்தால் மட்டும் பாரளிப்பதாகச் சொன்னன். அதன்படியே பாண்டவரும் நாட்டைவிட்டுக் காட்டையடைந்தார். அதன்பின் கண்ணபிரான் துவாரகை சென்றார்.

"தண்டுளவம்புனை தாரரங்கா வைவர்தையலுக்கு
வண்டுகிலொன்றவைக்கண்ணுற்றபோதுதன்மன்னர் முன்னே
கண்டுளி சோரத் தொழுதுநின்பேர் கட்டுரைத்த பின்னை
யொண்டுகில் கோடி குவிந்த தெம்மாய முரிந்துரிந்தே."

—பிள்ளைப்பெருமாளையங்கார்.

---

## 23. பாண்டவர் தூது.

பாண்டவர் பன்னீராண்டு வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாதவாசமுஞ் செய்த பின்பு முன்செய்த உடன்படிக்கைப்படி துரியோதனனிடம் நாடுவேண்டுமாறு உலூக

முனிவரைத் தூது போக்கினர். துரியோதனன் அதற்கு உடன்படவில்லை. அதனால் பாண்டவர் தாம் செய்ய வேண்டிய கடமையைக் கண்ணபிரானுடன் சூழத் தொடங்கினர்.

அரசர் பகையழித்தற்குக் கையாடும் முறைகள் நான்கு. அவை சாமம், பேதம், தானம், தண்டம் என்பன. அவற்றுள் சாமமென்பது இன்சொற் சொல்லுதல். பேதமென்பது இன்சொல்லும் வன்சொல்லுங் கூறிப் பகைவர் மனதை வேறுபடுத்துதல். தானமென்பது தகுந்த கொடை. தண்டமென்பது கொடுந்தண்டனை. அது உறுப்பறை, மானக்கேடு, அபராதம், கொலை, சிறை எனப்பலவகை. எப்போதும் தண்டம் மெலியாரிடத்தும் தானம் வலியாரிடத்துஞ் செயத்தக்கன. ஏனையிரண்டும் எல்லாரிடத்துஞ் செய்யத்தக்கன. இவற்றுட் பாண்டவர் கொண்டது சாமமுந் தண்டமும்.

தருமர் எப்போதும் அறக்கருணையும் அவர் தம்பிமார் மறக்கருணையும் உடையவர். அறக்கருணையாவது அன்னை போற் குற்றம் பொறுப்பதும் அன்பாயிருப்பதும். மறக்கருணையாவது தந்தை போல் அன்பாயிருந்து குற்றத்திற்குத் தக்க தண்டனை செய்தல். இவையிரண்டும் எல்லா அரசர்க்கும் தலைவர்க்கும் இன்றியமையாதவை.

துரியோதனன் நாடளிக்க மறுத்ததினால் அவனுடன் போருக்குச் செல்வதே பாண்டவர்க்குக் கருமமுந் தருமமும். ஆனால் தருமருக்குத் தம் தந்தைமாரையும் தம்பிமாரையுங் குரவரையும் கொல்ல ஒரு சிறிதும் இசைவில்லை. அதனால் அவர் கண்ணபிரானையும் தம்பிமாரையும் பார்த்து,

“ உலகத்தில் ஒருவர்க்கு உடன்பிறப்பு மிகவும் அருமை யாம். அதிலும் உடன் பிறந்தார் ஒற்றுமையாய் உடன் வாழ்தல் மிகவும் பெருமையாம். கண்ணிருந்தால் கைபடும். நாவிருந்தால் பல்படும். அதுபோல உடன்பிறந்தார்க் குள்ளும் தவறுண்டாதல் உலகவழக்கம். அதுபற்றி ஒரு வரை யொருவர் பகைத்தல் ஒவ்வாது. குற்றம்பார்க்கில் சுற்றமில்லை. சிறியோர் பிழைசெய்யின் பெரியோர் பொறுத் தலே முறையாகும். உடன் பிறந்தார் வைதல் ஒருவர்க்கு வசையன்று. மற்றோர் வைதால் மட்டும் மானக்கேடாம். அதனல் போருக்குச் செல்வது சிறிதும் பொருந்தாது. போரினல் பாவமேயன்றிப் புண்ணியம் விளைவதில்லை. பாதகங்களெல்லாவற்றிலும் கொடியது கொலை. அதிலும் அரசன், ஆசிரியர், தந்தை, தமையன் முதலிய ஐங்குர வரைக் கொல்லுதல் அதிபாதகத்திலும் அதிபாதகம். குரவ ரைக் கொன்று நாடாள்வதிலும் துறவினைப் பூண்டு காடு வாழ்வதே மேல். அதனல் இருவேமும் இசைந்து வாழச் சந்து செய்க” என்று வேண்டினர். அப்போது கண்ண பிரான்,

“ சந்து செய்தல் சிறிதும் தகாது. துரியோதனனுடன் செய்த உடன்படிக்கைப்படி காட்டில் வாழ்ந்தும் கரந்து வாழ்ந்தும் பன்மூன்றுண்டைக் கழித்துவந்தீர். இன்றும் நாடு தர இசையாவிடின் போரில் வென்று பாராள்வதே நமக்குக் கடன். போருக்குப் பின்னிட்டுக் காட்டிற்குச் செல்வதாயின், பூதலத்தோர் ஏசுவர்; பேடியரென்று பேசு வர். வீமனும் துரோபதையும் கூறியவஞ்சினமும் வீண் போம். அஃதுடன் அரச நீதியுமன்று” என்று கட்டு ரைத்தார்.

பின்பு தருமரும் ஒருவாறிசைந்து கண்ணபிரானை நோக்கி,

"எம்பெருமானே! நீரே துரியோதனன் பால் தூது சென்று எமக்குரிய நாட்டைக் கேளும். அவன் தாரானாயின் அதில் ஒரு கூற்றைக் கேளும். அதையுந் தாரானாயின் ஐந்தூர் அல்லது ஐந்து வீட்டைக்கேளும். அவற்றையும் தாரானாயின் அவன் கேட்டைக் கேளும்." என்று சொன்ன மாத்திரத்தில், வீமன் வெகுண்டெழுந்து தருமரைப் பார்த்து,

"உம்மால் எங்கட்கு என்றும் வசையே யொழிய வேறில்லை. அன்றும் அரச சபையில் ஒன்றும் செய்யவேண்டாமென்று துரோபதைக்கும் நமக்கும் மானம் போக்கினீர். இன்றுங் கானஞ் சென்று காய்கனிகளையுண்டு மீண்டபின் போர்செய்யச் சோர்கின்றீர். துரியோதனன் கொடுமையினும் உமது அறமே கொடிதாயிருக்கின்றது. கண்ணபிரான் தமது திருவடி சிவக்கத் துரியோதனனிடம் தூது செல்ல வேண்டாம். நானே சென்று அவனை வீரசுவர்க்கத்திற்கு விடுத்து அவன் நாட்டையெல்லாம் உமக்கு நல்குவேன். என்கையில் தண்டிருக்க விஜயன்கையில் வில்லிருக்க கண்ணபிரான் துணையிருக்க ஒன்றுக்கும் நீர் அஞ்சவேண்டாம். துரியோதனனையும் அவன் துணைவரையுந் துணித்தெறிந்து துரோபதையின் குழல் முடிப்பதே துணியத்தக்கதாம். அஃதன்றி அறநெறியும் இனமுறையுங் கொண்டாடல் அழகன்று.

"உடன்பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்க வேண்டாம்
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு."

அதனால் உள்ளன்புடையாரே உடன்பிறந்தார். மனமொத்தால் இனம். மானங்கெட்டு மண்ணிரத்தல் மன்னவர்க்கு மாண்பாமோ?" என்று மறுத்துரைத்தான்.

உடனே கண்ணபிரான் அவனைக் கையமர்த்தி அர்ச்சுனன் அபிப்பிராயத்தைக் கேட்டார். அப்போது அர்ச்சுனன் எழுந்து நின்று,

"அக்காலம் பொறுத்ததெல்லாம் அமையாதென்று இன்னும் அறமே சொன்னால் இனியெக்காலம் நாம் பகை முடிப்பதும் பாஞ்சாலி குழல் முடிப்பதும்? எத்துணை வீரராயினும் என் வில்லே கொல்லும். ஏன் நாடிரப்பது? ஏற்ப திகழ்ச்சியன்றோ? மன்னவையில் மானங்காவாதிருந்த மாசாவது மாறவேண்டாமா? உவர்நிலத்தில் உரமிட்டாலும் ஒரு நெல்லும் விளைவதில்லை. பாம்புக்குப் பாலூட்டினாலும் விடமொழியே வேறொன்றுந்தராது. பாம்புக்காயினும் பல்லில் விடம். துரியோதனனுக்கோ உடலெல்லாம் விடம். அதனால் கண்ணபிரான் சென்றாலும் கனவிலும் நாடு கொடான். விதியால் மதிகெடுதல் விண்ணவர்க்குமுண்டு." என்று வெறுத்துரைத்தான். பின்பு நகுலன் எழுந்து,

"பஞ்சவர் பாராளுதல் கொஞ்சமும் பொய்யாகுமோ? அரசதருமத்திற்கு ஆண்மை அமையாதோ? பகையிருக்குமட்டும் துரியோதனன் பாரளிக்க மாட்டான். பகவானே தூது சென்றாலும் பயனில் முயற்சியே யாகும். நானிலத்தாரெல்லாம் நாடிரந்தோமென்று நகைப்பர். பாண்டவர் காடு சென்று மீண்டார் என்று கருதாமலும் சொன்ன சொல்லை எண்ணாமலுமிருப்பவனுக்கு என்ன சொன்னாலும் தெரியாது. மன்னவையில் நாம்காண மானபங்கம் செய்தவன்கீழ் உரிமைபெறின் உலகமெல்லாம் பழிக்கும்;

முன்னோர் புகழையும் ஒழிக்கும். அதனால் துரியோதனனைப் போருக்கழைப்பதே துணிபு. அவன் படையும் ஐவர் பலமும் ஒரு கை காண்போம்."

என்று சினந்து நிற்கக் கண்ணபிரான் சகாதேவன் கருத்து யாதென்று கேட்டார்.

அப்போது சகாதேவன் கண்ணபிரானை நோக்கி, "நீர் துரியோதனனிடம் தூதுசென்றாலென்? செல்லாக்காலென்? அவன் எமக்கு நாடுதந்தாலென்? தராக்காலென்? துரோபதை தன் கூந்தலை முடித்தாலென்? முடியாக்காலென்? தேவரீர் திருவுள்ளம் அடியேனுக்குத் தெரியுமோ? உமது கருத்து எதுவோ? அதுவே எனதும்" என்று இசைந்துரைத்தான். அதன்பின் கண்ணபிரான் அவனைத் தனியிடத்திற்கு அழைத்துச்சென்று பாரதப்போர் வராமற் காக்கும் வகை யாதென்று கேட்டார். அப்போது அவன், "நீர் பாரதப் போரில் யாவரையும் நீறுக்கிப் பூபாரம் தீர்க்க வந்த புண்ணியர். உம்மையல்லால் போர் நீக்க வல்லார் ஒருவருமில்லை. பார்த்தனைக் கொன்று பாஞ்சாலி கூந்தலைக் களைந்து பலமாக உம்மையுங் கட்டுவேனாயின் பாரதம் வராமற்காக்கலாம்" என்றான். அதுகேட்டுக் கண்ணபிரான் ஆச்சரியங்கொண்டு சகாதேவனைப்பார்த்து "நீ எதுசெய்யினும் செய்க. என்னைக் கட்டுவது எங்ஙனம்?" என்று கேட்க அவன் "உமது வடிவத்தைக் காட்டினால் கட்டுவேன்" என்னக் கண்ணபிரானும் நொடிதோறும் நூற்றுக்கணக்கான வடிவங்களைக் காட்டிக் கொண்டேயிருந்தார். சகாதேவன் அவற்றிற்கெல்லாம் மூலமான முழுமுதல்வடிவை அன்பினாற் பிணித்து நெஞ்சில் நிறுத்தினான். அப்போது கண்ணபிரான் "என்னைக்கட்டினதுபோதும். விடுவிடு" என்று தடுத்தார். அவனும் விட்டுவிட்டு அவர் கால்களை இறுகக் கட்டிக்

கொண்டு ஐவரையுங் காக்க வேண்டுமென்று ஆவலாய் வேண்டினன். அவர் அதற்கிசைந்து தம் உரையாட்டை ஒருவர்க்குஞ் சொல்லாதபடி கண்டிப்பாய்க் கட்டளையிட்டார். அதன்பின் இருவரும் தாம்முன்னிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர். அப்போது துரோபதை கண்ணபிரான் திருவடிகளில் விழுந்து கண்ணீர் சிந்தி, "கனகன் மகனையுங் கஜேந்திராழ்வானையுங் காத்த கருணைக்கடலே! அன்றும் மன்னவர்முன் நீரே என் மானங் காத்தீர். அதுபோல இன்றுங்காத்தருள்க. பஞ்சவர் துரியோதனனுடன் போர் செய்யாது ஊர் பெற்றிருப்பின், என் கூந்தலை என்று கூட்டி முடிப்பேன்? என்வஞ்சினமும் எங்ஙனம் வாய்க்கும்?" என்று வாய்விட்டரற்றினள். உடனே கண்ணபிரான் தம்பியாகிய சாத்தகி,

"புஞ்ச பூதங்களைப் போற் பஞ்சபாண்டவரிருந்தும் பாஞ்சாலியின் குறையைச் சிறிதும் பாராமல் பகைவரிடம் ஊர் பெற்றுப் பாழ்வயிற்றைவளர்க்க விரும்புகின்றீர். வீமன்கையில் தண்டும் விஜயன்கையில் தனுவும் வெற்றி பெறக்கண்டும் ஏன் வீணைகத் தூது வேண்டுகிறீர்? இது எவர்மதி? ஏன் இக்கதி?" என்று இடித்துரைத்தான்.

பின்பு கண்ணபிரான் பாஞ்சாலியைப் பார்த்து "நீ கலங்கவேண்டாம். நானே தூதுசென்று உன் கூந்தலை முடிக்கின்றேன்" என்று ஆற்றித் தேற்றினர்.

அதன்பின் ஐவரும் ஆராய்ந்து,

"துன்றுபிணியோர் துறந்தோ ரடங்காதோர்
கன்று சின மனத்தோர் கல்லாதவரிளையோ
ரொன்று முறைமை யுணராதவர் மகளி
ரென்று மிவர் மந்தணத்தி னெய்தப் பெறுதாரே"

என்று அறிந்து கண்ணபிரானையே துரியோதனன் பால் தூது போக்கினர்.

கண்ணபிரான் அஸ்தினுபுரமடைந்ததும் காவல ரெல்லாம் எதிர்கொண்டழைத்தார். சுயோதனன் மட்டும் எதிர் கொள்ளாது இறுமாப்புற்றிருந்தான். சுயோதனன் என்பது துரியோதனனுக்கு மறு பெயர். கண்ணபிரான் அன்றிரவு விதுரன் மனையில் தங்கி விருந்துண்டார். விதுரன் பாண்டுவின் தம்பி; பாண்டவரின் சிற்றப்பன்; பட்ச பாதகமற்றவன்; நியாயவழி நிற்பவன். அதனல் கௌரவர் சார்பிலிருந்தும் பாண்டவர்க்கே வேண்டியவன். கௌரவர் என்பது நூற்றுவர்க்கு ஒரு பெயர். குரு மரபினர் கௌரவர். கண்ணபிரான் உண்பதற்கு விதுரன் மனையன்றி வேறொன்றுமில்லை. துரியோதனுதியரும் அவர் துணைவரும் துரோகியராயிருந்தனர்; கண்ண பிரானைக் கண்டும் கண்ணியப்படுத்தியிலர்.

"மதியாதார் தலைவாசல் மிதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடிபெறும்
உண்ணீருண்ணீ ரென்றுபசரியார் தம்மனையில்
உண்ணுமை கோடிபெறும்.
கோடிகொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடிபெறும்
கோடானுகோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடிபெறும்."

—ஔவையார்.

விதுரன் தன் மனையில் கண்ணபிரான் உண்டதை எண்ணி யெண்ணி இராக்காலத்தில் இன்புறும்போது துரியோதனன் சகுனியின் துராலோசனைப்படி கண்ண

பிரானை வீழ்த்தக்கூடிய ஒரு நிலவறை அமைத்து அவரைக் கொல்லுமாறு மல்லரையும் இருத்தினுன்.

மறுநாட்காலை கண்ணபிரான் அரண்மனை அடைந்தார். ஆசனத்திலமர்ந்ததும் அது நிலவறைக்குள் அமிழ்ந்தது. உடனே துரியோதனன் சூழ்ச்சியையுணர்ந்து அங்கிருந்த அரக்கரையும் மல்லரையும் அழித்து விஸ்வரூபங் கொண்டு வெளியேவந்து வீற்றிருந்தார். அது நீலமேகம் ஆழ்கடலி னின்று எழுந்து ஆகாயத்தி லமர்ந்தாற் போலிருந்தது பின்பு கண்ணபிரான் பாண்டவர் தூதைப் பகர்ந்தார். துரியோதனன் அதற்கிசையவில்லை. உடனே போர் என்ப தைப்புகன்று அரண்மனை விட்டகன்ருர். அதன்பின் பாண்டவர்க்காக அவர் பண்ணின உதவி யிரண்டு.

முதலாவது, பாண்டவர் தாயாகிய குந்தி தேவியைக் கர்ணனிடம் அனுப்பி அவனுக்குத் தானே தாயென்று அறிவிக்கச் சொல்லிப் பாரதப்போரில் அர்ச்சுனன்மீது அவன் ஒருஅம்பிற்குமேல் எய்யாதபடி செய்தார். கர்ணன், குந்திதேவி கன்னிகையாயிருக்கும்போதே அவளுக்குத் துருவாச முனிவர் மந்திரத்தினுல் கதிரவன் அம்ச மாய்க்கர்ணகுண்டலங்களோடு பிறந்தவன். பிறந்த வுடன் குந்திதேவி அவனை ஒரு பேழையிலிட்டுக் கங்கையாற்றில் விட்டனள். பேழை ஆற்றுவழியே சென்று அஸ்தின புரத்தையடைந்தது. அப்போது அங்கு நீராடச்சென் றிருந்த அதிரதன் என்பவன் அதிலிருந்த குழந்தையைக் கொண்டுபோய் அன்பாய் வளர்த்துவந்தான். குழந்தை பிறக்கும்பொழுதே கர்ணகுண்டலங்களுடன் பிறந்த மையால் கர்ணன் என்று பெயரிடப்பட்டது.

கர்ணன் வளர்ந்து துரோணரிடம் வில்வித்தை கற்க விரும்பினுன். துரோணர் கற்பிக்கவில்லை. அதனுல் அவன்

அவருடைய மாணவருள் முதல்வனான அர்ச்சுனனிடம் பகைமை பூண்டு பரசுராமரிடம் வில்வித்தை பயின்று திறமையுடன் இருக்கும் நாளில் துரியோதனன் அவனுடன் நட்புக்கொண்டு அங்க நாட்டையும் அவனுக்களித்தான். அதிலிருந்து கர்ணன் பாண்டவர்க்கு மாற்ருனாக நூற்றுவருடன் வாழ்ந்து வந்தான்.

கர்ணனுக்குத்தான் குந்தி மகனென்றும் குந்திக்குத்தான் கர்ணன் தாயென்றும் கண்ணபிரான் சொல்லும் வரை தெரியாதிருந்தது. அப்போதும் கர்ணன் ஐயப்பட்டுத் தன் அங்கியின் மூலமாகவே குந்தியை அன்னையென்று நம்பினுன். அவன் மிகுந்த வல்லமையும் வள்ளன்மையு முடையவன். அர்ச்சுனனை அழிக்கும் ஆற்றல் அவனுக்கேயிருந்தது. காண்டவ வனத்தில் தப்பிய அச்சுவசேனன் அவன் கையில் அர்ச்சுனனைக் கொல்லும் அம்பாயிருந்தான். அவ்வம்பு ஒரே முறையில் அர்ச்சுனனைக் கொல்லாது. பன்முறை யேவினுல் மட்டும் கொல்லும். அதனுல்தான் கண்ணபிரான் ஒருமுறைக்குமேல் ஏவாதபடி செய்தார்.

பின்பு கண்ணபிரான் கர்ணனுடைய கவசகுண்டலங்களையும் அந்தண வடிவாய் இரக்கும்படி இந்திரனை ஏவினுர். அவனும் இரந்து அவற்றைக்கவர்ந்தான். அதோடு கர்ணன் வல்லமை குறைந்தது. அதன்பின் கண்ணபிரான் இந்திரப்பிரஸ்தம் வந்து எல்லாவற்றையும் பாண்டவர்க்கறிவித்தார். அவரும் போருக்கு ஆயத்தமாயினர்.

“மடந்தாழு நெஞ்சத்துக்கஞ்சனுர் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா லுற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது

நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்னநாவே."

—இளங்கோவடிகள்.

---

## 24. பாரதப் போர்.

பாண்டவரும் கௌரவரும் பாரதப் போர் தொடங்கினதும், பலராமரும் விதுரனும் அதைப் பார்க்கவும் ஒண்ணாமல் தீர்த்தயாத்திரை சென்றனர். பரதகண்டத்துள்ள பல அரசரும் பாண்டவ கௌரவர்க்குப் படைத் துணைவராய் வந்திருந்தனர். அவர் கங்கர், வங்கர், கலிங்கர், தெலுங்கர், குடகர், வடுகர், பாஞ்சாலர், பாண்டியர், சேரர், சோழர், மச்சர், மகதர், கோசலர், கூர்ஜரர், காந்தாரர், கௌடர் முதலிய ஐம்பத்தாறு தேசத்தாரும் பதினெண் பாழைமக்களுமாவர். போருக்கு வேண்டிய மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, பகைப்படை துணைப்படை என்னும் ஆறுபடைகளும் ஆயத்தமாயின. பின் நாட்பார்த்துஅரவாணைக்காளிக்குப் பலியிட்டு இருசாராரும் பார் அதிரப்போர்க் களங்குறுகினர்.

பாரதப் போர்க்குக் காரணரான கண்ணபிரானே பாண்டவர்க்கு வழிகாட்டிப் பார்த்தனுக்குஞ் சாரதியாய்ப் பகவத் கீதையைப் போதித்தார்.

" பூத்தநாபியந் தாமரைப் பூவில் வந்து பல்பூதமுஞ்
சேர்த்த நான்முகப் புனிதனு முனிவர்யாவருந் தேவரும்
ஏத்த நாலு வேதங்களுந் தேடநின்ற தாளெம் பிரான்
பார்த்தன் மாமணித்தேர்விடும் பாகனை தெப்பான்
[மையே."

—வில்லிபுத்தூராழ்வார்.

துரியோதனனும் கண்ணபிரானைத்துணை வேண்டி யிருந்தான். அதற்கு அவர் அமரில் படையெடேன் என்று மட்டும் வாக்களித்திருந்தார். அதன்படியே பாரதப்போர் முழுவதும் படை தொட்டுப் பகைவரைக் கொல்லவில்லை.

கண்ணபிரான் பாண்டவர் வெற்றிக்குக் காரண மாய்ப் பார்த்தசாரதியாயிருந்து கொண்டே தலை போன்ற உதவிகள் பலசெய்தார். பாரதப் போர் பதி னெட்டுநாள் நடந்தது. பெரும்பாலும் பகலிற் போர்செய் வதும் இரவிற் பாசறைபுகுவதுமே படைகட்கு வழக்கமா யிருந்தது.

முதல்நாள், பாண்டவரும் கௌரவரும் முறையே சிவேதனையும் பீஷ்மரையும் படைத்தலைவராக் கொண்டு போர் தொடங்கினர். தருமர் சல்லியனுடனும், வீமன் சுயோதனனுடனும், அர்ச்சுனன் கர்ணனுடனும், நகுலன் சயிந்தவனுடனும், சகாதேவன் சகுனியுடனும், திட்டத் துய்ம்நன் துரோணருடனும் வீரவேசமாய்ப் போர்புரிந் தார். சிவேதன் விற்போரிற் சிறந்தவனாதலின் சரமாரி பொழிந்து பகைவீரரை யழித்தான். பீஷ்மர் எவ்வளவோ முயன்றும் அவனைக் கொல்ல முடியவில்லை. கடைசியில் "உனக்கு விற்போர் ஒன்றே தெரியும்" என்று அவன் வீரத்தைப் பழித்தார். உடனே அவன் விற்போரைவிட்டு விட்டு வாட்போர் தொடங்கினான். பீஷ்மர் வாளில் வல்லவ ராதலின் விரைவில் அவனை வென்று கொன்றார். சிறிது நேரத்திற் பொழுதுஞ் சென்றது. படைகளிரண்டும் பாசறைபுக்கன.

பின்பு இரண்டாம் நாட் காலை இருபடைகளும் போருக் கெழுந்தன. பாண்டவர் படைக்குத் திட்டத்

துய்ம்நன் தலைவனானன். துரோணர் அவனுடன் பொருது அவனைத் தோற்கடித்தார். அதைவீமன் பொருதவனாய்ப் புலிபோற் கிளர்ந்து கலிங்க மன்னனையும் அவன் மக்களையுங் கொன்று பீஷ்மரை எதிர்த்து அவர்சாரதியின் தலையைத் தகர்த்து அபிமனுடன் கூடிப் பகை வீரரையும் பின்னிடச் செய்யும் பொழுது, பொழுது போயிற்று. வீரர் போரை நிறுத்தினர்.

பின்பு மூன்றும் நாட் காலை போர் மூண்டது. பாண்டவ சேனை சத்திர யூகமாகவும் பகைவர் சேனை கருடயூகமாகவும் வகுக்கப்பட்டன. திட்டத்துய்ம்நன் துரியோதனனை எதிர்த்து அவனை மூர்ச்சிக்கச் செய்தான். அப்போது பீஷ்மர் துரியோதனனை மூர்ச்சை தெளிவித்துப் பாண்டவசேனைகளை மாய்த்தார். அதைக் கண்ணபிரான் பொருது சக்கரத்தால் தடுத்ததும் பீஷ்மர் தேரினின்றும் இறங்கித் துதித்தார். அதன்பின் அர்ச்சுனன் அதுவே சமயமென்று பகைவரை அழிக்கும்போது பொழுதடைந்தது. எல்லாரும் இருக்கைக் கேகினர்.

பின்பு நாலாம் நாட் காலை போர் தொடங்கிற்று. வீமன் துரியோதனனைத் தோற்கடித்து அவன் தம்பிமாராகிய சுதக்கணன், பிங்கலசன் முதலியவரைக் கொன்றான். அப்போது பகதத்தன் வீமனை எதிர்த்தான். உடனே கடோர்க்கசன் அவனை முதுகிட அடித்தான். பொழுது சாய்ந்தது. போர்வீரர் பாசறைபுக்கனர்.

பின்பு ஐந்தாம் நாட் காலை அமர்தொடங்கி அர்ச்சுனனும் வீமனும் பகைவரை அழிக்கையில் துச்சாதனன் எதிர்த்துத் தோற்றோடினான். அன்றுமட்டும் துரியோதனன் சேனையில் இருபத்தையாயிரம்பேர் இறந்தனர்.

அதன் பின் பூரிசிரா வீமனுடன் போர் புரிந்தான். சாத்தகி பூரிசிராவை எதிர்க்கும் பொழுது, பொழுது சாய்ந்தது. படைவீரர் வழக்கம்போல் பாசறைபுக்கனர்.

பின்பு ஆறும் நாட் காலை யாயிற்று. பாண்டவ சேனை மகர யூகமாகவும் கௌரவ சேனை கிரௌஞ்ச யூகமாகவும் வகுக்கப்பட்டன. வீமன் பீஷ்மரைக் காலாளாக்கிச் சல்லியனையெறிந்து துரியோதனனுடன் போர் தொடுத்தான். அபிமன் விகர்ணனை எதிர்த்து அவன் மார்பைத் தொளைத்தான். பொழுது போயிற்று. அனைவரும் பாசறையடைந்தனர்.

பின்பு ஏழாம்நாட் காலை இரு சேனைகளும் பொருகளஞ் சேர்ந்தன. பஞ்சவர் சேனை மாசுண யூகமாகவும் நூற்றுவர் சேனை சகட யூகமாகவும் வகுக்கப்பட்டன. துரோணர் பாண்டியனையும் சதாயு சாத்தகியையும் தோற்கடித்தனர். வீமன் சகுனியையும் சல்லியனையும் பின்னிடச்செய்தான். அர்ச்சுனன் பீஷ்மரை எதிர்க்கும்பொழுது அஸ்தமித்தது. அவரவர் தத்தம் இருக்கையடைந்தனர்.

பின்பு எட்டாம் நாட்காலை இருபடைகளும் போரில் எதிர்ந்தன. பாண்டவர் படை சகட யூகமாகவும் பகைவர் படை சூசிகா யூகமாகவும் வகுக்கப்பட்டன. வீமன் தன்னை யெதிர்த்த துரியோதனன் தம்பிமாருள் எண்மரைத் தொலைத்தான். அப்போது அலம்புதன் அரவானைக் கொன்றான். அதன்பின் அபிமன் பகைவர் படைகளை மாய்க்கும் பொழுதுபகலவன் மறைந்தான். படைகள் பாசறை யடைந்தன.

பின்பு ஒன்பதாம் நாட் காலை இருபடையும் ஒன்று கூடிப்பொரும்பொழுது வீமன் வேலாயுதத்தால் அலம்

புதனை வீழ்த்தினன். அன்று அர்ச்சுனன்மட்டும் எழுபதினாயிரம் வீரரை அழித்தான். திட்டத்துய்ம்நன், தருமர் முதலியோர் பீஷ்மரையும் துரியோதனனையும் தாக்கினர். பீஷ்மர் பாண்டவர் படையைப் பிணமாக்கினர். சிகண்டி சில அம்புகளை ஏவிப் பின்பு துச்சாதனனுக்குத் தோற்றான். சதானீகன் பீஷ்மரால் சாய்ந்ததும் பொழுதுஞ் சாய்ந்தது. இரு சேனையும் இருக்கை சென்றன.

பின்பு பத்தாம் நாட் காலை பாண்டவ கௌரவ சேனைகள் பரங்கெழுந்தன. பீஷ்மர் அர்ச்சுனனை யெதிர்த்து அநேக சேனைகளை அழித்தார். பின்பு சிகண்டி அவரை எதிர்த்துச் சென்றான். உடனே அவர் தம்வில்லை விட்டு விட்டு அம்பணையிலமர்ந்திறந்தார். அவர் திருதராஷ்டிரனுக்குப் பெரியதந்தையும் பாண்டவ கௌரவர்க்குப் பாட்டனுமாவர். சிகண்டி அவரைக் கொல்லும்படி காளியிடம் வரம் பெற்றிருந்தான். அதனலேயே அவர்க்கு அவனல் முடிவாயிற்று. பின்பு இரவு வந்ததும் இருபடைகளும் இருக்கையடைந்தன.

பின்பு பதினோராம் நாட் காலை துரியோதனன் படைக்குத் துரோணர் தலைவரானர். தருமர் துரோணரோடும் அர்ச்சுனன் கர்ணனோடும், நகுலன் சல்லியனோடும் போரிட்டனர். அபிமன் கையில் இலக்கணன் அகப்பட்டான். அப்போது சயத்திரதன் சல்லியன் முதலியோர் அபிமனை யெதிர்த்தனர். அது கண்டு வீமன் அபிமனுக்குத் துணை வருமுன் இலக்கணன் தப்பி விட்டான். உடனே பொழுதும் அடைந்தது. படைகளும் பாடி வீட்டை யடைந்தன.

பின்பு பன்னிரண்டாம் நாட் காலை பாண்டவ கௌரவ சேனைகள் முறையே மண்டல யூகமாகவும் மகர யூகமாகவும்

வகுக்கப்பட்டன. துரோணர் திட்டத்துய்மநன் வில்லை முறித்துச் சிகண்டியின் தேரைத் தகர்த்துச் சகாதேவனை யும் எதிர்த்தார். தருமர் துரோணர் தேரையழித்தார். பகதத்தன் தருமரை யெதிர்த்து அவர் படைகளை யழித்தான். அப்போது தருமர் கண்ணபிரானை யெண்ணி னார். கண்ணபிரானும் உடனே அர்ச்சுனனுடன் சென்றார். பகதத்தன் அர்ச்சுனன்மேல் இந்திரவேலை யெறிந்தான். அதைக் கண்ணபிரான் தம்மார்பில் மாலையா யேற்றார். அர்ச்சுனன் பகதத்தனைக் கொன்றான். கதிரவன் கடலுக் குட் சென்றான்.

பின்பு பதின்மூன்றும் நாட் காலை பாண்டவர் படை மகர யூகமாக வகுக்கப்பட்டது. பகைவர்படை பதும சூசிக சக்கர யூகங்களாக வகுக்கப்பட்டது. துரோணர் திட்டத் துய்மநனை எதிர்த்தார். அபிமன், வீமன், திட்டத்துய்ம நன் என்னும் மூவரும் பதும யூகத்தைப் பலமாய்க் கலக்கி னர். சயத்திரதன் அபிமனை வீமன் அணுகாவண்ணம் தடுத்தான். அபிமன் இலக்கணனைக் கொன்று சக்கர யூகத்தையுங் கலக்கினன். அப்போது சயத்திரதன் அபி மனை மாய்த்தான். உடனே கண்ணபிரான் இந்திரனை அந் தணவுருக்கொண்டு அர்ச்சுனன்முன் அக்கினியில் விழ ஏவினர். அவன் விழும்போது அர்ச்சுனன் தடுத்து "ஏன் விழுகிற" யென்று கேட்டான். அதற்கு அவன் "என் மகன் இறந்ததைக் கேட்டு நான் இறக்கின்றேன்" என்றான். அப்போது அர்ச்சுனன் பல சமாதானங்களைக் கூறி அவனை ஆற்றும்போது அவன், "உன்மகன் இறக்கும்போது நீயும் உயிர்விடாதிருப்பின் நானும் இருக்கின்றேற" னென அர்ச் சுனனும் அதற்கிசைந்தான். அதன்பின் எதிர்பாராதவித மாய் அபிமன்செய்தி அர்ச்சுனனுக்கு எட்டிற்று. உடனே

அவன் அடிவயிற்றில் இடிவிழுந்தாற்போலக் கலங்கி அக்கினியில் விழத்துணியும்போது இந்திரன் வந்து தடுத்தான். பின்பு மறுநாட் பொழுதறுமுன் சயத்திரதனை மாய்க்காவிடில் தீபாய்தல் திண்ணமென்று அர்ச்சுனன் சபதஞ் செய்தான். பொழுது போயிற்று.

பின்பு பதினாலாம் நாட்காலை பாண்டவ கௌரவ சேனைகள், முறையே மண்டல யூகமாகவும் சூசிகாயூகமாகவும் வகுக்கப்பட்டன. அர்ச்சுனன் துன்முகனையுந் துச்சாதனனையுந் துரத்திக் கிருதவன்மனை மூர்ச்சையடையச் செய்தான். சுதாயு அர்ச்சுனன்மேல் ஒருகதையை ஏவ அதைக் கண்ணபிரான் தம் மார்பிலேற்றார். அர்ச்சுனன் சுதாயுவைக் கொன்று ஏழக்குரோணி சேனைகளையும் மாய்த்தான். பின்பு துரியோதனன் அர்ச்சுனனை யெதிர்த்து அவனை மூர்ச்சிக்கச் செய்தான். அப்போது கண்ணபிரான் சங்கை முழக்கி அர்ச்சுனன் தெளியவும் பகைவர் மூர்ச்சை யடையவுஞ் செய்தார். அதன்பின் அர்ச்சுனன் இந்திர சத்தியினால் துரியோதனன் கவசத்தைத் தூளாக்கினான். வீமன் தருமரேவலால் அர்ச்சுனன் நிலை யறிந்துவரச்சென்றபோது துரியோதனன் தம்பிமார் அவனை எதிர்த்திறந்தனர். பின்பு கர்ணன் எதிர்க்கும்பொழுது வீமன் கதையை யிழந்தான். சாத்தகி பூரிசிராவைக் கொன்றான். அர்ச்சுனன் சயத்திரதனைத் தேடவும் கண்ணபிரான் ஆழியாற் கதிரவனை மறைத்தார். எங்குமிருண்டது. அர்ச்சுனன் தன் சபதம் தவறிற்றென்று தீபாயத்துணிகையில் சயத்திரதனைத் துரியோதனன் யானை மீதேற்றிக் கொணர்ந்தான். அப்போது கண்ணபிரான் ஆழியை யெடுத்துவிட்டு "அர்ச்சுனா! அதோ பொழுதிருக்கிறது. சயத்திரதனை மாய்" என்று திருவாய்மலர்ந்தார். உடனே

அவனும் மாய்த்தான். பின்பு துரோணர் போரிட்ட போது இருபடையிலுஞ் சிலர் இறந்தனர். பொழுதடைந்தது. அன்று இராப்போரில் கடோர்க்கசன் கர்ணனால் மாய்ந்தான்.

பின்பு பதினைந்தாம் நாட் காலை படையிரண்டு போர் தொடங்கின. துரோணர் பாண்டவ சேனையை அதிகமாய்த் தொலைத்தார். அப்போது எழுமுனிவரும் வந்து "நீ அந்தணனாயிருந்தும் அருளின்றி அழிப்பது அடாது" என்று பழித்தார். உடனே துரோணர் போரை யொழித்து ஓய்ந்திருந்தார். அப்போது கண்ணபிரான் தருமனை நோக்கி "நீர் இப்போது துரோணரிடஞ்சென்று அசுவத்தாமா என்னும் மாளவன் யானை அமரில் இறந்ததென்று கூறினால் அவர் தம் மகனாகிய அசுவத்தாமாதான் இறந்தானென்று உடனே உயிர் விடுவார். இதுவே அவரைக் கொல்ல நல்லவழி" என்று உரைத்தார். அதற்குத் தருமர் இசைந்தும் இசையாமலும் துரோணரிடஞ்சென்று "அசுவத்தாமா அதாகுஞ்சரம்" என்னுமளவில் கண்ணபிரான் குஞ்சரமென்னுஞ் சொல்லைச் சங்கமுழக்கால் மறைத்தார். அப்போது துரோணர் அசுவத்தாமா இறந்தானென்று துயரத்திலயர்ந்தார். பின்பு கண்ணபிரான் கட்டளைப்படி திட்டத்துய்மநன் துரோணர் தலையை அம்பினால் தொலைத்தான். அதன்பின் அசுவத்தாமா பல பல அம்புகளை விடுத்தும் பயன்படாததுகண்டு வெட்கிச்சென்று காட்டையடைந்தான்.

பின்பு பதினாறாம் நாட் காலை கர்ணன் கௌரவ சேனைக்குத் தலைவனாகி அர்ச்சுனனுடன் பொருது களைத்தான். அர்ச்சுனன் அவனை மறுநாள் வரச்சொல்லிவிட்டுக் கண்ணபிரான் கட்டளைப்படி சஞ்சத்தகரையுங் கோபாலனையுங்

கொன்ருன். தருமர் துரியோதனனைத் தோற்கடிக்கும் பொழுது கதிரவனுந் தோற்ருற்போற் கரந்தான்.

பின்பு பதினேழாம் நாட் காலை படைகள் இரண்டும் திரண்டன. கர்ணன் சல்லியனைச் சாரதியாக்கி அர்ச்சுனனைக் கொல்வேனென்று எழுந்தான். அதைச் சல்லியன் பழிக்க இருவர்க்கும் சச்சரவுண்டாயிற்று. அப்போது துரியோதனன் சமாதானப் படுத்தினன். பின்பு கர்ணன் பொருது அர்ச்சுனனைப் புறங் காட்டச் செய்தான். அதனல் தருமர் அர்ச்சுனனைப் பழித்தார். அதை அர்ச்சுனன் பொறுக்க முடியாமல் தருமரைக் கொல்லத்துணியும்போது கண்ணபிரான் தடுத்தார். பின்பு கர்ணன் வீமனை எதிர்த்தான். அர்ச்சுனன் விடசேனனைக் கொன்ருன். பிறகு கர்ணன் மறுபடியும் அர்ச்சுனனுடன் பொர வரும்போது கண்ணபிரான் அந்தணவடிவிற் சென்று அவன் அறத்தைப் பெற்று வந்து அவன்மேல் அம்பை ஏவுமாறு அர்ச்சுனனை ஏவினர். அர்ச்சுனன் ஏவவுங் கர்ணன் இறந்தான். அன்றைப்போரில் துச்சாதனனும் தம்பிமாருடன் துஞ்சினன்.

பின்பு பதினெட்டாம் நாட் காலை சல்லியன் படைத் தலைவனகித் தருமரால் சாய்ந்தான். நகுலன் சகுனியைக் கொன்ருன். துரியோதனன் பீமனல் மாண்டான். அப்பொழுது தீர்த்தயாத்திரை சென்றிருந்த பலராமர் அங்கு வந்து துரியோதனன் முடிவுக்குப் பெரிதும் வருந்தினர். கண்ணபிரான் அவரைத்தேற்றி அர்ச்சுனனைத் தேரினின்றும் இறங்கச் சொன்னர். அவன் இறங்கினன். உடனே தேர் பற்றி யெரிந்தது. அது பாண்டவர் துன்பமே பற்றி யெரிந்தாற்போலிருந்தது.

பின்பு அசுவத்தாமன் படைத்தலைவனாகி இளம் பஞ்ச பாண்டவரையுஞ் சோழனையும் உருத்திரவாளால் இராப் போரில் கொன்றான். அப்போது அர்ச்சுனன் பிரமாஸ்திர மேவி அவன் சிரோ மணியைக் கவர்ந்தான். கடைசியில் அசுவத்தாமன் கணபாண்டவ தேவியரின் கருவழிக்கச் சென்றபொழுது, கண்ணபிரான் உத்தரையின் வயிற்றிலிருந்த பரிச்சித்தைக் காத்து அசுவத்தாமனையும் மூவாயிரமாண்டு குட்டநோய்கொள்ளச் சபித்தார். அதோடு பாரதமும் பூபாரமுந்தொலைந்தன. கண்ணபிரான் கடமையும் முடிந்தது. திருதராட்டிரன் மனைவிமாருடன் காட்டிற்குச்சென்று தீயிற் பாய்ந்து மாய்ந்தான். பாண்டவர் ஐவரும் பல்லாண்டு வாழ்ந்தனர். குருநாடெல்லாம் தருமபுத்திரர் ஒரு குடைக் கீழ் ஆண்டார். காடாண்டவரும் பாண்டவர். நாடாண்டவரும் பாண்டவர்.

“ நச்சரா வுச்சிமேய நாணிலம் பொறை தீர்ப்பான் வந்
திச்சையாஞ் சூதென்றோ தூ மெரிசினத்தழலை மூட்டிக்
கச்சமார் களிற்றுவேந்தாம் கடுவன மெரித்தகண்ணா
பச்சைமாலே நின்மாவை பகருதற்கெளியதன்றால்.”

—ஆரியப்பப் புலவர்.

---

## 25. குசேலர் குறையுறை.

கண்ணபிரானுக்குக் குசேலர் என்றொரு நண்பரிருந்தார். அவர் அந்தணர். அவருக்கு இருபத்தேழு வெள்ளி (நட்சத்திரம்) களைப்போல இருபத்தேழு பிள்ளைகள் பிறந்தன. ஒருவனுக்குப் பிள்ளைகளைப் பார்க்கிலும் பெரியசெல்வம் ஒன்றுமில்லை.

" பெறுமவற்றுள் யாமறிந்த தில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற"

என்றார் திருவள்ளுவர்.

" பொன்னுடையரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடையரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லாதவர்."

என்றார் புகழேந்தியார்.

" படைப்புப் பல படைத்துப் பலரோ டுண்ணு
முடைப்பெருஞ் செல்வராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தம் வாழு நாளே."

என்றார் அறிவுடைநம்பியார்.

பிள்ளைகளே பெற்றோரைத் தள்ளாடும் பருவத்தில் தாங்கக் கூடியவர்கள். பிள்ளையில்லாதவரை மலடரென்று உலகம் பழித்துப் பேசும். பெற்றோரைப் புத் என்னும் நரகத்தினின்று மீட்பவர் புத்திரர் என்பது வடநூல் வழக்கு.

" எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்."

என்றார் திருவள்ளுவர்.

பிள்ளையை விரும்பாதவர் உலகத்தில் ஒருவருமில்லை. முற்றத் துறந்த முழுமுனிவர்க்கும் பிள்ளைமேற் பற்றுண்டு. ஆனால் 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பதுபோலப் பிள்ளைகளும் அளவாய்ப்

பிறக்கவேண்டும். மழையானது அளவாய்ப் பெய்தால் செழிப்பும் அதிகமாய்ப் பெய்தால் அழிப்பும் உண்டாகும். அதுபோலப் பிள்ளைகளும் அதிகமாய்ப் பிறந்தால் பெற்றோர்க்குப் பீடையே பெரிதாகும். வறியனுக்குச் சிலபிள்ளைகளும் வளவனுக்குப் பல பிள்ளைகளும் பிறப்பின் அவ்விருவருக்கும் பெருஞ் சுகமாம். இம்முறை மாறின் இருவருக்கும் பெருந்துயராம். ஆனால் இறைவன் செயலை எவராலும் மாற்ற இயலாது. திருவருள் ஞானமும் ஒருவர்க்குந் தெரியாது. பிள்ளையினாற் பெற்றோர்க்கு இன்பமுமுண்டாம்; துன்பமுமுண்டாம். இன்பஞ்சிறிதாயின் துன்பமே மிகுந்து தோன்றும்.

" மதலையைப் பெறுநாள் துன்பம் வளர்த்திடு நாளுந்துன்பம்
விதலைநோயடையில் துன்பம் வியன் பருவத்துந் துன்பம்
கதமுறுகாலர் வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம்
இதமுற லெந்நாள் சேயா லென்றைக்குந் துன்பமானல்."

என்றார் தேவராஜப்பிள்ளை.

'அஞ்சுக்குமேல் அரசனும் ஆண்டி' என்பது பழமொழி. இயல்பாகவே ஆண்டியாயிருந்த குசேலர் வறுமையோ மிகக் கொடிதாயிருந்தது. " கொடிது கொடிது வறுமை கொடிது " என்றார் ஒளவையார். ஆயினும் குசேலர் வறுமையிற் செம்மையுள்ள பொறுமைசாலி. அவர் குடும்பம் குடிப்பது கூழ்; உடுப்பது கந்தை. அவர் மனைவியார் தம் குடும்பத்திற்குக் கூழைப் பகிரும்போது படும்பாட்டிற்கு எமனும் இரங்குவான்.

" ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு கைநீட்டு முந்தி [மேல் வீழ்ந்
திருமகவுங் கைநீட்டு மும்மகவுங் கைநீட்டு மென் செய் [வாளால்

பொருமியொரு மகவழுங்கண் பசைந்தழுமற் றொருமகவு [புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமகவெங் ஙனஞ்சகிப் [பாள் பெரிதும்பாவம்."
" அந்தோவென் வயிற்றெழுந்த பசியடங்கிற் றில்லை [யென வழுமாலோர் சேய்
சிந்தாத கூஞ்சிவாக் கிலையெனக்கன் றையெனப் பொய் [செப்புமோர் சேய்
முந்தார்வத் தொருசேய்மீ சையப்பும்போ தினிலொரு [சேய்முடுகி யீர்ப்ப
நந்தாமற் றச்சேயு மெதிரீர்ப்பச் சிந்துதற்கு நயக்கு மோர் சேய்.'

இப்படி எந்நாளும் படமுடியாமல் ஒருநாள் அவர் தம் கணவனரைக் கண்ணபிரானிடம் காசுபெற்று வரச் சொன்னர். அவரும் அதற்கிசைந்து கடவுள், அரசன், குரு, கர்ப்பிணி, குழந்தை என்னும் ஐவரகத்திற்குவெறுமை யாய்ச் செல்லலாகா தென்னும் முறைமை பற்றிச் சிறிது அவலெடுத்துக்கொண்டு துவரை சென்றர். அங்கு கண்ண பிரானைக்கண்டு அவலை அவரிடங் கொடுத்தார். கண்ண பிரான் தம் இளமையில் தம்முடன் ஒரு சாலை மாணவரா யிருந்த குசேலரைக்கண்டதும்குதூகலங் கொண்டு அவரைக் கட்டித்தழுவி அவர் கட்டிக்கொணர்ந்த அவலையும் ஆவலா யுண்டார். அப்போது உருக்குமணிகண்டு அதைத் தடுத் தாள். பின்பு கண்ணபிரானும் அதைத்தவிர்த்துக் குசேலரை யன்றிரவு இருத்தி மறுநாட் காலை வெறுமை யாய் விடுத்தார்.

குசேலர் கண்ணபிரானது மாயையை யறியாமல் மன வருத்தத்துடன் தம்மனைக்குத் திரும்பும்போது அது ஒரு மாளிகையாயிற்று. அவர் மனைவியார் அவரை மகிழ்ச்சி

யுடன் எதிர் கொண்டழைத்தார். குசேலர் தம் புது மாளிகைக்குட் புகுந்ததும் பொன்னாலும் மணியாலுஞ் செய்த பல பொருள்களைக் கண்டு அவையெல்லாம் கண்ணபிரான் செயலென்று கடவுளைத் துதித்தார்.

"மிடித்தில்லாள் பசித்தொறுக்கிற் குசேல னென்னும்
விப்பிரன்ற னஞ்சியுன்றன் பதிக்கு வந்தால்
அடுத்த சிநேகிதன் வந்தா னென்றே சிந்தித்
தறிந்தழைத்தென் கொடுவந்தீர் தாருமென்றே
மடிக்கணுறு பொரியவலா மதனை வாங்கி
மகிழ்ந்து விர லாலள்ளி யிருகாலுட்கொண்
டிடுக்கணறச் சம்பத்து முத்திவீடும்
இரங்கியவற் களித்தனையே யெம்பிரானே."

—எம்பிரான் சதகம்.

## 26. இறந்த மக்களை ஈதல் I.

தேவகி, கண்ணபிரானுக்குப் பின்பெற்ற சுபுத்திரியாகிய சுபத்திரை ஒன்பதாவது பிறந்தவள். தேவகிக்குப் பிறந்த நவமணிகளில் முதல் ஆறும் கம்சனால் இறந்தன. கண்ணபிரானைக் கண்டதும் வசுதேவரும் தேவகியும் இறந்த குழந்தைகள் ஆறையும் மறந்தனர். சூரியனுக்கு முன் மின்மினி மறைவதுபோலக் கண்ணபிரானுக்கு முன் மற்றக் குழந்தைகள் மறைந்தன. பூனைக்குட்டிகள் பலவற்றினும் புலிக்குட்டி ஒன்றேமேல். தேவகிக்குப் பிறந்த ஒன்பது குழந்தைகளில் கண்ணபிரான் ஒருவரே திருக்குழந்தை. மற்றவை கருக்குழந்தைகள். கடவுளுக்கும் உயிர்களுக்கும் எவ்வளவு ஏற்றத்தாழ்வு உண்டோ அவ்வளவு ஏற்றத்தாழ்வு கண்ணபிரானுக்கும் மற்றக் குழந்தைகளுக்கும் உண்டு. கண்ணபிரான் திருமாலின் அவதாரம் என்பதை அவர் பிறப்பினாலும் நாமகரணத்தினாலும் திருவிளை

யாடல்களாலும் அற்புதங்களாலும் வசுதேவரும் தேவகி யும் நன்றாய் அறிந்திருந்தார். அவ்விருவரும் அவரைத் திருமால் என்று நம்பி அவர் தெய்வத்தன்மையில் ஈடுபட் டாரே யொழிய இறந்த மக்களை அவரால் உயிர்ப்பிக்க வேண்டுமென்று எண்ணவேயில்லை. அப்படி எண்ணவும் இருதயத்தில் இடமில்லை. முழு மனதையுங் கண்ணபிரான் மேற் செலுத்தினர்.

இப்படியிருக்குங்கால் கண்ணபிரான் குரவன் மைந் தனைக் கொணர்ந்த செய்தி எட்டிற்று. உடனே தேவிக்கு இறந்த குழந்தைகள்மேல் எண்ணஞ் சென்றது. ஆயினும் அன்றே கேட்கவில்லை. நெடு நாள் நினைத்துக் கொண்டே யிருந்தாள். அவளுக்கும் கிழப்பருவம் கிட்டிற்று. அப் பொழுது ஒரு நல்ல சமயத்தில் கண்ணபிரானிடம் தன் கருத்தை வெளியிட்டாள். உடனே கண்ண பிரான் சுதல லோகஞ் சென்று அங்கிருந்த மாவலி யைத் தேவகி மக்கள் அறுவரையும் அனுப்பச் சொன்னார். அவனும் அனுப்பினன். தேவகியும் வசுதேவரும் தமது அருமை மக்களாகிய கிரதிவந்தன், சுதேக்ஷணன், மித்திர சேனன், ருசு, சமந்தன், பத்திராக்கன் என்னும் அறு வரையும் கட்டித் தழுவிக் கண்ணீர் சிந்தினர்.

## இறந்த மக்களை ஈதல் II.

துவாரகையில் ஒரு அந்தணனுக்கு ஒன்பது பிள்ளை கள் பிறந்தன. ஒன்பதும் பிறந்தவுடன் பிறந்தவுடன் இறந் தன. ஒன்பதாம் பிள்ளையை அவ்வந்தணன் எடுத்துக் கொண்டுஅரண்மனைக்குச் சென்று அழுது முறையிட்டான். அப்போது அங்கிருந்த அர்ச்சுனன் பத்தாம் பிள்ளையை எப்படியும் தன் வில்வல்லமையால் பாதுகாத்துத் தருவ

தாக வாக்களித்தான். அந்தணனும் ஒருவாறு தேறி அகத்துக்குத் திரும்பினான்.

பத்தாம் பிள்ளைக்குப் பத்தாம் மாதம் வந்தது. அப்போது அர்ச்சுனன் வில்லுங் கையுமாய் நின்று பத்திரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். பிள்ளை பிறந்ததும் மறைந்தது. உடனே அர்ச்சுனன் தன் சபதம் தவறினதென்று தன் உயிரை மாய்க்கத் துணிந்தான். அப்போது கண்ணபிரான் அவனைத் தடுத்து வைகுந்தஞ் சென்று அங்கிருந்த பத்துக் குழந்தைகளையுங் கொணர்ந்து பார்ப்பனனிடம் கொடுத்தார். அவனும் கண் இழந்து பெற்றவன் போல அவைகளைக் கட்டித் தழுவிக் கரையற்று மகிழ்ந்தான்.

"தாளாற் சகடங்கொண்ட தாரரங்
கா பண்டு சாந்திபன் சொற்
கேளாக் கடல் புக்க சேயினை
மீட்டதுங் கேதமுடன்
மாளாப் பதம் புக்க மைந்தரை
மீட்டதுமாறலவே
மீளாப் பதம்புக்க பாலரை
நீயன்று மீட்டதற்கே."

—பிள்ளைப் பெருமாளையங்கார்.

---

## 27. கெடுவான் கேடு நினைப்பான்.

ஒருகாலத்தில் விருகாசுரன் என்பவனுக்கு ஒரு பெரிய வரம்பெற வேண்டுமென்ற விருப்பமிருந்தது. அதனால் அவன் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தான்.

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டும் முயலப்படும்"

என்றார் திருவள்ளுவர்.

விருகாசுரன் நீரில் மூழ்கியும் நெருப்பில் நின்றும் நிலத்திற் கிடந்தும் நெடுநாள் சிவபெருமான் மேலேயே மனதைச் செலுத்தினன். அப்போது சிவபிரான் அவன் தவத்தை மெச்சி அவனுக் கெதிரில் நின்று "உனக்கென்ன வேண்டு" மென்று கேட்டார். அதற்கு அவன் "நான் எவன் தலையில் கைவைக்கின்றேனே அவன் இறக்க வேண்டும்" என்று கேட்டான். அப்படியே சிவபிரானும் வரங்கொடுத்தார். அதை விருகாசுரன் உடனே சோதிக்க விரும்பிச் சிவபிரான் தலையிலேயே கைவைக்கச்சென்றான். அப்போது சிவபிரான் அஞ்சியோடினர். விருகாசுரனும் அவரை விடாது நிழல்போலத் தொடர்ந்தான். சிவபிரான் எங்கெங்கே சென்றும் தப்பவழியில்லாமல் கடைசியில் திருமாலைச் சரணமடைந்தார். அப்போது திருமால் ஒரு பிரமசாரி வேடங் கொண்டு விருகாசுரனை நோக்கி, ஓ! அசுர! நீ ஏன் வீணாக அலைகின்றாய்? சிவனுக்கு வர மளிக்கத் திறமுண்டா? திறமிருந்தால் இப்படியேன் உனக் குத் தப்பித்துத்திரியவேண்டும்? வரமளிக்கவல்லவன் அதைமீட்கவும் மாட்டானா? வெகுநாள் அவமாகத்தவஞ் செய்து நீ ஒன்றை வேண்ட அவனும் அவமானத்திற் கஞ்சி அளித்தேன் என்றிருப்பான். இதை நீ மெய்யென்று கொள்ளாதே. அவன் உன்னை ஏமாற்றப்பார்த்தான். நீ அவனை ஏமாற்றுகிற செய்தி முன்னமே அவனுக்குத் தெரிந்திருக்குமாயின் அவன் உனக்குத் தென்பட்டிருக்கவே மாட்டான். இப்போது என் சொல் உனக்கு ஐயத்திற்கிட மாயின் உன் தலையிலேயே நீ கைவைத்துப்பார். அப்போது அது மெய் யென்று விளங்கும்" என்று தந்திரமாய் அவன் தலையிலேயே கைவைக்கச் செய்தார். அவன் உடனே இறந்தான். இதை இன்னொரு விதமாய்ச் சொல்வது முண்டு. அது வைணவர்க்கு உடன்பாடன்றாம்.

சிவபிரானை விருகாசுரன் கையினின்று விடுவித்தது திருமாலாயினும், திருமாலே கண்ணபிரானாய் அவதரித்தாராதலின் திருமால் செய்ததும் கண்ணபிரான் செய்ததும் ஒன்றென்றே எண்ணப்படும்.

## 28. இருப்புலக்கை.

பாரதப் போருடன் பூபாரம் பெரிதுந் தொலைந்தது. யாதவர் மட்டும் மீந்திருந்தனர். பூமியில் மனுஷர் பெருகுவதினால் அநேக தீமைகள் உண்டாகும். அடியார்க்குக் கெடுதிவாராமற் காப்பது கடவுளின் கடமை. உழவர் பயிரை வளர்ப்பதற்குக் களைகளைக் களைவார். களைகள் இல்லாதவிடத்துப் பயிர் அடர்த்தியாயிருப்பின் பயிரையுங்களைவார். அதுபோலக் கடவுளும் நல்லோரைக் காத்தற்குத் தீயோரை அழிப்பார். தீயோர் அசுரரும் அரக்கருமாவர். தீயோரில்லாவிடத்தும் மக்கட்பெருக்கு மிக்கிருப்பின் அதைக் கடவுள் மட்டுப்படுத்துவார். பாரதப்போரில் பல நல்லார் மாண்டதிற்கும் இதுவே காரணம்.

இனி, பயிர் வளர்ந்துவிளைந்தபின்னும் அறுப்புண்பதே பயன். அதனாற் கண்ணபிரான் யாதவரை அழித்து முன்போல் விண்ணுக்கனுப்பக் கருதி விசுவாமித்திரர் துர்வாசர் முதலிய முனிவர்களைத் துவாரகைக்கு விடுத்தார். உடனே முனிவர்கள் துவாரகைக்கு அருகிலுள்ள பிண்டாரதீர்த்தஞ் சென்றார்கள். அங்கே யதுகுமாரர் சாம்பனுக்குக் கருப்பிணி வேடம்போட்டு முனிவர்கட்கு முன் நிறுத்தி "ஓ! முனிவர்காள்! இவள் வயிற்றிலிருக்குங் கரு ஆணா? பெண்ணா? எதுவென்று சொல்லும்?" என்று அவமதித்தனர். அப்போது முனிவர்கள் "அது ஆணுமில்லை பெண்ணுமில்லை. உங்கள் குலத்தை யழிக்கும் ஒரு உலக்கை" என்றார்

கள். அப்படியே அவன் வயிற்றில் ஒரு உலக்கையிருந்தது. அதை உக்கிரசேன மன்னன் பொடியாக்கிப் பிரபாச தீர்த்தக் கடலிற் போடுவித்தான். அப்பொடிகள் கரையில் ஒதுங்கிக் கோரைகளாய் முளைத்தன. அப்பொடிகளில் ஒரே ஒரு இருப்புத்துண்டுமட்டும் எஞ்சியிருந்தது. அது கனத்தினால் கடலில் அமிழ்ந்தது. அதை ஒரு மீன் விழுங்கிற்று. அம்மீனைச் சரன் என்னும் வேடன் பிடித்து அதன் வயிற்றிலிருந்த இருப்புத்துண்டை யெடுத்துத் தன் அம்பின் நுனியிற்பொருத்திக் கொண்டான்.

சிலநாட்சென்று துவாரகையில் பலதீக்குறிகள் தோன்றின. அப்போது கண்ணபிரான் தமக்குக் காலம் நெருங்கின தென்று கண்டு யாதவரை யெல்லாம் கூட்டிக்கொண்டு பிரபாசதீர்த்தம் போனார். அங்கே யாதவர் விதியினால் மதியிழந்து மதுவுண்டனர். சிறிது நேரத்தில் வெறிகொண்டு அங்கிருந்த கோரைகளைப் பிடுங்கிக் குரங்குகளைப் போல ஒருவரை யொருவர் சரமாரியாய் அடித்துக் கொன்றனர். முனிவர் யதுகுலத்திற்கு இட்டசாபம் கட்டியது.

பலராமர் கடற்கரையில் யோகிருந்து பரமனுடன் கலந்தார்.

---

## 29. ஜரன்சரம்.

யாதவர் மாய்ந்தபின், துவாரகைவாசிகளை இந்திரப் பிரஸ்தத்திற்குக் கொண்டுபோம்படி கண்ணபிரான் தம் சாரதியாகிய தாருகன் என்பவனுக்குக் கட்டளையிட்டார். அவன் கண்ணபிரானுக்கு நேர்வதையுங்காணும்பொருட்டுக் காலந்தாழ்த்தான்.

கண்ணபிரான் தம் கடமை முடிந்ததென்று ஒரு மரத்தடியில் யோகத்தில் அமர்ந்தார். அப்போது ஜரன் என்னும்

வனசரன் அவர் பாதத்தை மான் முகமென்று மதித்து ஒரு சரத்தை (அம்பு) எவினன். உடனே அவர் தம் கண்களை மூடிக்கொண்டு வைகுந்தஞ் சென்றார். அவர் சென்றது மின்னலைப்போல வெளிச்சமாகவும் வேகமாகவும் இருந்தது. அதைப்பார்ப்பதற்காகச் சித்தர், சாரணர், யக்ஷர், கந்தருவர் முதலிய பதினெண் கணத்தாரும் வந்திருந்தனர். வானவர் ஆடினர். கானவர் பாடினர். பூமழை பொழிந்தது. பூமியும் மகிழ்ந்தது.

பின்பு தாருகன் துவாரகைக்குச் சென்று பிரபாச தீர்த்தத்தில் நடந்த பெருமோசத்தையெல்லாம் விரிவாகச் சொன்னன். உடனே மாதரெல்லாம் பிரபாசதீர்த்தம் போய் யாதவரைக் கண்டதும் பெருமூச்செறிந்து விழுந்தனர். சற்றுநேரம் கழித்து எழுந்தனர். தத்தம் கணவரைக் கட்டித்தழுவினர். முட்டியழுதனர். உருண்டும் புரண்டும் ஓயாது புலம்பினர். கடைசியில் கூடன் கட்டையேறி உயிரையும் விட்டனர். யாதவருக்கும் மாதவனுக்கும் நேர்ந்ததை அர்ச்சுனன் அறிந்ததும் அறிவழிந்தான். உடனே பிரபாசம் சென்று கண்ணபிரானைக் காணது பெரிதுங் கலங்கினன். பின்பு யாதவர்க்கெல்லாம் ஈமக்கடன் முடித்துத் துவாரகை வாசிகளையும் இந்திரப்பிரஸ்தத்திற் குடியேற்றினன்.

உடனே துவாரகையும் கடலில் மூழ்கிற்று.

கண்ணபிரான் முன்போல் வைகுந்தத்தில் திருமாலாயிருந்து வைபவஞ்செய்தார். கம்சனும் சிசுபாலனும் வாயிற் காவலராயினர். யாதவரும் தேவராய் அவரவரிடத்திலமர்ந்தனர்.

## 30. வைகுந்த வைபவம்.

வைகுந்தமென்பது பரலோகத்தில் திருமால் வைகுந்தலம். திருமாலுக்கு ஐந்துவகையான வடிவங்களுள. அவை பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சையென்பன.

அவற்றுள் பரத்துவம் என்பது பரமபதநிலை. அதுவே வைகுந்தம். வியூகமென்பது வாசுதேவன், சங்கருடணன். பிரத்தியும்நன், அநிருத்தன் என நாற்பால் வடிவில் பாற்கடலிருத்தல். விபவமென்பது இராமகிருஷ்ண அவதாரங்கள். அந்தர்யாமித்வம் என்பது அனைத்தினும் இரண்டறக் கலந்திருத்தல், அல்லது யோகியர் உளத்தில் கூடியிருத்தல். அர்ச்சையென்பது திருவரங்கம் முதலிய திருப்பதிகளில் விக்ரக வடிவாய் வீற்றிருந்தருளல்.

கண்ணபிரான் தம் விபவம் முடிந்ததும் பரத்துவம் அடைந்தார். விபவம் அவதாரகால மட்டும் உளது. அர்ச்சை உலகுள்ளவரை யுளது. ஏனை மூன்றும் என்றும் உள்ளன. அவற்றுள், பரத்துவமே சிறப்புடையது.

அர்ச்சையும் விபவமும் பெத்தருக்கும் அடுத்த மூன்றும் முத்தருக்கும் பயன்படுபவை. பெத்தர் பாசபந்தப் பட்டவர். முத்தர் பாசபந்தம் விட்டவர். முத்தியென்பது வீடு.

> "ஈதலறந் தீவினைவிட் டீட்டல் பொருளெஞ்ஞான்றுங்
> காதல் மனையாளுங் காதலனும்—தீதின்றிப்
> பட்டதே யின்பம் பரனை நினைந்திம் மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு." —ஔவையார்.

வீடு, விடுதலை, முத்தி, மோக்ஷம், பரமபதம், வைகுந்தம் என்பன ஒரு பொருட்சொற்கள்.

எல்லாவுலகங்களும் பரலோகம், பூலோகம், பாதாளம் என மூன்று பேருலகங்களாயடங்கும். ஒவ்வொரு பேருல

கமும் ஏழேழு சிற்றுலகங்களாய் வகுக்கப்படும். பர லோகம் மேலும் பூலோகம் இடையும் பாதாளம் கீழுமிருக்கும். அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகா தலம், பாதலம் என்பவை பாதாளப் பிரிவாகிய கீழேழுலகம். இவற்றை ஆதிகூர்மம் தாங்கிக் கொண்டிருக்கும். கிரௌஞ்சம், குசை, சான்மலி, சாகம், சம்பு (நாவல்), பிலட்சம், புஷ்கரம் என்னும் எழுதீவுகளும் பூலோகப் பிரிவாகிய இடையேழுலகம். இவை இந்திரம், கசேரு, தாமிரபருணம், கபஸ்திமான், நாகம், சவுமியம், காந்தருவம் வாருணதம், பாரதம் என நவகண்டங்களாகவும் வகுக்கப்படும். இவற்றுள், இமயம், மந்தரம், கைலை, விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என எட்டுக் குல கிரிகளுள. இவற்றையெல்லாம் ஆதிசேஷன் தன் ஆயிரந் தலைகளாலும் தாங்கிக் கொண்டிருப்பான்.

பூலோகத்தைச் சூழப் பிரமாண்டமும் பெரும் புறக் கடலும் சக்கரவாளக் கோட்டமும் முறையேயிருக்கும். பூலோகத்திற்கு மேற்பட்டது சூரியமண்டலம். சூரிய மண்டலத்திற்கு மேல் புவர்லோகம், சுவர்லோகம், ஜன லோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம், என ஆறுலகங்களுள. இவை மேலேழுலகங்களைச் சேர்ந்தவை. இவற்றிற்குமேல் ஒரு பெரிய அந்தகார வெளியிருக்கும். அதற்கு நாலுகோடி யோசனை தூரத்துக்கப்பால் சிந்தை யும் மனமுஞ் செல்லா நிலைமைத்தாகிய வைகுந்தமிருக்கும்.

"தொல்லைக் கமடத்தல நவகண்டந் தொடுகடல்நீர்
எல்லைக் கிரிதனக்கிப் புறத்தெண்கிரி யப்புறத்தின்
மல்லைப் பரிதியின் மண்டல நாக மவ்வான்முகட்டூர்
அல்லைப் புறத்து வைகுந்தம் பொற்கோயிலரிக்கிடமே."

என்றார் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும்.

வைகுந்தவாயிற்படியில் விஷ்வக்சேனர் என்னும் சேனை முதலியோர் கோலுங்கையுமாய் நின்று, திருமாலைத் தரிசிக்கு மாறு நெருக்கிக் கொண்டிருக்கும் தேவர் திரளையெல்லாம் இடையறாது அடித்து விலக்கிக் கொண்டே யிருப்பார். அப்போது அவர் அடிகளில், தேவர் தமது முடிகள்பட விழுவார், எழுவார், தொழுவார்.

“ஆளிலமார் அரங்கேசர் சேவைக் கணுகுந்தொறுங்
கோளிற்றிரளை விலக்கும் பிரம்பின் கொனைபடலாற்
றோளிலடித்தழும் புண்டச் சுரர்க் கச்சுரர் தொழலாற்
றாளின் முடித்தழும்புண்டு நஞ்சேனைத்தலைவருக்கே.”

என்றார் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

வைகுந்தத்திற்குள் புகுந்தால் கோடானுகோடி சூரியப் பிரகாசமுள்ள நித்திய சூரியர் நிறைந்திருப்பார். அவரை ஊனக்கண்கள் ஒருபோதுங் காணா. அவருக்கப் பால், ஞானக்கண்ணாலுங் காணமுடியாத ஜோதிப்பரஞ்சுடராகிய திருமால், பூமாதும் புவிமாதும் இருமருங்கும் பொருந்த, ஓர் இணையற்ற மணிமண்டபத்தில் மரகதமலை போல் அரவணையில் அமர்ந்திருப்பார். அவர் தமது நாற் கரங்களிலும் சுதரிசனம் என்னும் சக்கரமும் பாஞ்சசன்யம் என்னும் சங்கும் சாரங்கம் என்னும் வில்லும் நாந்தகம் என்னும் வாளும் கௌமோதகி யென்னும் தண்டமுமாகிய ஐம்படைகளையு மணிந்திருப்பார். அவர் அமர்ந்திருக்கும் மண்டபத்தில் மரகதம், பவளம், நீலம், கோமேதகம், வைரம், வயிடூரியம், மாணிக்கம், முத்து, புஷ்பராகம் என்னும் நவமணிகளும் பலவகையாய் ஒளி வீசும்.

திருமால் முன்னிலையில் அனந்தர், கருடர், முதலிய நித்தரும் முத்தரும் அமர்ந்திருந்து இடைவிடாது எத்தியும் இறைஞ்சியும் போற்றி செய்வர். அவர் உடல்கள் எல்லாம்

சுடர்போல ஒளிவிடும். சூரியனை யடுத்த சந்திரன் விளங்குவதுபோல முகுந்தனை யடுத்த முத்தரும் விளங்குவர்.

வைகுந்த வாணர்க்கெல்லாம் ஒருக்காலும் பிறப்புமில்லை, இறப்புமில்லை; துன்பமில்லை, தூக்கமில்லை; பசியில்லை, பட்டினியில்லை ; தாகமில்லை, சோகமில்லை ; உழைப்பில்லை, களைப்பில்லை; இருளில்லை, மருளில்லை; விருப்பில்லை, வெறுப்பில்லை ; குலமில்லை, கோத்திரமில்லை; என்றும் இடையறாத இன்பமே நிறைந்து நிற்கும். அதை இன்னவிதமென்றுரைக்க எவர்க்கும் இயலாது.

"எந்தவுலகத்து மேலது நித்தியவின்பத்தது
பந்தநசிப்பது நித்தரும் முத்தரும் பாரிப்பது
முந்தை மறையினின் றல்லாதெத் தேவர்க்கு முன்னவரி
தந்தமில தாங்கன் மேவுவைகுந்த மானதுவே."

என்றார் பிள்ளைப்பெருமாளையங்கார். காலம் எப்படி அழியாதோ, அப்படியே வைகுந்தமும் அதன் வாணரும் அழிவதில்லை.

ஆன்மாக்களெல்லாம் முத்தியை யடையவேண்டுமென்பதே முகுந்தன் ஆவல். பிறவித்துன்பம் பெரிதாயிருப்பதால் அடியார்பலர் புதிது புதிதாய் வைகுந்தமடைந்து கொண்டேயிருப்பர். அதனால் முத்தர் தொகையும் மிகுந்து கொண்டேவரும். எத்தனைபேர் முத்தரானாலும் அங்கு ஏராளமான இடமுண்டு. பற்றறுத்தார்க்கெல்லாம் பரமபதப்பேறு திண்ணம்.

"பிறந்தோ ருறுவது பெருகியதுன்பம்
பிறவா ருறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோ ருறுவதறிக."

—சீத்தலைச் சாத்தனார்.

முற்றிற்று.

*Copies can be had from*

Mr. D. MANICKAM PILLAI,

Dwaraka Publishing House,

MANNARGUDI.